Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

APRIL 2011

# நாழிகை

NAZHIKAI
London

International Tamil Newsmagazine



லிபியா:

அரபு, ஆபிரிக்க நாடுகளின் அஸ்தமனம்

## மேற்கில் உதிக்கும் சூரியன்?



உலகின் தலைசிறந்த மூலிகைப் பொருட்களின் பிறப்பிடம் கேரளாவிலிருந்து ...
Dhathri
Herbal Products
இப்போது UK & Europe தமிழ்க்கடைகளில்
Dhathri Products
The Best Herbal Health & Beauty Products
Dhathri Dandruff Oil
£5.99
Dhathri Hair Care Herbal Oil
£4.99
Dhathri Chempakam™ Skin Care Soap
With Chempakam extract for freshness & purity
2 for £1
Dhathri Diavitta
£5.99
Chemparathi Thaali
£2.99
Dheedhi Shampoo
£2.49
Real Slim Oil
£9.49
Dhathri Dhin™ Skin Care Soap
All day protection
2 for £1
Dhathri Fairness Face Pack
£3.99
Dhathri Fair skin cream
Nourishing Ayurvedic cream for fairness & complexion.
£3.99
தொடர்புகளிற்கு
080 0027 6555

# Call India

+ MOBILE

# 1p/min



CALL FROM YOUR EXISTING LANDLINE OR MOBILE

GUARANTEED MINUTES 100% MINUTES

- ✓ No Connection Charges
- ✓ No Maintenance Charges
- ✓ No Hidden Charges
- ✓ No Expiry Date

| Srilanka + Mobile | Malaysia Landline | Singapore / USA & Canada / Europe (from) + Mobile |
|---|---|---|
| 5 p/min | 1 p/min | ½ p/min |

CALL NOW ON :

**0800 652 7566 / 0207 132 9999**

Or visit www.lycatalk.com

Rates correct at the time of printing on 01/02/2011. For all Terms and Conditions visit www.lycatalk.com .Customer Services 02071329999 or 08006527566The Lycatalk international calling card service is provided by Lycatel Services Ltd. and provided are distributed by Lycatel Distribution UK Ltd. Call rates shown above are based on calls placed using the Lycatalk 0207 access numbers from the UK to landline and mobile telephones in the destinations above. For full rates to all destinations and mobile telephone numbers , please visit www.lycatalk.com or contact our customer services team on 02071329999 or 08006527566. Before connecting your call, a voice prompt will inform you of the rate you are paying per minute from your Lycatalk account . Calls using this service are rounded up in one minute intervals. Calls using our 0800 access numbers incur a surcharge of 1p per minute charge. Payphone providers pass on significant costs and incur a 15p per minute surcharge and are not recommended for this service. You should contact your telecoms provider quoting a Lycatalk access number you wish to use for this service to ensure you are aware of their charges, if any. Calls to 0845 or 0871 access numbers are typically considerably higher than calls placed to 0207 access numbers. Mobile telephone can cost considerably more if you use lycatalk access numbers outside of your mobile provider's inclusive minutes allowance.

payzone

talk Lyca



DEEPAM TELEVISION
Darbar
In Partnership with
presents
a Special Fusion - Jazz Concert
'FUSION DREAMS'
by
Dr.Jyotsna Srikanth
on Electro Acoustic Violin
(Indian Classical and World Fusion Violinist)
with
Padmashri Sri Kadri Gopalnath
on Saxophone
(South Indian classical saxophone maestro)
Presenting South Indian, Light Classical, World Fusion & Popular Film Music
Along With
Shadrach Solomon
(Bangalore, India)
Keyboards
Eddie Drumz
Drums
Jamie
Bass Guitar
Bangalore V Praveen
(India)
Mridangam
RR Prathap
Ghatam
P. Sithamparanathan
Tabla, Morsing
Nishanth Rajkumar
Special Percussion
Venue
The Great Hall
Hatch End High School
16 Headstone Lane,
Harrow HA3 6NR
Date / Time
30.04.2011
18:30 to 22:00 hrs.
(Saturday)
Dialog
VIZZ MOBILE
0207 177 2000
Western Jewellers
Wembley
Tooting
PUJA SILK HOUSE
Niru
Quality - Taste - Value
LAKSHMIS Jewellers
SRI MURUGAN TRAVELS
RUBY'S Catering
'FUSION DREAMS'
"Come and Enjoy the Experience Of Fusion Dreams Presented Differently, and Specially For Londoners"
Little Asia EMPORIUM
Tharani Jewellery
No.54, Ealing Road, Wembley Middlesex HA0 4TQ
Tel:020 89027111
89029777
RISING SUN
020 8422 2575
07818 433 828
THINESH
JEWELLERS & TEXTILES
276 Lewisham High Street, Lewisham
London SE13 6JZ
Tel : 020 8613 9569
Niru
TEL : 0208 814 6565

00919042597889
அப்பா போன் நம்பர்

0779658279
அம்மா போன் நம்பர்



10 | இலங்கை
**ஆட்சிப் பலமா; அதிகார பலமா?**

12 | இலங்கை
உலக கிண்ண கிரிக்கெட் போட்டி
**இலங்கை ஜனாதிபதி புறக்கணிக்கப்பட்டாரா?**

14 | இந்தியா
தமிழ்நாடு தேர்தல்
**எரிகின்ற கொள்ளியில் நல்ல கொள்ளி எது?**

16 | இந்தியா
**ஜனநாயகத்தின் நடுநாயகம் பணம்**

22 | உலக விவகாரம்
அரபு உலகில்
**மலரும் மக்கள் புரட்சிகள்**

40 | கலை
**ஈழத்து இசை லயம்**

26 | உலக விவகாரம்
யப்பான்
**இயற்கை எனும் மகா சக்தி**

30 | உலக விவகாரம்
சோமாலி
**கடற்கொள்ளையரின் அதிகரிக்கும் அச்சுறுத்தல்**




18 | அட்டை செய்தி
லிபியா
**மேற்கில் உதிக்கும் சூரியன்?**

42 | சிறுகதை
**சுமார் பத்தினி**

34 | விளையாட்டு - கிரிக்கெட்
**ஒரு தேசத்தின் கொண்டாட்டம்**



46 | சினிமா
**எந்த விதியை உடைக்கிறார் வாசுதேவ் மேனன்?**




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933
Vol: VI, No: 2
**Editor:** S Mahalingasivam
**Published by:**
Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105**
**Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com

**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6
**Tel: 416 613 2770**

**Anual Subscription** (12 issues): **UK** £22.00 **Europe** £30.00
**Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# ஜோர்ஜ் புஷ் அடிச்சுவட்டில்

சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாக தெரிவித்து, அதனை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்துடன் ஈராக்குக்குள் நுழைந்த அமெரிக்க - பிட்டிஷ் கூட்டு படைகள், சதாம் ஹுசைனின் ஆட்சியையும், அவரையும் ஒழித்து திரும்பின. அதனை நியாயப்படுத்த ஐ.நா.வின் தீர்மனம் 1441க்கு பல்வேறு வியாக்கியானங்களை அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயரும் தேடினர். அதேவிதத்தில், இப்போது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோனும் லிபியா தொடர்பான ஐ. நா. தீர்மானத்துக்கு வியாக்கியானங்களை தேடுவதில் தீவிரமாகியிருக்கிறார்கள்.

1973இல் ஏற்படுத்தப்பட்ட லிபியா தொடர்பான ஐ. நா. தீர்மானம், லிபிய மக்களுக்கு பாதுகாப்பளிக்கும் நடவடிக்கைகளைமட்டும் அங்கீகரிக்கின்றபோது, அங்கு கேணல் கடாபியை பதவியிலிருந்து அகற்றி, ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வகையில் இவர்கள் இப்போது அத் தீர்மானத்தில் நடவடிக்கைகளுக்கு முயல்கிறார்கள். இதில், அமெரிக்கா, பிரிட்டனுடன் பிரான்சும் இணைகிறது.

துனிசியா, எகிப்து ஆகிய அரபு நாடுகளில் ஏற்பட்ட 'வசந்தத்தை'ப்போல லிபியாவிலும் எளிதாகவே அதனை மலர வைத்துவிடலாமென்ற நினைப்பில், கேணல் கடாபியின் படைகளது வான் தாக்குதல்களிலிருந்து லிபிய மக்களைக் காப்பாற்றும் விதத்தில், லிபிய வான் பரப்பை தடைசெய்வதற்காக மட்டுமென்றே அமெரிக்காவும் பிரிட்டனும் அங்கு படையணிகளை அனுப்பின. ஆனால், அங்கு எதுவுமே நினைத்தபடி நடக்கவில்லை. முக்கிய எண்ணெய்வள நகரங்களான பிரேகா, றஸ் லனுவ் ஆகியவற்றை தீவிரவாதிகளிடமிருந்து கடாபியின் படைகள் மீளக் கைப்பற்றியதையோ அல்லது மிஸ்றற்ரா நகரின் முற்றுகையையோ 'நேட்டோ' படைகளின் வான் தாக்குதலால் தடுக்கமுடியவில்லை.

அமெரிக்கா, பொறுப்பை நேட்டோ அமைப்பிடம் கையளித்துள்ளபோது, நேட்டோ நாடுகளின் முழுமையான பங்களிப்பு இதில் கிட்டவில்லை. 28 அங்கத்துவ நாடுகளில் 14 நாடுகளே ஒத்துழைப்பு நல்கின்றன. அதிலும், ஆறு நாடுகளே தாக்குதல் விமானங்களை அளித்திருக்கின்றன.

இப்பொழுது வெளிப்படையாகவே, லிபியாவில் கேணல் கடாபியை பதவியிலிருந்து அகற்றி, அங்கு ஓர் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த இந் நாடுகள் முயல்கின்றன. எனினும், அதற்கான ஓர் அங்கீகாரம் ஐ.நா. தீர்மானத்தில் இல்லாத நிலையில், மற்றுமொரு ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்ற இயலாத நிலையும் இருக்கிறது. ஐ. நா. பாதுகாப்புச்சபையில் 'வீட்டோ' அதிகாரத்தைக்கொண்ட ரஷ்யாவும் சீனாவும் லிபியாமீதான இந் நடவடிக்கையை எதிர்ப்பதால், அத்தகைய ஒரு தீர்மானத்தை இந் நாடுகள் நிச்சயமாக எதிர்க்கும். இதனால், 'லிபிய மக்களின் நலனுக்காக கடாபி கட்டாயமாக பதவி விலகவே வேண்டும்' என்ற நிலைப்பாடு முன்வைக்கப்படுகிறது. இதற்கு அநுசரணையாக, சர்வதேச குற்ற நீதிமன்றம் கடாபிமீதான விசாரணைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதாகவும் பேச்சுக்கள் எழுகின்றன.

இந்நிலையில், பென்காசியைத் தளமாகக்கொண்ட தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்க சில நாடுகள் ஆலோசனை தெரிவிக்கின்றபோது, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள், ஒழுங்கமைப்பற்ற அத் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்குவதைவிடவும், கடாபியின் ஆட்சியை நிர்மூலமாக்கும் விதத்தில் லிபிய இராணுவ கேந்திரங்கள்மீது அதிகரித்த பலமான தாக்குதல்களை நிகழ்த்த விரும்புகின்றன. அது மாத்திரமன்றி, சிறிய அளவில் இராணுவத்தை தரையிறக்கவும் இந் நாடுகள் தீர்மானிக்கின்றன. இதனை வெளிப்படுத்தும் விதத்தில் பிரிட்டிஷ் இராஜாங்க செயலாளர் வில்லியம் ஹேஹ் "பெரிய அளவில் தரைப்படையினர் பயன்படுத்தப்படமாட்டார்கள்'' என்று சூசகமாக தெரிவித்திருக்கிறார்.

இதேசமயம், பாராளுமன்ற அங்கீகாரமின்றி லிபிய விவகாரம் கட்டுமீறி செல்வதாக தெரிவித்து பிரிட்டனில் ஆளும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்ற விவாதத்துக்கு கோரியிருக்கிறார்கள்.

இராணுவம் அனுப்பப்படுவதை அதிபர் ஒபாமா பெரிதும் சம்மதிக்காவிடினும், லிபியா விவகாரத்தில் முன்னைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷையே அவர் தன்னையும் விஞ்சி பின்பற்றுவதாக கண்டனங்கள் எழுகின்றன.

லிபியாவில் ஆட்சி மாற்றத்துக்கான அங்கீகாரம் ஐ. நா. வினால் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கும் ரஷ்யா, லிபிய நெருக்கடிக்கு பிராந்திய ரீதியில், குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் ஒன்றியத்தின் அனுசரணைனுடான ஒரு தீர்வே காணப்படவேண்டும் என்று தெரிவிக்கிறது.

தன்னுடைய நலனுக்கு எதிரான எந்த நாட்டு ஆட்சியாளரையும் அகற்றிவிடும் அமெரிக்க கொள்கையையும், அதற்கு ஐக்கிய நாடுகள் சபை துணைபோவதையுமே லிபியா உணர்த்துகிறது என்று முத்தாய்ப்பு வைக்கிறார்கள் சில அவதானிகள்.


Nalli
80
YEARS
SINCE 1928
First and the Finest
Nalli®
பைரவி
கலெக்ஷன்
Code No.BH09001
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com
• சென்னை • பெங்களூரு • கோயம்புத்தூர் • தில்லி • ஐதராபாத் • மதுரை • மும்பை • திருச்சி • திருநெல்வேலி • சிங்கப்பூர் • USA



ஊழல் - கூடலில்
காங்கிரஸ் - தி. மு. க.

கட்டாய
கல்யாணத்தில்
ஜெயலலிதா

# அந்த மேடையில் இந்த நாடகம்

**தேர்தல் மக்களுக்காக என்ற நிலைமை தொடக்கத்திலிருந்தே இல்லாமல் போய்விட்டது. ஆனால், மக்களுக்காக என்ற அதே நாடகம், வெவ்வேறு பாத்திரங்களுடன் மாறுபட்ட வசனங்களுடன் நடந்துவருகிறது**

தமிழ் நாட்டின் சட்டமன்றத் தேர்தல் பரபரப்பு ஏப்ரல் 13ஆம் தேதிவரை இருக்கும். தேர்தல் ஒழுங்காக நடைபெற்றால் ஒரு மாதம் அமைதி தொடரும். பிறகு, மே 13 முதல் ஒருவார காலம் மறுபடியும் பரபரப்பு. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போகுமா என்ற சந்தேகம் இப்பொழுது முதல் முதலாக எழுகிறது. ஆளும் கட்சி, ஆண்ட கட்சி இரண்டுமே ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவை அல்ல. பிற பெரிய, சிறிய கட்சிகள் இந்தக் கட்சிகளின் ஒட்டுப்புல்கள்.

ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த அரசியல் போக்குப்படி வாக்காளர்கள் விரக்தியுடன் சொன்னது: “என்னதான் இருந்தாலும் தி. மு. க. தான் வரப்போகிறது. அது காசால் அடித்துவிடும். அங்கே இல்லாத காசா?'' ஆனால், ஸ்பெக்ரம் விவகாரத்தில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று குற்றம் சாட்டிய எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தை முடக்கியதும், வேறு வழியில்லாமல் அமைச்சர் ஆண்டிமுத்து ராசா ராஜிநாமா செய்தார்.

ராஜிநாமாவுடன் விஷயம் முடிந்தது. இன்னொரு தி. மு. க. அமைச்சர் பதவியேற்பார் என்ற ஊகங்கள் உலவிய போது, அந்தத் துறைக்கு கல்வி அமைச்சரான கபில் சிபில் பொறுப்

பேற்றார். இவர் ஒரு பெரும் வழக்கறிஞர். ஸ்பெக்ரம் விவகாரத்தில் ஊழல் எதுவும் இல்லை என்று, ஒட்டகத்தைக் கடுகுக்குள்ளே மறைத்தார். ஆனால், பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க), கம்யூனிஸ்ட் கட்சிகளின் எதிர்ப்பினால் அந்த விவகாரத்தில் சிபிஐ (*Central Bureau of Investigation* என்பது சாசனப் பெயர் - *Congress Bureau of Influence* என்பது காரணப்பெயர்) நுழைய, ராசாவுக்கும் தி. மு. க. வுக்கும் பிடித்தது கேடு. சிபிஐ விசாரணை; ராசாவின் கைது; பிற நபர்கள் கைது; தொழில் முதலைகளிடம் விசாரணை; ராசாவின் பணப் பெட்டியாக கருதப்பட்ட சாதிக் பாஷாவிடம் விசாரணை; அடுத்து அவர் மர்மமான முறையில் உயிரிழந்தது; பிரேத பிரசோதனை செய்த டாக்டரின் ராஜிநாமா என்று திகில் தொடர், தேர்தல் காரணத்தினால் சற்றே மந்தமாக நகர்கிறது.

மந்திரி ராசா வெறும் எம். பி. ராசா என்றானதுமே, தி. மு. க. வின் செல்வாக்கு ஆட்டம் காண ஆரம்பித்தது. (மந்திரியாக இருப்பவர் ஜெயிலுக்குப் போனால் எம். பி. பதவியும் காலி என்ற சட்டம் வராதோ?) இனி, தி. மு. க. தேர்தலில் ஜெயித்து வருவது கஷ்டம் என்றே கருதப்பட்டது.

தி. மு. க. - காங்கிரஸ் ஊடல் - கூடல் காட்சிகள் மாறிமாறி வந்தன. தி. மு. க. வுடன் காங்கிரஸ் கூட்டு சேராவிட்டால் ஸ்பெக்ரம் ஊழலின் மொத்தப் பழியும் தி. மு. க. மீது விழும்; காங்கிரஸ் அதற்கான வேலைகளைச் செய்துவருகிறது என்று பேசப்பட்ட நேரத்தில், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. அப்போது கூட்டணி உடன்பாடு முற்றுப் பெறவில்லை. தேர்தலை உடனே அறிவிப்பதற்கு என்ன அவசரம்; எங்களை காங்கிரஸ் மிரட்டுகிறதா என்ற தொனியில் ஆனால், அந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல் சாமர்த்தியமாக அறிக்கை விடுத்தார் தி. மு. க. தலைவர்.

வேறு காரணங்களுக்காக தேதியை மாற்றவேண்டும் என்று பிற கட்சிகள் கேட்டுக்கொண்டன. ஆனால், தேர்தல் கமிஷன் அசைந்து கொடுக்கவில்லை. தேர்தல் கமிஷன், மத்திய அரசு, சோனியா காந்தி என்று மூன்றையும் இனம் பிரித்துப் பார்த்து, இந்திய மகாராணியின் மாட்சிமையைக் குறைத்து விடாதீர். அது இந்திய குடியுரிமைப் பண்புக்கு அழகல்ல. தேர்தல் தேதி மாற்றப்பட முடியாதது என்று ஆணையம் சொல்லிவிட்டது. (இதுதானே வேண்டாம் என்கிறது; திரும்பவும் கேட்கிறீர்களே எந்த ஆணையம்? என்று. அது இத்தாலிய ஆணையமா, இந்திய ஆணையம்தானய்யா.)

காங்கிரஸ் அழுத்தமாக சாதித்துக் கொள்ள விரும்பியது. கட்சியின் தலைமைவசம் பல ஏவுகணைகள் இருக்கின்றன. 'நாங்கள் 60 இடங்கள் தர முன்வந்தோம். காங்கிரஸ் 63 கேட்கிறது. அதனால் கூட்டணி முறிகிறது. மத்திய அரசிலிருந்து தி. மு. க. விலகுகிறது, அமைச்சர்கள் ராஜிநாமா' என்று பேர நாடகத்துக்கு 'கிளைமாக்ஸ்'கொண்டுவந்தார் கருணாநிதி. கருணாநிதியின் திரைப்படத் துறை அநுபவம் வாழ்க்கையில் விதவிதமாக நடிக்கக்கூடிய டெல்லிப் பெருந்தலைகளிடம் எடுபடவில்லை. இது காகிதப் புலியின் உறுமல் என்று புரிந்துகொண்டு சும்மா இருக்க, ராஜிநாமா 'ராசி'யாகிப்போனது. காங்கிரசுக்கு 63 தொகுதிகளை தி. மு. க. தந்தது. அந்த வேட்பாளர்கள் '63 நாயன்மார்கள்'. இதை காங்கிரஸ் பயபக்தியுடன் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று பகுத்தறிவுவாதி கருணாநிதி மஞ்சள் துண்டு சரசரக்க நிவேதனம் செய்தார்.

ஒத்திகைப்படி, 'அடிப்பதுபோல் அடிக்கிறேன்; அழுவதுபோல் அழு' என்ற நாடகம் நடந்தது. கூட்டணி ஒப்பந்தத்தையும், தயாளு அம்மாள் - கனிமொழி ஆகியோரிடம் சிபிஐ விசாரணையையும் சேர்த்துப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். என்ன செய்வது, உங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. சட்டம் தன் வேலையைச் செய்கிறது - பணமும் தன் வேலையைச் செய்கிறது. எது முன்னால் வேலைசெய்தால் என்ன, எது பின்னால் வேலைசெய்தால் என்ன, இதற்கெல்லாம் கவலைப்படாதீர்கள். மக்களே, பணம் உங்களுடையதுதான் என்றாலும் உங்களுடையதல்ல. சட்டம் எப்படியும் உங்களுடையதல்ல. பணம் யாருடையது என்பதை தேடுவதில் சட்டம் ஜெயிக்குமா தோற்குமா என்பது உங்களுக்கும் எனக்கும் தெரியாது.

**காங்கிரசுக்கு 63 தொகுதிகளை**
**தி. மு. க. தந்தது.**
**அந்த வேட்பாளர்கள்**
**'63 நாயன்மார்கள்'.**
**இதை காங்கிரஸ் பயபக்தியுடன்**
**பெற்றுக்கொள்ளவேண்டும்**
**என்று பகுத்தறிவுவாதி**
**கருணாநிதி**
**மஞ்சள் துண்டு சரசரக்க**
**நிவேதனம் செய்தார்**

ஆனால், தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பே தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி பிரியாமல் போட்டியிடும் என்று விவரமறிந்த மக்களும் அரசியல் விமரிசகர்களும் சொல்லிவந்தார்கள். இவர்களுக்கு அவர்கள் தேவை; அவர்களுக்கு இவர்கள் தேவை என்ற கொள்வினை - கொடுப்பினை அவர்களிடம் இருந்தது. ஒருவர் காது மற்றவர் கையில். மற்றவர் வாய் ஒருவருக்காக - அந்த ஒருவரின் உறவுகளுக்காக மூடிக்கொள்கிறது. அல்லது, மூடவைக்கப்படும் என்று பயமுறுத்தப்படுகிறது. இருவரும் ஒத்துப் போகவேண்டிய நிலை தவிர்க்கமுடியாதது என்றே பலர் சொல்லிவந்தார்கள்.

ஆனாலும், முரண்டுபிடிப்பது போல நடித்து, தி. மு. க. வை எரிச்சலூட்டி, அவர்களே கூட்டணியிலிருந்து விரட் டிவிட்டாலும் நல்லதே என்று காங்கிரஸ் நடந்துகொள்வது போல் தோன்றியது. அப்படியானால், காங்கிரசின் 'கை' ஸ்பெக்ரம் ஊழலில் இருந்திருக்காதோ; ஒருவேளை தடயங்கள் மறைக்கப்பட்டிருக்குமோ என்ற இரண்டுவித எதிர்மறை எண்ணங்கள் எழுந்தபோது, 'ராசா வாயைத் தொறந்தா' என்ற திகில் இரு தரப்பையும் கட்டிப்போட, பழைய கூட்டணி தொடர்ந்து ஊடல் கூடல் ஆகியது. கூடல் சுவைப்பதற்காக அல்வாவும் மல்லிகைப்பூவும் வாங்கித் தரும் கணவர்கள்போல, காங்கிரசுக்கு தி. மு. க. மூன்று தொகுதிகள் தந்தது. அதற்காக மற்றைய இரு கூட்டணிக் கட்சிகளிடமிருந்தும் தலா ஒரு தொகுதியைப் பெற்றது. தொகுதிகள் தந்ததும் வாங்கியதும் நாடகத்தில் நமக்குத் தெரியவந்த காட்சிகள். ஒத்திகைக் காட்சிகளின் வசனங்கள் நமது காதில் விழவில்லை. ஆனால், ஊகிக்கமுடியும்.

இந்த நிலையில் மக்களிடம் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி முன்புபோல் வெற்றிபெறுமா என்ற சந்தேகம் வந்தது. காரணம், ஊடல் - கூடல் அல்ல. ஊழலில் கூடல். இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்தி உடனடியாக பிரச்சாரத்தை உச்ச கட்டத்துக்கு கொண்டு போயிருக்கவேண்டிய பொறுப்பு அ. இ. அ. தி. மு. க தலைவி செல்வி ஜெயலலிதாவிடம் இருந்தது. ஆனால், அவர் அதை உரிய நேரத்தில், உரிய முறையில் செய்யவில்லை. அவர் கடவுளின்

குழந்தை அல்லவா? தப்பு, தப்பு; கடவுளின் அவதாரம் அல்லவா? அவர் அப்படித்தான் நினைத்துக்கொள்கிறார். அவரது தொண்டரடிப்பொடிகளும் அதையே பண்ணாகப் பாடிவருகிறார்கள். அவர் வாங்கிவந்துள்ள வரம் என்னவென்றால், அவருக்கு யாருமே தீங்கு இழைக்க முடியாது. தேவமாதாவை எந்த அற்ப மானிடப் பதர் எதிர்க்கமுடியும்? ஆனால், தன் அழிவை அவர் தானே தேடிக்கொள்வார். இப்போதும் அந்தப் பாதையில்தான் போக ஆரம்பித்தார். அவர் யார் சொல்வதையும் கேட்டுக்கொள்ளமாட்டார்.

'நந்தவனத்திலோர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய்க்
குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி
அதைக் கூத்தாடி கூத்தாடி
போட்டுடைத்தாண்டி'

என்ற நாட்டுப்புற பாடலுக்கு இலக்கியம் ஜெயலலிதா கட்சி நடத்தும் முறைதான். தோழமைக் கட்சிகளுடன் இத்தனை தொகுதிகள் என்று எண்ணிக்கையில் உடன்பாடு கண்டபின்னர், தொகுதிகள் இவை என்று பகிர்ந்துகொள்வதற்கு முன்பு, தன் கட்சி சார்பில் 160 தொகுதிகள் எவை என்று அறிவித்துவிட்டார். அவற்றில் தோழமைக் கட்சிகள் விரும்பிக் கேட்டிருந்தவையும் இருந்தன. இந்த அதிரடிப் பட்டியல் தோழமைக் கட்சிகளைக் காயப்படுத்த, அவர்கள் - அதாவது, இரண்டு கம்யூனிஸ்டுகள், தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தே. மு. தி. க.) என்ற நடிகர் விஜயகாந்தின் கட்சி ஆகியன உடனடியாக கூடிப்பேசி மூன்றாம் அணிபற்றிய பேச்சை எடுத்தன. அப்படி ஒரு மூன்றாம் அணி உருவானால் தி. மு. க. ஜெயித்துவிடும். அ. இ. அ. தி. மு. க. வுக்கு தோல்வி. இது, அ. இ. அ. தி. மு. க. வுக்கும் தெரியும்; அதன் தோழமைக் கட்சிகளுக்கும் தெரியும். எனவே, இவர்கள் கட்டாயக் கல்யாணத்தால் மீண்டும் சேரவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

செய்த ஊழல் வெளியே தெரியாமல் இருக்க இரண்டு பெரிய கட்சிகள் கூட்டணி கண்டபோது, அதை எதிர்க்க ஒரு வலுவான கூட்டணி தேவை என்பது இவர்களுக்கு புரிந்தது. மீண்டும் பேசினார்கள். அப்போது, ம. தி. மு. க. வும் கூட்டணியில் இருக்கவேண்டும் என்பது விஜயகாந் தரப்பிலான நிபந்தனை. அது, நிபந்தனையின் எண்ணிக்கைக்காகச் சேர்த்துச் சொல்லப்பட்டபோதும், மற்ற இரண்டு நிபந்தனைகள் ஏற்கப்பட்டதும் அ. இ. அ. தி. மு. க. கூட்டணி வைகோவின் ம. தி. மு. க.வைத் தவிர்த்து உருவானது. ம. தி. மு. க. தேர்தலிலிருந்து ஒதுங்குவதாக அறிவித்தது. ஆனால், அதற்கு பாஜக அழைப்பு விடுத்தது.

ஜெயலலிதாவின் சர்வாதிகாரப் போக்கினால் கூட்டணி உரிய நேரத்தில் ஏற்படவில்லை. சூழ்நிலையும் சுமுகமாக இல்லை. ஏப்ரல் 13இல் திருமணம் நடந்தாலும் சாந்தி முகூர்த்தம் மே 13இல் என்பதால் இந்த மணத்தின் மணம் அப்போது தெரியவரும்.

இதில் மக்களின் பங்கு என்ன? வெட்டியாக அரட்டை அடிப்பது. முடிந்தால் வாக்களிப்பது. மின்னணு இயந்திரத்தில் ஒரு பொத்தானை நினைத்து வேறொரு பொத்தானை அழுத்துவது. தேர்தல் முடிவுக்கு தவிப்புடன் காத்திருப்பது. முடிவுகள் வந்ததும் அதை விமரிசனம் செய்வது. வேறு என்ன செய்யமுடியும்? தேர்தல் மக்களுக்காக என்ற நிலைமை தொடக்கத்திலிருந்தே இல்லாமல் போய்விட்டது. ஆனால், மக்களுக்காக என்ற அதே நாடகம், வெவ்வேறு பாத்திரங்களுடன் மாறுபட்ட வசனங்களுடன் நடந்துவருகிறது. இன்ன கட்சிக்கு இன்ன சதவிகிதம் என்று ஏதோ ஓர் அடிப்படையில் புள்ளிவிபரம் சொல்கிறார்கள். அந்தக் கணக்குப்படி பார்த்தால், தோராயமாக 40 முதல் 45 சதவிகிதம் கட்சிக்காரர்களின் வாக்குகளே. வாக்களிக்காதவர்கள் 30 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரை. ஆக, குறைந்தபட்சம் 60 சதவிகிதம் அதிக பட்சம் 70 சதவிகிதம் என்று வைத்துக்கொண்டால், அதில் கட்சிகளுக்காக 45 சதவிகிதம் போக, 20 சதவிகிதமே தேர்தலில் வேடிக்கைக்காக அல்லது காசு வாங்கியதற்காக வாக்களிப்பவர்கள். காசு வாங்குபவர் 15 சதவிகிதம் என்று வைத்துக் கொண்டால், பொது வாக்குகள் வெறும் 5 சத விகிதம் மட்டுமே. இந்த 5 சதவிகிதத்தில் தான் விமரிசகர்கள், விவரமறிந்தவர்கள் வருகிறார்கள். இவர்களது வாக்குகள் கடலில் கரைத்த பெருங்காயமே. அது போகட்டும்; அயோக்கியர்களும் போக்கிரியர்களும் தேர்தலில்நிற்கிறார்கள என்றால் மக்கள் யோசித்து வாக்களிக்கலாம். ஆனால், அவ்வள்வுபேரும் மாஜி யோக்கியர்கள் என்றால்...

ஆக, இங்கே தேர்தல் என்பது அரசியல்வாதிகளுக்காக அரசியல்வாதிகளே நடத்திக்கொள்ளும் நாடகம். மேடை அரசியல்வாதிகளுக்கு; மக்கள் கைதட்டிகள். அவர்கள் கைதட்டிக்கொண்டே இருக்கலாம், அடுத்த தேர்தல்வரை. ■

## 'தந்து' - 'பெற்று' அரசியல் தத்துவம்

காங்கிரசுக்கு தி. மு. க. 63 தொகுதிகள் தந்தது என்கிறார்கள்.

விஜயகாந்தின் தே. மு. க. வுக்கு அ. இ. அ. தி. மு. க. 41 தொகுதிகள் தந்தது என்கிறார்கள். வலிமையான கட்சி கொடுக்கும் நிலையில் இருக்கிறது. வலிமை குறைந்த கட்சி வாங்கும் நிலையில் இருக்கிறது. இந்த கொடுக்கல், வாங்கலை 'தர்மம்', 'பிச்சை' என்றுதான் சொல்லவேண்டும்.

கூட்டணி என்று சொல்வது மங்கல வார்த்தை. கூட்டணி காணவேண்டிய கட்சிகள் எல்லாம் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூடி, தம் கொள்கை இணக்கம் பற்றிப்பேசி, ஒரு குறைந்தபட்ச செயல் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டு, அவரவருக்கு எந்தெந்த தொகுதிகளில் செல்வாக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து, உணர்த்தி, தட்டில் இருக்கும் 234 பழங்களில் ஆளுக்கு இவ்வளவு என்று எடுத்துக்கொள்வது கட்சிகளுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும், கட்சிக்கர்க வாக்களிப்பவர்களுக்கும் நியாயமானது; கௌரவமானது.

தருவதற்கு தட்டுக்கள் இரண்டு பெரிய தலைகளிடம் இருக்கின்றன. அவர்கள், 'இந்தா பிடி' என்று அவர்களது தட்டிலிருந்து வீசுவதை இவர்கள் துண்டேந்திப் பெற்றுக்கொள்கிறார்கள். இதுதான் 'தந்து' என்பதன் பொருள்.

தேர்தலுக்கு முன்பு 'தந்து', தேர்தலுக்கு பின்பு 'பெற்று' என்பதற்கான முதலீடு.

# ஆட்சிப் பலமா; அதிகார பலமா?



**ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிப்பொறுப்பில் ஏகபோக உரிமையை அநுபவிக்கிறார்கள் என்ற விசனம் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரிடையே வலுவடைகையில், ராஜபக்ஷ குடும்பத்திலும் பூசல்கள் வலுவடைகின்றன?**

சிவசக்தி

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து சுமார் இரண்டு ஆண்டுகள் நிறைவாகின்றன. நாட்டில் சமாதானமும் அமைதியும் திரும்பிக்கொண்டிருப்பதாக அரசாங்கம் சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்துவருகிறது. ஆனால், உண்மை நிலை என்ன?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வலுவான ஆளுமைத் திறனைக்கொண்டிருக்கிறது என்ற ஓர் எண்ணம் நாட்டு மக்களிடையே இருந்தாலும், அரசாங்கம் இன்று பல வீனமான ஒரு நிலையிலேயே இருக்கிறது. ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் ஏகபோக உரிமையை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமக்கு அரசாங்கத்தில் எவ்வித அதிகாரத்தையும் வழங்காமல், ஜனாதிபதி ராஜபக்ஷ தங்களை செல்லாக்காசாக உதறித் தள்ளியிருக்கிறார் என்ற விசனம் அரசாங்கத்தின் பிரதான கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் மனதில் வலுவூன்றியிருக்கிறது.


அரசாங்கத்தில் உள்பூசல்கள் வலுவடைவதற்கு, ஜனாதிபதி தன்னை நெருங்கிய சிலர் சொல்லும் உண்மையானதும் பொய்யானதுமான கதைகளை நம்பி, தனது கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களை ஓரங்கட்டுவதும் ஒரு காரணமாகும். இதனால் பல்லாண்டுகாலம் முஸ்லிம்களின் ஓரளவு ஆதரவைப் பெற்றிருந்த ஏ. எச். எம். பௌசி போன்றவர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் என்ற பெயரில் அதிகாரங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு, ஒரு மூலையில் முடக்கிவிடப்பட்டுள்ளார்கள். இதனால் அரசாங்கத்துக்கு முஸ்லிம் மக்களிடையே வெளிப்படையாக இருந்துவந்த ஆதரவு இப்போது மறைமுகமாக தேய்ந்துகொண்டிருக்கிறது.

உள்கட்சிப் பூசல்கள் கட்சி அங்கத்தவர்களிடையே மட்டுமன்றி, ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளும் இன்று தலைதூக்கியிருக்கிறது. அரசாங்கத்தில் பலரும் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்கின்ற போதிலும், அனைவரும் சுய நோக்கங்களுடன் ஏதாவது தில்லுமுல்லுகளைச்செய்து, தங்கள் செல்வத்தை கோடிகோடியாக பெருக்கிக்கொள்வதற்கே முயல்கிறார்கள்.

இத்தகைய சுயநல நோக்கத்திலும் அதிகார மோகத்திலும் ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே இன்று பூசல்களும் புகைமையும் தலைதூக்கியுள்ளன. ஜனாதிபதியின் இளைய சகோ




சமல் ராஜபக்ஷ



பசில் ராஜபக்ஷ



கோத்தபாய ராஜபக்ஷ



நாமல் ராஜபக்ஷ

தரர் பசில் ராஜபக்ஷ அரசியல் திருகுதாளங்களைப் புரிவதிலும், எதற்கெடுத்தாலும் தரகுப் பணத்தை கோடிக்கணக்காக அறவிடுவதிலும் வல்லமை மிக்கவராக இருக்கிறார் என்றே பொதுவாக அறியப்படுகிறது. ஜனாதிபதியின் மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷ, தன்னிடம் தொடர்ந்தும் துறைமுக அபிவிருத்தித்துறை அமைச்சு இருக்கவேண்டும் என்ற பிடிவாதப் போக்கைக் கொண்டிருந்தபோதிலும், அந்தப் பதவியை உங்களுக்கு தரமுடியாது; தயவுசெய்து நீங்கள் பாராளுமன்றத்தின் சபாநாயகர் என்ற பொறுப்பான பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய அண்ணனுக்கு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார். இதனால், இவ்விருவரும் இப்போது நேருக்குநேர் சந்தித்தாலும் பேசுவதில்லை.

அதுபோன்று, தன்னுடைய மகன் நாமல் ராஜபக்ஷவை அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நாயகனாக நிலைக்க வைக்கவேண்டுமென்ற விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக, சமல் ராஜபக்ஷவின் மூத்த புதல்வர் சஷிந்திர ராஜபக்ஷ அம்பாந்தோட்டை தொகுதியில் போட்டியிடுவதைத் தவிர்த்து, அவரை ஊவா மாகாணசபை தேர்தலில் போட்டியிடவைத்து, அம்மாகாண சபையின் முதலமைச்சராகவும் நியமிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ வகைசெய்தார். மேலெழுந்தவாரியாக இந்த நியமனங்களை ஏற்றுக்கொள்வதாக சமல் ராஜபக்ஷ குடும்பத்தினர் தெரிவிக்கின்றபோதிலும், அவர்கள் மனதில் பகைமை உணர்வு இன்று கொழுந்துவிட்டெரிவதாகவே நெருக்கமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

வடபகுதியில் 'வடக்கின் வசந்தத்தின்' அபிவிருத்தித் திட்டத்துக்கு பொறுப்பாக பசில் ராஜபக்ஷ இருக்கின்றபோதிலும், நாமல் ராஜபக்ஷவும் தனது அம்பாந்தோட்டை மாவட்டத்தைக் கவனிப்பதற்குப் பதில், வாரத்தில் இரண்டு, மூன்று நாள்கள் கிளிநொச்சி பகுதியில் கூடாரமிட்டு, ஓர் அமைச்சரைப்போன்று தந்தையின் அதிகாரத்தைப் பிரயோகித்து வருகிறார் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

தற்போதைய பிரதம மந்திரி டி. எம். ஜயரத்தின முதுமை காரணமாக நினைத்ததை சரியாக பேசமுடியாத அளவுக்கு நோயாளியாக இருப்பதனால், அவரது பதவிக்கு ஒரு விசுவாசமானவரை நியமிக்கவேண்டிய பிரச்னையை மஹிந்த ராஜபக்ஷ இப்போது எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார். உண்மையிலேயே, பிரதம மந்திரி பதவி கட்சியின் செயலாளர் நாயகமான மைத்திரிபால சிறிசேனவுக்கே கொடுக்கப்படவேண்டும். மைத்திரிபால சிறிசேன 'தனக்கு எதிரானவர்' என்ற காரணத்தினால் அவருக்கு ஜனாதிபதி எக்காரணம்கொண்டும் அப் பதவியை வழங்கமாட்டார். இப்போது, அப் பதவிக்கு யாரை நியமிப்பது என்ற திரிசங்கு நிலையில் ஜனாதிபதி இருக்கிறார். பணத்தையும் சுகபோகத்தையும் தவிர, வேறு எதிலும் அக்கறையின்றி வாழ்க்கையை உல்லாசமாக கழித்து வரும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு பிரதம மந்திரி பதவியைக் கொடுத்தால் அவர் தனக்கு எதிராக செயல்படமாட்டார் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு இருக்கிறது.

குடும்பத்தவர் ஒருவரை பிரதமர் பதவிக்கு நியமித்தால் குடும்ப ஆட்சி தொடரும் என்ற நம்பிக்கையும் வலுப்பெற்று வருவதனால், பசில் ராஜபக்ஷவுக்கா அல்லது அடுத்த இளைய சகோதரரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கா பிரதமர் பதவியைக் கொடுப்பது என்று சிந்தித்துவரும் ஜனாதிபதி, எதனையும் வெற்றிகரமாக முடிக்கும் சாதனை வீரரான கோத்தபாய ராஜபக்ஷவை பாராளுமன்ற அங்கத்தவராக நியமித்து, அவருக்கு பிரதமர் பதவியைக் கொடுப்பதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் நம்புகிறார்கள்.

பல ஆண்டுகள் வடபகுதியில் அரசாங்கக் கட்சியின் சார்பில் பணியாற்றிவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாபற்றி எத்தனையோ குற்றச்சாட்டுகள் இருப்பினும், மக்களின் தேவைகளை ஓரளவுக்கு தீர்த்துவைக்கும் பணியை டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருக்கிறார். அவரும் இன்று அரசாங்கத்தினால் ஓரங்கட்டப்பட்டுவருகிறார்.

அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரான சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளை மிகவும் இரகசியமான முறையில் மேற்கொண்டுவருகிறார். மதுபோதையில் விபத்துக்குள்ளாகும் மக்கள், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறுவதாயின் சிகிச்சைக்கான செலவை இரண்டாயிரம் ரூபாவரையில் கட்டாயமாகச் செலுத்தவேண்டும் என்ற விதியை அமுலாக்கப்போவதாக இவர் அறிவித்திருக்கிறார். தேர்தல் காலத்தில் இத்தகைய செயல்பாடுகளைச் செய்வது நல்லதல்ல என்று ஜனாதிபதி தெரிவித்தபோதிலும், மைத்திரிபால சிறிசேன அதனை வாபஸ்பெறவில்லை. மைத்திரிபால சிறிசேனவின் குடும்பம் நாட்டின் அரிசி விற்பனையை தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. அரசாங்கத்தை தர்மசங்கடமான நிலைக்கு தள்ளுவதற்காக, அரிசிக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்; அரிசியின் விலையை அதிகரித்தல்போன்ற, அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.

எப்படியெனினும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு சிங்கள மக்களின் பூரண ஆதரவு இன்றும் இருந்துவருகிறது. இதனையே உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன. ■

இலங்கை - இந்திய உலக கிண்ண கிரிக்கெட் போட்டி:

# இலங்கை ஜனாதிபதி புறக்கணிக்கப்பட்டாரா?



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே மும்பை நகரில் நடைபெற்ற உலக கிரிக்கெட் வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான இராஜதந்திர உறவு பாதிக்கக்கூடிய வகையில் நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இப்போட்டியில் இலங்கை அணி சாம்பியன் பட்டத்தைப்பெற்று, வெற்றிக் கிண்ணத்தைக் கொணர்ந்தால் அதன்மூலம் தனது அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று எதிர்பார்த்த இலங்கை அரசாங்கம் இலவு காத்த கிளிபோல ஆகியிருக்கிறது.

இறுதிப் போட்டிக்கு முன்னதாக, இந்தியாவின் மொகாலி மைதானத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ள பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஸா கிலானிக்கு இந்திய அரசு உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்திருந்தது. அழைப்பை ஏற்று பிரதமர் கிலானி இந்தியா சென்றிருந்தார். போட்டி மைதானத்தில் அவருக்கும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், இரு பிரதமர்களும் மைதானத்துக்கு நடுவே அழைத்துச் செல்லப்பட்டு, இருநாட்டு அணிகளுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது.

## கிரிக்கெட் வெற்றி ஏற்படுத்தியிருக்கவல்ல செல்வாக்கை இழந்தாலும் எதிர்க்கட்சியின் பலவீனத்தில் ஜனாதிபதி தனது செல்வாக்கை உறுதியுடன் நிலைநிறுத்துகிறார்

சிவசக்தி

போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று, இலங்கை அணியை இறுதி ஆட்டத்தில் சந்திப்பதற்காக தெரிவானது. போட்டியில் கலந்துகெள்வதற்கு வருகைதந்திருந்த பாகிஸ்தான் பிரதமருக்கு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அளித்த விருந்துபசாரத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் அவரது புதல்வர் ராகுல் காந்தியும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே மும்பையில் நடைபெறவிருந்த இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்வதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆர்வம் தெரிவித்துவந்தபோதிலும் இந்திய அரசாங்கம் அவருக்கு உத்தியோகபூர்வ அழைப்பு எதனையும் விடுக்கவில்லை. எனினும், மும்பை மைதானத்தில் இலங்கை அணிக்கு உற்சாகமூட்டும் தனது கடமையை தடுத்துவிட முடியாது என்று, சர்வதேச கிரிக்கட் சபை (ஐசிசி) அங்கத்துவ நாடொன்றின் அரசாங்க தலைவர் என்ற அதிகாரத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மும்பை சென்றார்.

சாதாரண அரசியல் தலைவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பைத் தவிர, அவருக்கு வேறொரு விசேட பாதுகாப்பும் அங்கு அளிக்கப்படவில்லை. இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலும் போட்டியைக் காண்பதற்காக மைதானத்துக்கு வந்திருந்தார். பொதுவாக, இரு நாடுகளுக்கிடையில் ஒரு போட்டி நடைபெறும்போது

அவ்விரு நாடுகளின் தலைவர்களை மைதானத்துக்கு அழைத்து, இரு தேச அணி வீரர்களுக்கும் அறிமுகம் செய்து வைப்பது சம்பிரதாயமாகும். இந்த சம்பிரதாயம் எதுவும் அங்கு நிகழவில்லை. இலங்கை ஜனாதிபதியும் இந்திய ஜனாதிபதியும் அமைதியாக, தங்கள் விசேட ஆசனங்களில் அமர்ந்து ஆட்டத்தை கவனித்தனர்.

இதுபற்றி, இந்தியாவின் சிவசேனை இயக்கத்தின் தலைவர் பால் தக்கரே இந்திய அரசாங்கத்தை கடுமையான முறையில் கண்டித்திருக்கிறார். கிரிக்கெட் இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி, இந்திய அரசு பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்த முயற்சிசெய்தபோது, அயல் நாடான இலங்கையுடனும் அதே இராஜதந்திரத்துடன் இருநாடுகளுடனான நல்லுறவை வளர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் செயல்படவில்லை என்று அவர் கண்டனம் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தினால் திட்மிட்டே மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை இதுவென்று அரசியல் அவதானிகள் சிலர் கருதுகின்றனர்.

இத்தகைய ஒரு சந்தேகம் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டவுடன், விஷயத்தை சமாளிக்க நினைந்த இந்திய அதிகாரிகள், இலங்கை ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே அவரை மைதானத்தின் நடுவே கௌரவிக்க முடியாமல் போனதென்று ஒரு காரணத்தை முன் வைத்தனர்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள மாநில தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகமும், இந்திய காங்கிரஸ் கட்சியும் இணைந்த கூட்டணிக்கு மக்கள் ஆதரவு குறைந்துவருவதனால், அதனை நிவர்த்திசெய்யும் விதத்திலான ஒரு நடவடிக்கையாகவும் இதனை பொதுவாகவே யூகிக்கலாம். இந்த விதத்திலேயே இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்னையையும் இவர்கள் கையாள்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்திய அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை இராஜதந்திரிகள் சிலர் இதனைத் தெரிவிக்கின்றனர்.

கிரிக்கெட் போட்டியைப் பயன்படுத்தி தனது செல்வாக்கை பலமாக்கிக் கொள்ள எண்ணிய இலங்கை அரசு, கிரிக்கெட் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்த வேளையில் திருவிழா திருடனைப்போன்று, எரிபொருள்களின் விலையை எவருக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமாக உயர்த்திவிட்டு, எதுவுமே தெரியாத அப்பாவியைப்போல் மௌனம் சாதித்துவருகிறது.

இலங்கை மக்களில் சுமார் 60 முதல் 70 சதவீதமான நகரத்து மற்றும் கிராமத்து மக்களும் இன்று கிரிக்கெட் 'கிறுக்கர்களாக' மாறி, நாம் அநியாயமாக உலக கிண்ணத்தை இழந்துவிட்டோம் என்ற சோகத்தில் மூழ்கியிருப்பதனால் அவர்கள் எரிபொருள் விலையேற்றத்தைப்பற்றி சிந்திக்கமுடியாத மனோநிலையில் இருக்கிறார்கள். இன்னும் ஒருவார காலத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டு இலங்கையில் கொண்டாடப்படும் வேளையில்தான் மக்களால் விலைவாசி உயர்வின் தாக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியும்.

விலைவாசி உயர்வு கட்டுமீறிச் சென்று, தங்களை பட்டினியில் வாட்டினாலும் பெரும்பான்மை மக்கள் இன்னும் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு மஹிந்த ராஜபக்ஷமீது வைத்திருக்கும் அசையாத நம்பிக்கை தளர்ந்துவிடாது என்றே தெரிகிறது. பயங்கரவாதத்திலிருந்து தம்மைக் காப்பாற்றி கரை சேர்த்த மனிதர் என்ற உணர்வு இது.

இந்த நிலைக்கு, ஐக்கிய தேசிய கட்சி (ஐ. தே. க.) ஒற்றுமையின்மையாலும் உள்கட்சி பூசல்களினாலும் சீர்குலைந்துபோயிருப்பதே பிரதான காரணமாகும். இரண்டு வாரங்களுக்கு முன்னர், கட்சித் தலைமைப் போராட்டத்தைத் தாங்கள் சுமுகமாக தீர்த்துக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்து கட்சியின் தலைவராக வைத்திருக்கப் போவதாக அறிவித்திருந்தனர். எனினும், மறதினமே சஜித் பிரேமதாசவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான மோதல் பகிரங்கமாக வெளிப்பட ஆரம்பித்தது.

ஐ. தே. க. வின் பலம்வாய்ந்த முக்கியஸ்தர் ஒருவர், சஜித் பிரேமதாச தலைகீழாக நின்றாலும் அவருக்கு ஒருபோதும் கட்சியின் தலைமைத்துவம் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவித்தார். சஜித் பிரேமதாசவின் தந்தையாரான ஆர். பிரேமதாசவை கட்சியின் தலைவராக்கி ஜனாதிபதி பதவிக்கு அமர்த்தியதனால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து கட்சி இன்னமும் விடுபடாத நிலையில் இருக்கிறதென்றும், அத்தகைய சந்தர்ப்பத்தில் எவ்விதம் மீண்டும் இன்னுமொரு பிரேமதாசவை கட்சியின் தலைமைப் பதவிக்கு நியமிக்க முடியுமென்று அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு சிறந்த அரசியல் வித்தகர் என்றும் அவர் எப்படியாவது தங்கள் வகுப்பைச் சார்ந்த ஒருவரை கட்சியின் தலைமைப் பதவிக்கு கொணரும்வரை அவர் தொடர்ந்தும் கட்சித் தலைவராக இருப்பார் என்றும், அதற்கு கட்சியின் விசுவாசிகள் தங்களின் பூரண ஒத்துழைப்பை நல்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் தாய் மாமனும், இன்று இலங்கையிலுள்ள முன்னணி தனியார்துறை பத்திரிகை நிறுவனத்தின் அதிபரும், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபக குடும்பத்தைச் சேர்ந்த வருமான ரஞ்சித் விஜேவர்த்தனவின் மகன் ரூவன் விஜேவர்த்தன, ஐ. தே. க. வில் ஓர் உதயசூரியனாக இன்று ஜொலித்துக்கொண்டிருக்கிறார். இவர், முன்னாள் பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கவின் இளைய சகோதரரான ரொபர்ட் சேனநாயக்கவின் பேரனாவார். ரோபர்ட் சேனநாயக்கவின் மகளை ரஞ்சித் விஜேவர்த்தன மணம் முடித்ததன்மூலம் இரு பெரும் சக்திவாய்ந்த ஐக்கிய தேசிய கட்சி குடும்பங்கள் ஒன்றிணைந்தன.

ரூவன் விஜேவர்த்தன தற்போது கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர். இவருக்கு ஐ. தே. க. சார்பில் மிகப் பெரிய அளவில் விருப்பு வாக்ககள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, ஐ. தே. க. மீது விசுவாசம் கொண்டவர்கள், இளைஞரான ரூவன் விஜேவர்த்தனவுக்கு இன்னும் ஐந்து, ஆறு வருடங்கள் அரசியல் அநுபவம் பெறுவதற்கு வாய்ப்பைக் கொடுக்கும் வரை, ரணில் விக்கிரமசிங்கவை கட்சித் தலைவராக தொடர்ந்தும் பதவியில் வைத்திருக்க விரும்புகிறார்கள்.

இன்னும் ஆறு, ஏழு வருடங்களில் ரூவன் விஜேவர்த்தன இந் நாட்டின் அரசியலில் ஒரு பலம்வாய்ந்த தலைவராக உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. சஜித் பிரேமதாசவுக்கு அரசியலில் தனது செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளும் அளவுக்கு பணபலமோ, கட்சியின் பேராதரவோ பெருமளவில் இருக்கமாட்டாது என்றே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

எனவே, இன்னும் ஆறு ஆண்டுகளில் இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் போட்டியிடவுள்ள மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவதை தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியோ, அல்லது செல்லாக் காசாக மாறிக்கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியோ (ஜே. வி. பி.) அல்லது வேறு எந்த கட்சியோ இல்லை என்பதே இன்றைய யதார்த்தம். ■

## தமிழ்நாடு தேர்தல்

# கருணாநிதி - ஜெயலலிதா ‘எரிகின்ற கொள்ளியில் நல்ல கொள்ளி எது?’

### தேர்தலில் யார் ஜெயிப்பார்களோ ஆனால், தேர்தலுக்கான கூட்டணியை அமைப்பதில் இருவருமே தோற்றவர்கள்

**பிங்காட்சன்**

தமிழ்நாட்டில் இது தேர்தல் நேரம். பரபரப்பான செய்திகளுக்குப் பஞ்சம் இல்லை. மார்ச் மாதம் முதல் வாரத்தில் முதலமைச்சர் மு. கருணாநிதி ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார். திராவிட முன்னேற்ற கழகத்தை (தி. மு. க.) சேர்ந்த மத்திய அமைச்சர்கள் எட்டுப்பேரும் ஒட்டுமொத்தமாக தங்கள் பதவிகளை இராஜினாமா செய்யப்போவதாக அவர் அறிவித்தார்.

காங்கிரஸ் கட்சிக்கும் தி. மு. க. வுக்கும் இடையேயான தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகளில் காங்கிரஸ் தனக்கு 90 இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என்று பிடிவாதம் பிடித்ததே காரணம். பின்னர், காங்கிரஸ் இறங்கிவந்து 63 தொகுதிகள் வேண்டும் என்று வற்புறுத்தியது. அதுமட்டுமல்ல, கூட்டணி ஆட்சிக்கு வந்தால் காங்கிரசுக்கு ஆட்சியில் பங்கு தரவேண்டும்; அதாவது, அமைச்சு பதவிகளைத் தரவேண்டும் என்றது. கடந்த ஐந்து ஆண்டுகளாக 234 இடங்களில் 93 இடங்களை மட்டுமே பெற்று, சிறுபான்மை ஆட்சியை நடாத்திவந்த கருணாநிதிக்கு இது கசப்பான விடயம்.

காங்கிரசுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும் முன்னரே பாட்டாளி மக்கள் கட்சிக்கு (பா. ம. க.) 31 இடங்களையும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 10 தொகுதிகளையும், கொங்குநாடு முன்னேற்ற கழகத்துக்கு ஏழு இடங்களையும், முஸ்லிம் லீக்குக்கு மூன்று தொகுதிகளையும் தி. மு. க. ஒதுக்கிவிட்டது. இவர்கள், ஆட்சியில் பங்கு கேட்கமாட்டார்கள். காங்கிரஸ் கட்சி பேச்சுவார்த்தைக்கு வரும்போது, ‘இருப்பது இத்தனைதான்’ என்று கூறிவிடலாம் என்று எண்ணியிருந்தார் அந்த அரசியல் சாணக்கியர். ஆனால், கலைஞர் கணக்குத் தப்புக் கணக்காகிவிட்டது. காங்கிரஸ் 63 தொகுதிகள் வேண்டும் என்ற நிலையிலிருந்து இறங்கிவர மறுத்தது. அதனால்தான் கருணாநிதி ‘அமைச்சர்கள் இராஜினாமா’ என்ற நாடகத்தை அரங்கேற்றினார். ஆனால், இந்த இராஜினாமா மிரட்டலை எவரும் நம்பவில்லை. ஏற்கெனவே, இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசு தலையிட்டு தமிழர் படுகொலையைத் தடுக்கவேண்டும் என்று கோரி, அவருடைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்து மக்களை ஏமாற்றியதை மக்கள் மறக்கவில்லை.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியின் ஆயுள்காலம் இன்னமும் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் இருக்கும் நிலையில் வளங்கொழிக்கும் பதவிகளை - பணமும் பதவியும் தருகின்ற சுகத்தை விட்டுவிட தி. மு. க. ஒன்றும் முட்டாள் கட்சி அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். மேலும், வருகின்ற சட்டமன்றத் தேர்தல்களில் ஜெயலலிதா வெற்றி பெற்று ஆட்சிப்பீடம் ஏறிவிட்டால், மத்தியில் உள்ள மந்திரிப் பதவிகளைத் தவிர, தனக்கும் தன் வாரிசுகளுக்கும் வேறு பாதுகாப்பு எதுவும் இல்லை என்பதைக் கருணாநிதி உணராமலா இருப்பார்?

ஈழத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டுக்கொண்டிருப்பதைத் தடுக்க இம்மாதிரி இராஜினாமா செய்திருந்தால் - தமிழினத் தலைவர் என்ற பெய்யரையாவது தக்கவைத்துக்கொண்டிருக்கலாம். இவரின் இராஜினாமா நாடகம் நாட்டுக்காக அல்ல, சீட்டுக்காகத்தான் என்கின்றன ஈழ ஆதரவு கட்சிகள். தவிர, மத்தியில் மந்திரி பதவிகளை விட்டுவிட்டால் ஸ்பெக்ரம் அலைக்கற்றை ஊழலில் முன்னாள் அமைச்சர் ஆ. ராசா சிக்கித் தவிப்பது போல், தனது அன்பு மகள் கனிமொழியும், அவரது அன்னை ராசாத்தி அம்மாளும் சிறைக்குச் செல்ல நேரிடலாம் என்ற அச்சம் அவருக்குள்ளே எழுந்தது என்பது உண்மையே.

ஸ்பெக்ரம் ஊழலில் பெரும் லாபம் கண்ட நிறுவனங்களில் ஒன்று, கருணாநிதி குடும்பத்துக்கு சொந்தமான கலைஞர் ரி. வி. க்கு 216 கோடி ரூபா கொடுத்துள்ளமை வெளிப்பட்டுவிட்டது. கலைஞர் ரி. வி. யில் பங்குகளை வாங்குவதற்காகத்தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது என்று கலைஞர் ரி. வி. நிறுவனம் கூறியது.

பணம் கொடுத்த நிறுவனத்தின் உரிமையாளர் பால்வா என்பவர் பல உண்




**'இருப்பது இத்தனைதான்' என்று கூறிவிடலாம் என்று எண்ணியிருந்தார் அந்த அரசியல் சாணக்கியர். ஆனால், கலைஞர் கணக்கு தப்புக் கணக்காகிவிட்டது**

மைகளை விசாரணையின்போது கக்கி விட்டார். அவர் இப்போது சிறையில் இருக்கிறார். கலைஞர் ரி. வி. யின் 20 சத வித பங்குகள் கனிமொழியிடமும் 60 சதவீத பங்குகள் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளிடமும் உள் ளன.

கனிமொழி, ஸ்பெக்ரம் ஊழலில் சிறையிலுள்ள ராசாவுக்கு நெருக்கமா னவர் என்பதும், கனிமொழி தனக்காக வும் ராசாவுக்காகவும் மத்திய அமைச்சு பதவிகளைப் பெற்றுத்தரும்படி இடைத் தரகர் நீரா ராடியா என்பவரி டம் மன்றாடியதும் தொலைபேசி உரையாடல் பதிவுகள்மூலம் வெளிப் பட்டுவிட்டன. (ஈழப் பிரச்னைக்காக இராஜினாமா கொடுத்த அன்றுதான் கனிமொழி இவ்வாறு மன்றாடிக் கொண்டிருந்தார் என்பது வேறு விஷ யம்.)

காங்கிரசுடன் தி. மு. க. தலைமைய கத்தில் தேர்தல் உடன்பாடு குறித்து கரு ணாநிதி பேசிக்கொண்டிருந்தபோது, அதே கட்டிடத்தில் கலைஞர் ரி. வி. யில் மத்திய புலனாய்வுத் துறை அதிர டிச் சோதனை நடாத்திக்கொண்டிருந் தது. தயாளு அம்மாளும் கனிமொழி யும் ஸ்பெக்ரம் ஊழல் தொடர்பாக மத் திய புலனாய்வுத்துறையினரால் கடுமை யான விசாரணைக்கு உள்ளாகிக் கொண்டிருந்தனர். ஏற்கெனவே, கனி மொழி சம்பந்தப்பட்டிருந்த தமிழ் மையம் என்ற அமைப்பின் அலுவலகத் தில் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டு விட்டது. அதன் தலைவர் ஜகத் கஸ்பர் என்ற கத்தோலிக்க பாதிரி (இவர் விடு தலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறிக்கொள்பவர்) கடுமையாக விசாரிக் கப்பட்டார்.

கருணாநிதிக்கு இது சோதனை காலம்தான். "முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைக்கு தள்ளப்பட்டு விட்டேனே'' என்று, நெருங்கியவர்க ளிடம் கூறி வருந்தினாராம்.

1980ஆம் ஆண்டு அதாவது, பல் வேறு ஊழல் வழக்குகளில் சிக்கி, நீதி மன்றத்தில் குற்றச்சாட்டுக்களைச் சந் திக்கவேண்டியிருந்த நிலையில் வேறு வழியின்றி அன்று பிரதமராகவிருந்த இந்திரா காந்தியின் காலில் 'தடா லென்று' விழுந்தார். இத்தனைக்கும், இந்திரா காந்தி 1975ஆம் ஆண்டு இவரு டைய ஆட்சியைக் கலைத்தவர்; கரு ணாநிதியின் மகன் மு. க. ஸ்டாலினை யும் மற்றைய தி. மு. க. தலைவர்களை யும் உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறையில் தள்ளியவர்.

1980இல் அவருடைய காலில் சர ணாகதி அடைந்து, 'நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக' என் றார். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, தன் கொள்கைகளையும் தன் மானத் தையும் காற்றில் பறக்கவிட்டார்.

ஆனால், அண்மைக்காலமாக அதா வது, ஆறு மாதங்களுக்கு முன்புவரை காங்கிரஸை அவர் ஆட்டிப்படைத் தார். தனக்கு வேண்டிய மந்திரிப் பதவி களை மிரட்டிக் கேட்டுப் பெற்றார். ஆனால், இன்று, காங்கிரஸின் கை மேலோங்கிவிட்டது. 'சொக்கத் தங் கமே, சோனியா' என்று கலைஞரால் வர்ணிக்கப்பட்ட சோனியா காந்தி சென்னைவந்து இவரைச் சந்தித்த காலம் போய், இன்று சக்கர நாற்காலி யில் தள்ளாத வயதில் டில்லி சென்ற கலைஞருக்கு சோனியாவைச் சந்திக்க அநுமதிக்கு காத்திருக்கவேண்டிய நிலை. எல்லாம் காலத்தின் கட்டாயம். ஸ்பெக்ரம் ஊழல் செய்த வேலை.

காங்கிரசுக்கு 63 தொகுதிகளை ஒதுக்க ஒப்புக்கொண்டார். அதாவது, தி. மு. க. 122 தொகுதிகளில் மட்டுமே

போட்டியிடுகிறது. தி. மு. க. தனியாக ஆட்சி அமைக்க 118 இடங்களிலாவது வெற்றி பெறவேண்டும். எனவே, தி. மு. க. அணி வெற்றிபெற்றால் கூட்டணி ஆட்சிதான் என்பது உறுதியாகிவிட்டது.


இதற்கிடையில், ஆ. ராசாவின் கூட்டாளியான சாதிக் பாஷா புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டுவந்த நிலையில் மர்மமான முறையில் மரணமடைந்தார். அவர் தூக்கிட்டு தற்கொலைசெய்துகொண்டார் என்று பொலிஸ் கூறினாலும், அவர் அரசு தரப்பு சாட்சியாக ('அப்ரூவராக') மாறுவதற்கு முடிவுசெய்திருந்தார். எனவே, அவர் கொலைசெய்யப்பட்டார் என்ற ஊகங்களும் நிலவுகின்றன.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ. இ. அ. தி. மு. க.) கூட்டணியிலும் குழப்பம் நிலவுகிறது. ஜெயலலிதா நடிகர் விஜயகாந்தின் கட்சியான தேசிய திராவிடர் கழகத்துக்கு 41 இடங்களை ஒதுக்கி உடன்பாடு செய்திருந்தார். இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இக் கூட்டணியில் உள்ளன. ஆனாலும், வை. கோபால்சாமியின் (வைகோ) ம. தி. மு. க. ஜெயலலிதாவின் அ. இ. அ. தி. மு.க கூட்டணியில் இருந்து விலகிவிட்டது. கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் அ. இ. அ. தி. மு. க. வைகோவின் கட்சிக்கு 35 தொகுதிகளை ஒதுக்கியிருந்தது. இம்முறை ஆக எட்டு தொகுதிகளை மட்டுமே வழங்க முன்வந்தது.

மற்றைய கூட்டணி கட்சிகளும் மகிழ்ச்சியாக இல்லை. தாங்கள் கேட்ட குறிப்பிட்ட தொகுதிகளைத் தங்களுக்கு ஒதுக்காமல், அ. இ. அ. தி. மு. க. தன்னிச்சையாக 160 தொகுதிகளுக்கான தங்கள் வேட்பாளர்களை அறிவித்தது கூட்டணிக் கட்சிகளுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. அவர்கள் கூட்டணியிலிருந்து விலகி, மூன்றாவது அணி அமைக்கப்போவதாக கூறி ஆலோசனை நடத்தினார்கள். பின்னர், ஜெயலலிதா இறங்கிவந்தார். பேச்சுவார்த்தைகளைத் துவக்கினார். விஜயகாந்தின் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் கூட்டணியில் நீடிக்கின்றன. ம. தி. மு. க மட்டும் தனித்து விடப்பட்டது. பாவம் வைகோ!

இம்முறை ஜெயலலிதாவின் ஆட்சிதான் என்று பலரும் நம்புகிறார்கள். ஜெயலலிதாவின் கடந்தகால ஆட்சியைப் பார்க்கும்போது, 'எரிகின்ற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. ■

# ஜனநாயகத்தின் நடுநாயகம் பணம்



## அமெரிக்க - இந்திய அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பில் வெளியான விக்கிலீக்ஸ் தகவல்கள் இந்திய பாராளுமன்றத்தில் புயலைக் கிளப்பின

டி. ஐ. ரவீந்திரன்

உலகம் முழுவதிலும் பரபரப்பையும், அதிகார மட்டங்களில் பதற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்திவருபவர் ஜூலியன் அசாஞ் என்கிற 40 வயது சுவீடன்வாழ் அவுஸ்திரேலியர். அதிரடி அம்பலங்கள் மூலம் அதிர்ச்சி அலைகளை எழுப்பிவரும் இவரது விக்கிலீக்ஸ் இணையதளம், இந்திய நாடாளுமன்றத்திலும் புயலைக் கிளப்பியது.

2009ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றம் அமெரிக்க - இந்திய சிவில் அணுசக்தி ஒப்பந்தம் தேவையா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தியது. காங்கிரஸ் தலைமையில் இயங்கிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இதை ஆதரித்தது. பாரதீய ஜனதா கட்சியின் (பா. ஜ. க.) தலைமையில் இயங்கிய தேசிய ஜன நாயகக் கூட்டணியும் இடதுசாரிக் கட்சிகளும் எதிர்த்தன. காங்கிரசைத் தோற்கடித்தால் அது பா. ஜ. க. வுக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்பதில், காங்கிரஸ் எதிர்ப்பை அடக்கியே வாசித்துவந்த இடதுசாரிகள், இந்த ஒப்பந்த விஷயத்தில் சிறிதும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. எதிர்ப்பு வலுவாகவே இருந்தது. அரசு கவிழக்கூடிய அபாயம் ஏற்பட்டது. அமெரிக்காவுக்கு இந்த ஒப்பந்தம் நிறைவேறியேதீரவேண்டும். இதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தது அமெரிக்கா. காங்கிரசுக்கு ஆட்சியே பறிபோகும் அபாயம் நிலவியதுடன், இது கௌரவ பிரச்னையாகவும் ஆகியது. கூட்டணிக் கட்சிகளை மட்டுமன்றி சிறு கட்சிகள், சுயேச்சைகளையும் விரட்டி விரட்டி ஆதரவு திரட்டியது. உத்தர பிரதேச முதல்வர் மாயாவதி கைகொடுத்தார். அந்த சமயத்தில் அவர் ஊழல் வழக்கில் சிக்கி, மத்திய புலனாய்வு பிரிவின் (சி.பி.ஐ.) இறுக்கமான பிடியில் மாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, வாக்கெடுப்பில் காங்கிரஸ் வென்றது; அமெரிக்க - இந்திய ஒப்பந்தம் நிறைவேறியது. இடதுசாரிகளுக்கும் காங்கிரசுக்குமிடையே இருந்த நட்பு முடிவுக்குவந்தது. இன்று, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தப் பிரச்னை மீண்டும் வந்து காங்கிரசைத் தாக்குகிறது. பிற கட்சி எம்.பிக்களுக்குப்

பணம் கொடுத்து, அவர்களது வாக்கை காங்கிரஸ் 'விலைக்கு' வாங்கியது என்று விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்திய தையொட்டி, இந்திய நாடாளுமன்றம் ஆடிப்போனது.

வாக்கெடுப்பு நடந்த சமயத்தில் காங்கிரஸ் பிரமுகர்கள் அமெரிக்க தூதரக அதிகாரிகளை அவ்வப்போது சந்திந்து, எப்படியெல்லாம் ஆளும் காங்கிரஸ் கூட்டணி இந்த ஒப்பந் தத்தை நிறைவேற்றப் 'பாடுபடுகிறது' என்பதுபற்றி எடுத்துக் கூறியதை அந்த அதிகாரிகள் தங்கள் அரசுக்கு உடனுக்குடன் தெரிவித்துவந்தனர். இந்தப் பேச்சுக்களைப்பற்றிய தகவல்க ளைத்தான் விக்கிலீக்ஸ் கைப்பற்றி வெளியிட்டிருக்கிறது.

உலகின் 'சிறந்த' ஜனநாயக நாடான அமெரிக்கா, உலகின் 'மிகப் பெரிய' ஜனநாயக நாடான இந்திய ஜனநாயகத்தின் பிரதிநிதிகள் விலைக்கு வாங்கப்பட்டதை தெரிந்தே ஆதரித் திருக்கிறது. விக்கிலீக்ஸ் தகவலின்படி, மறைந்த ராஜீவ் காந்தி யின் நெருங்கிய நண்பரும், சோனியா குடும்பத்தினருக்கு இன்றளவும் நெருங்கியவருமான சதீஷ் சர்மா, அப்போதைய அமெரிக்க தூதரக உயர் அதிகாரியான ஸ்டீபன் வைற்றிடம் காங்கிரஸ் கட்சி இந்த வாக்கெடுப்பில் நிச்சயமாக வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, அஜித் சிங்கின் கட்சியான ராஷ்ட்ரிய லோக்தள்ளைக் குறிவைத்திருப்பதை விவரமாக தெரிவித்தார். அக் கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பி.க்களுக் கும் தலா 10 கோடி ரூபாவீதம் விலை பேசப்பட்டிருப்பதாகக் கூறினார். இதில் திருப்தி அடையாத ஸ்டீபன், 'பணம் கொடுத்தாலும், அவர்கள் வாக்குப்போடுவதை எப்படி உறுதி செய்வீர்கள்?' என்று கேட்டுள்ளார் .

சதீஷ் சர்மாவின் உதவியாளர் நசிகேத கபூர், கோடிக்க ணக்கான பணம் இருந்த இரு பெரிய பெட்டிகளை அமெ ரிக்க தூதரகத்தின் மற்றோர் அதிகாரியிடம் காட்டுகிறார். இதைத்தான் அந்த எம்.பி.க்களுக்குக் கொடுக்கப்போகி றோம் என்றும் வேறு கூறியிருக்கிறார். அமெரிக்க தூதரக அதிகாரிகள் தங்களது நாட்டுக்கு அனுப்பிய தகவல்கள், கேள்விகளைப் பெற்று, விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கிறது. இவ்வாறான சம்பவங்கள் நடக்கவேயில்லை என்று சதீஷ் ஷர்மாவும், நசிகேத கபூரும் மறுத்திருக்கிறார்கள்.

இதுபற்றியெல்லாம் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியதோடு, அவ்வாறு செய்வதற்கான அதிகாரத்தை யாருக் கும் தான் கொடுக்கவில்லை என்றும் பிரதமர் மன்மோகன் சிங் கூறுகிறார். ஆனால், இவருக்கு இந்த அதிகாரம் இருக்கி றதா என்று எதிர்க்கட்சியினர் கேட்கின்றனர். பிரதமர் மன் மோகன் சிங்கும், இந்த வாக்கெடுப்பின்போது தனது மாநி லத்தைச் சேர்ந்த சக சீக்கியர் கட்சியான அகாலி தள எம்.பி.க் கள் எட்டுப் பேரை (அகாலிதாளும், என்.டி.ஏ.யின் கூட்ட ணிக் கட்சி) 'சரிக்கட்டி' இணங்க வைப்பதற்கு அயல்நாடு வாழ் இந்தியரும், நிதிநிறுவன உரிமையாளருமான சந்த் சட் வால் மூலம் 'பேச' வைத்திருக்கிறார். ஆனாலும், அகாலிதள எம்.பி.க்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆக, விக்கிலீக்ஸின் தக வல்களின்படி, 'திருவாளர் பரிசுத்தம்' என்று கூறப்படும் மன் மோகன் சிங்கும் தனது பங்குக்குப் 'பணி'யாற்றியிருக்கிறார்.

அஜீத் சிங்கின் எம்.பி.க்களுக்குப் பணம் கொடுப்பதற் காக, அன்றைய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி கமல்நாத்மூலம் நிதி திரட்டியிருப்பதாக காங்கிரஸ் எம்.பி. ஒருவர் அமெரிக்க தூதரக அதிகாரியிடம் தெரிவித்திருக்கி றார் என்ற தகவலையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால், காங்கிரஸ் அமெரிக்காவை திருப்திப்படுத்தவும், தங்களது நிலைப்பாட் டைச் சட்டபூர்வமாக்கவும் கோடிக்கணக்கில் லஞ்சம் கொடுத்து, நினைத்ததைச் சாதித்திருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிறது. வாக்கெடுப்பு நாளன்று பா.ஜ.க.வின் எம்பிக்கள் அசோக் அர்கல், பக்கன் சிங் குலஸ்தே, மஹாவீர் சிங் பகோரா ஆகியோர் நாட்டுக்கே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். அப்போது, காங்கிரசின் கூட்டணியான சமஜ் வாதி கட்சியின் அமர்சிங் மற்றும் சோனியா காந்தியின் அர சியல் ஆலோசகர் அகமது பட்டேல் ஆகியோர், நம்பிக்கை வாக்கெடுப்பின்போது தங்களது வாக்கை மாற்றி அளிக்கு மாறு கேட்டுக்கொண்டு, அதற்காக தங்களுக்கு லட்சக்க ணக்கில் பணம் கொடுத்தனர் என்றுகூறி, அந்தப் பணம்தான் இது என்று பணக்கட்டுகளை பாராளுமன்றத்தில் சபாநாய கர் முன்னால் கொட்டினார்கள் (இதுபற்றிய விசாரணையில் எதுவும் நிரூபணம் இல்லை என்று விசாரணைக் குழு அறி வித்தது வேறுவிஷயம்).

விக்கிலீக்ஸ் பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தையும் தோலுரித்துக் காட்டியுள்ளது. வாக்கெடுப்புக்கு முன்பு பா.ஜ.க. காங்கிரசை மிகவும் கடுமையாக விமர்சித்தது. "நாட்டை அமெரிக்காவுக்கு அடகு வைத்துவிட்டனர்" என்று பொங்கியது. அதையடுத்து தூதரக அதிகாரி, பா. ஜ. க. வின் தேசிய செயற்குழு உறுப்பினரான சேஷாத்ரி சாரியை சந்திந்து தன் 'கவலையை' பகிர்ந்துகொண்டார். அதற்கு அவர், 'இதைப்பற்றி கண்டுகொள்ள வேண்டாம்' என்று கூறி னாராம். 2009 தேர்தல் முடிந்தவுடன், தேர்தல் முடிவு அறி விக்கப்படுவதற்கு முன்பு அமெரிக்க தூதரக உயர் அதிகாரி பா.ஜ.க. வின் பிரதமர் வேட்பாளரான எல். கே. அத்வானி யைச் சந்தித்தார். ஒருவேளை பா. ஜ. க. ஆட்சிக்கு வந்தால், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்க - இந்திய சிவில் அணுசக்தி ஒப்பந்தம் குறித்து மறுபரிசீலனை செய்யப் படுமா என்று கேட்டார். அதற்கு அத்வானி, 'சர்வதேச ஒப்பந் தங்களை யார் மேற்கொண்டாலும், அதை பா. ஜ. க. அரசு 'மதித்து செயல்படும்' என்று கூறியிருக்கிறார். ஆனால், தேர் தல் பிரசாரத்தின்போது இதே விஷயத்தில் இவர்களது குர லும், பிரசாரமும் வேறாக இருந்தது.

மக்கள் பிரதிநிதிகள் தாங்கள் விலை போனதுபோலவே மக்களுக்கும் விலைபேசியிருக்கிறார்கள். இதையும் விக்கி லீக்ஸ் அம்பலப்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டிலும் இது அரங்கேறியிருக்கிறது. திருமங்கலம் தொகுதி இடைத்தேர்த லில் தி. மு. க. வேட்பாளரை ஜெயிக்கவைக்க, முதல்வர் கரு ணாநிதியின் மூத்த மகனும், மத்திய அமைச்சருமாகிய மு. க. அழகிரி களத்தில் இறங்கினார். ஒரு வாக்குக்கு ரூபா 5000 வரை கொடுக்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட் டுள்ளது. மிகப்பெரிய அளவில் தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியும் இதுவரையில் எந்த நடவடிக்கையும், யார்மீதும் இல்லை.

விக்கிலீக்ஸின் நிறுவனரான அசாஞ் இத்தகைய அம்ப லங்கள் குறித்து வெளியிட்டுள்ள கூற்று கவனிக்கத்தக்கது. "முறைப்படுத்தப்பட்ட வகையில் தவறுகள் செய்யும் அதி கார அமைப்பின் செயல்பாடுகள் பற்றிய தகவல்களை வெளியே கொண்டுவருவதன் மூலம்தான், அதனை பலவீனப் படுத்த முடியும். இவ்வாறான அமைப்புகளை எதிர்ப்பவர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும். அடுத்து வருப வர்கள் இதுபற்றிய உணர்வுடன் செயல்படுவார்கள்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், பணத்தை வாரியி றைத்து, ஜனநாயகத்தைக் கடைச்சரக்காக்குபவர்கள் அதற் கான தண்டனையை பெற்றதாகச் சரித்திரம் இல்லை. இந்தி யாவில் அசாஞ்சின் எதிர்ப்பார்ப்பு நிறைவேறுவது இப்போ தைக்கு சாத்தியமே இல்லை. எதிர்க்கட்சியினரும் பதவிக்கு வந்தால் இதற்கு மாற்றாக நடந்துகொள்வார்கள் என்று நம்பு வதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில், பணம்தான் ஜனநாய கத்தின் நடுநாயகமாக இருக்கும் என்பதே யதார்த்தம். ■



அட்டைச் செய்தி

## அரபு, ஆபிரிக்க நாடுகளின் அஸ்தமனம்

# மேற்கில் உதிக்கும் சூரியன்?


அருஷ்

லிபியாமீதான யுத்தத்திலிருந்து அமெரிக்கா தனது படை வளத்தை அற்றியுள்ள அதேசமயம், பிரித்தானியா தனது படை வளங்களை அதிகரித்துவருகின்றது. 600 படையினரையும், 40 கொமாண்டோக்களையும், மேலதிக தாக்குதல் விமானங்களையும், ஆறு கடற்படைக் கப்பல்களையும் பிரித்தானியா அண்மையில் அனுப்பியுள்ளது.

பிரித்தானிய வான்படையின் 10 ரைபூன் விமானங்களும் 8 ரோர்னடோ தாக்குதல் விமானங்களும் இரு வாரங்களில் 70 தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை கொணர்ந்த தீர்மானத்தைத் தொடர்ந்து, 'நேட்டோ' தலைமையில் 34 நாடுகள் லிபியா மீதான தாக்குதலில் ஈடுபட்டுவருகின்றன. 1970களில் லிபியா தொடர்பிலான ஐ. நா. வின் தீர்மானத்தில் பொதுமக்களைப் பாதுகாப்பதில் அனைத்துலக சமூகம் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற சரத்துக்கள் உள்ளதையே தற்போது மேற்குலகம் பற்றிப்பிடித்துள்ளது.

மார்ச் 31ஆம் தேதியிலிருந்து ஐந்து தினங்களில் நேட்டோ படையினரின் விமானங்களும் கப்பல்களும் 701 வான் பறப்புகளையும் 276 தாக்குதல்களையும் மேற்கொண்டதாகவும்,





லிபியாவின் வான் தாக்குதல் பலம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்தார். எனினும் லிபியாவின் மொத்த படைபலத்தில் 30 விகிதம் சிதைக்கப்பட்டுள்ளதாக நேட்டோ அமைப்பு தெரிவித்தது.

அதேசமயம், லிபிய எதிர்த்தரப்பின் படை நடவடிக்கைகளுக்கான கட்டளை அதிகாரியாகவும் புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கேணல் ஹலீபா ஹப்ரார் எதிர்த்தரப்பு படையணிகளை தற்போது வழிநடத்திவருகிறார்.

எதிர்த்தரப்பினருக்கு உதவியாக ஆபத்துக்கள் அற்ற ஆயுதங்களை விநியோகம் செய்யவும் நேட்டோ அமைப்பு திட்டமிட்டுள்ளது. தாக்குதல் படையினருக்கு அல்லாது, தேசிய இடைக்கால சபை உறுப்பினர்களுக்கு தொலைதொடர்பு கருவிகளை வழங்குவதற்கு பிரித்தானியா தீர்மானித்துள்ளது.

லிபியாவில் ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பிரித்தானியா மற்றும் அமெரிக்க கூட்டணியால் அமைக்கப்பட்டதே இந்த தேசிய இடைக்கால சபை. அதன் சிறப்பு பிரதிநிதியாக மஹமூட் ஜெப்ரில் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரு வாரங்களுக்கு முன்னர் பிரித்தானியாவில் நடைபெற்ற அனைத்துலக சமூக பிரதிநிதிகளின் சந்திப்பைத் தொடர்ந்து பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க வெளிவிவகார செயலாளர்கள் சிறப்பு பிரதிநிதி ஜெப்ரிலுடன் இரகசிய கூட்டம் ஒன்றையும் நடாத்தியிருந்தனர். இவர்கள் என்ன உரையாடினார்கள் என்பது தொடர்பில் எதுவும் வெளியில் தெரிவிக்கப்படாதபோதும், மேற்குலகம் தனது அடுத்த நடவடிக்கைக்கு தயாராகிவிட்டதையே இது எடுத்துக்காட்டுகிறது. அதாவது, லிபியாவில் ஏற்படப்போகும் ஆட்சிமாற்றத்தின்போது புதிய அரசை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பித்துவிட்டனர். ஐ. நா. வின் தீர்மானத்தின் அடிப்படையில் லிபியாவில் ஆட்சி மாற்றத்தை மேற்குலகு ஏற்படுத்த முடியாது. ஆனால், அங்குள்ள எதிர்த்தரப்பினரின் மூலம் அதனை மேற்கொள்வதை ஐ. நா. வின் சரத்துக்கள் எவையும் தடுக்கவில்லை.

எனவேதான், லிபியாவின் எதிர்த்தரப்பினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தை ஓர் அரசாக ஏற்றுக்கொள்வதாக பிரான்ஸ் தெரிவித்துள்ள அதேசமயம், எதிர்த்தரப்பினரின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு பிரதேச துறைமுகத்திலிருந்து மசகு எண்ணெய் ஏற்றுமதியை ஆரம்பிக்கவுள்ளதாக எதிர்த்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்குலகைப் பொறுத்தவரையில் தமது படையினரை களமிறக்கி, தமது நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் எழும் எதிர்ப்புக்களை தவிர்ப்பதற்காகவே தரைப்படையற்ற போர் ஒன்றை லிபியாவில் பரீட்சித்துப் பார்க்கின்றது.

இது ஒரு கடினமான பணி. ஆனால், மேற்குலகத்தினால் அதனை விரைவாக நகர்த்தமுடிவதை பார்க்கையில், அரபு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் பலவற்றின் தலைவிதி விரைவில் மாற்றமடையப்போவது உறுதி. ஏனெனில், வலுவான எதிர்க்கட்சிகளோ அல்லது அதிபர் கடாபியை எதிர்த்து போரிடும் ஆற்றல்கொண்ட போராட்டக் குழுக்களோ அற்ற ஒரு நாட்டில், சில நாள்களில் ஓர் உள்நாட்டுப்போரை ஏற்படுத்தி, அதில் வெற்றியும் கண்டுள்ளது மேற்குலகம். அவர்களின் போரியல் உத்திகளும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அதாவது,

- பொருளாதார - ஆயுத தடைகளை ஏற்படுத்துதல், நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் அதனை இறுக்கமாக பின்பற்றுதல்.
- அரசுக்கு எதிரான படையணிகளை வலுப்படுத்துதல்,

**ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட போரைவிட மிகவும் சுலபமாக நகர்த்தும் திறனையும், தமது படையினரைக் களமிறக்காது ஒரு நாட்டைக் கைப்பற்றும் உத்திகளையும் மேற்குலகம் வகுத்துக்கொண்டுள்ளது**

**ஐ. நா. தீர்மானத்தின் அடிப்படையில் லிபியாவில் ஆட்சி மாற்றத்தை மேற்குலகு ஏற்படுத்த முடியாது. ஆனால், அங்குள்ள எதிர்த்தரப்பினரின் மூலம் அதனை மேற்கொள்வதை ஐ. நா. வின் சரத்துக்கள் எவையும் தடுக்கவில்லை**



அவர்களின் நகர்வுக்கு ஆதரவான வான் தாக்குதல்களை மேற்கொள்ளுதல்.

● லிபியாவின் வான் படையையும், கனரக ஆயுதங்களையும் அழித்தல்.

● லிபியாவின் அரச உறுப்பினர்களையும் படையினரையும் அரசின் கட்டமைப்பிலிருந்து தப்பியோடச் செய்தல்.

நவீன ஆயுதங்கள், தொலைதொடர்பு வசதிகள், செய்மதி தகவல்கள், நவீன தொழில்நுட்பம், ஐந்தாம் தலைமுறை விமானங்கள் இவற்றைக்கொண்டு, மேற்கூறிய உத்திகளை கனகச்சிதமாக நிறைவேற்றிவருகின்றது மேற்குலகம்.

பயிற்சிகளும், தரமான ஆயுதங்களுமற்ற ஒரு மக்கள் படையினரைக்கொண்டு, லிபியாவின் கிழக்கு பகுதி நகரங்களை மேற்குலகு கைப்பற்றியுள்ளது. லிபியாவின் 45 ஆயிரம் இராணுவத்தினரில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை எதிரணியின் பக்கம் தப்பியோடவும் செய்துள்ளனர். லிபிய வெளிவிவகார அமைச்சர் மௌசா கோசாவும் பிரித்தானியாவுக்கு தப்பியோடியதுடன், உள்துறை அமைச்சர் உள்பட பல அமைச்சர்கள் கேணல் கடாபியை உதறித் தள்ளியுள்ளனர்.

'பிக்அப்' வாகனத்தில் துனீசியாவுக்கு தப்பியோடிய லிபிய வெளிவிவகார அமைச்சர் மௌசா கோசா, தனிப்பட்ட விமானத்தில் பிரிட்டனை அடைந்துள்ளதுடன், தற்போது பிரித்தானியாவின் வெளிவிவகார புலனாய்வுத் துறையான 'எம்ஐ-6' உடன் இணைந்து செயல்பட்டுவருவதாகவும் பிரித்தானிய தகவல்கள் தெரிவித்துள்ளன.

கோசாவின் வரவு லிபிய அதிபருடன் இணைந்து செயல்படும் பலரை வெளியேற்றலாம் என தெரிவிக்கப்படுகின்றது. 2009ஆம் ஆண்டு வரையிலும் லிபியாவின் புலனாய்வுப் பிரிவின் தலைவராக செயல்பட்ட கோசாவின்மூலம் மேற்குலகம் கடாபியின் பலத்தை இலகுவாக சிதைத்துவிடும் எனவும் கணிப்பிடப்படுகிறது.

தொழில்நுட்பத்தில் வளர்ச்சிகண்ட, பொருளாதார வளம்கொண்ட நாடுகளின்முன்னர் வலிமை குன்றிய நாடுகளின் மரபுவழியிலான படையணிகள் தாக்குப்பிடிக்க முடியாது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற ஈராக் போருக்கும் தற்போதைய போருக்கும் அதிக வேறுபாடுகள் உண்டு.

ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட போரைவிட மிகவும் சுலபமாக நகர்த்தும் திறனையும், தமது படையினரைக் களமிறக்காது ஒரு நாட்டைக் கைப்பற்றும் உத்திகளையும் மேற்குலகம் வகுத்துக்கொண்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, யேமனில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டத்திலும் அங்கு சிக்குண்ட வெளிநாட்டவர்களை மீட்பதற்கு பிரித்தானியாவின் சிறப்பு படையணிகளும் (எஸ்ஏஎஸ்), சினூக் வகை உலங்குவானூர்திகளும் களமிறக்கப்பட்டுள்ளன. பிரித்தானிய கடற்படையினரின் 'ஒக்ஸிலறி ஆர்கஸ்' கடற்படை கப்பல் தென் செங்கடலில் தரித்து நிற்பதுடன், ஏழாவது ஸ்குவட்றன் வான்படை விமானங்களும் நடவடிக்கைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சிரியாவிலும், சூடானிலும், ஐவரி கோஸ்ரிலும் மேற்குலகு தனது படை நடவடிக்கைகளைத் தொடரவே செய்கின்றது. ஒரே சமயத்தில் பல களமுனைகளுக்கு படையினரை நகர்த்தும் திறன், பிராந்திய கட்டளை மையங்களின் ஊடாகவே போரை முடிக்கும் திறமை என்பவற்றில் மேற்குலகம் மேலோங்கியுள்ளது.

லிபியாமீதான நடவடிக்கையை அமெரிக்கா நேட்டோவிடம் கையளித்துள்ளபோதும், அதற்கு முன்னர் ஜேர்மனியில் தலைமையகத்தைக்கொண்ட அமெரிக்காவின் ஆபிரிக்க பிராந்திய கட்டளை பீடம் மட்டுமே போரை நடாத்தியிருந்தது. அதற்கான வளங்கள் ஒவ்வொரு கட்டளை பீடத்திலும் உள்ளன என்பதே இந் நடவடிக்கைகளின் வெற்றிக்கு காரணம். உதாரணமாக, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளை பீடத்துக்கு ஒதுக்கப்படும் நிதி சீனாவின் பாதுகாப்பு நிதியைவிட மூன்றுமடங்கு உயர்வானது.

தற்போதுகூட ஒரு வாரத்துக்கு 30 மில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்களை செலவிட்டே பிரித்தானியா தனது தாக்குதல்களை தொடர்கிறது. லிபியாமீதான போருக்கு மக்களின் ஆதரவு முன்னர் காணப்பட்டதைப்போன்று இல்லை என்று பிரித்தானியாவின் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

அதாவது, போர் ஆரம்பித்த வாரத்தில் 45 விகிதமான இருந்த ஆதரவு தற்போது 41 விகிதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இந்த எதிர்ப்புகளை தவிர்ப்பதற்காகவே தமது படையினரைப் பயன்படுத்தாது மேற்குலகம் போரை நடத்திவருவது ஒருபுறமிருக்க, லிபியாவின் தென்பிராந்தியத்தில் மட்டும் 40 பில்லியன் பரல்கள் எண்ணெய்ப்படிவுகள் உள்ளன என்ற தகவலும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரபு மற்றும் ஆபிரிக்க நாடுகளை பொறுத்தவரையில் அங்கு பல நாடுகளின் நீண்டகால ஆட்சிகளின் வரலாறுகள் முடிவைச் சந்திக்கும் நாள்கள் நெருங்கிவிட்டன என்பதைத்தான் தற்போது அந்த பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் உணர்த்துகின்றன.

23 ஆண்டுகள் ஆட்சிசெய்த துனிசியா அதிபரும், 29 ஆண்டுகள் ஆட்சிசெய்த எகிப்திய அதிபரும் துரத்தப்பட்டுவிட்டனர். லிபிய அதிபரின் 42 வருடகால ஆட்சியின் நாள்களும் எண்ணப்படுகின்றன.

40 வருடங்களாக சிரியாவில் அதிகாரத்திலிருக்கும் சிறுபான்மை இனத்தினரையும், 32 வருடங்களாக யேமனை ஆட்சிபுரிந்துவரும் சலெயின் ஆட்சியையும் போராட்டங்கள் ஆட்டம்காணவைக்க ஆரம்பித்துவிட்டன.

மறுபுறமாக, படையினரைப் பயன்படுத்தாது, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்ப வளங்களின் மூலம், உள்நாட்டு கலகங்கள் மற்றும் உள்நாட்டு போர்களை உருவாக்கி தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதில் மேலை உலகம் வெற்றிகண்டுவருகிறது. நீண்ட தொடர் நெருக்கடிகளை கையாள்வதற்கும் அவர்கள் தம்மை தயார்படுத்திவிட்டார்கள்.

மேற்குலகத்தின் இந்த தயார்படுத்தல்களும், லிபியாமீதான போரும் பல பெரிய நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதுடன், தமது மரபுவழி படைவளங்களின் பயன்பாடுகள் தொடர்பில் மறு ஆய்வு செய்யவேண்டிய நிலைக்கும் தள்ளியுள்ளன. ■



Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

### அரபு உலகில்

# மலரும் மக்கள் புரட்சிகள்

**சர்வாதிகார ஆட்சிகளில் சலிப்புற்று, பல ஆண்டுகள் நெருப்பாய் கனன்ற உணர்வுகள் பொங்கி எழுகின்றன**

**அரவிந்தன்**

துனிசியா, எகிப்து, லிபியா... என்று, சர்வாதிகாரத்துக்கு எதிரான மக்கள் எழுச்சி காட்டுத் தீ போலப் பரவுகிறது. 'புரட்சி', 'எழுச்சி' ஆகிய பதங்கள் தம் மதிப்பை இழந்துவிட்டன என்று சொல்லத்தக்க நிலை உருவாகிவிட்டபின்னர், அப் பதங்கள் தமது அசலான பொருளை இந் நாடுகளில் இப்போது மீட்டெடுத்திருக்கின்றன. கடந்த ஜனவரி மாதம் ஆபிரிக்க அரபு நாடான துனிசியால் நடந்த மக்கள் போராட்டம், அந்நாட்டு அதிபர் நாட்டைவிட்டு தப்பியோடி, வேறொரு நாட்டில் தஞ்சம்புகும் நிலைக்குத் தள்ளியது. அதனைத் தொடர்ந்து, எகிப்தில் 18 நாள்கள் தலைநகர் கெய்ரோ மற்றும் பிற நகரங்களில் அந்நாட்டின் அதிபர் ஹொஸ்னி முபாரக்குக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்து, இறுதியில் அவர் பதவியைவிட்டு விலகினார். தற்போது, லிபியாவில் போராட்டம் கொழுந்துவிட்டு எரிகிறது.

இந்தப் போராட்டங்களுக்குப் பின்னால் பெரிய இயக்கம் எதுவும் இருக்கவில்லை. எந்த அமைப்பும் மக்களைத் தூண்டிவிட்டு இவற்றைச் செய்யவில்லை. அடக்குமுறையும் அராஜகமும் சகஜ வாழ்வைக் குதறி எடுக்கும் பிரச்னைகளும் சகித்துக்கொள்ள முடியாத அளவுக்குப் பெருகிவிட்ட நிலையில், இயல்பாக வெடித்துக் கிளம்பிய இந்தப் போராட்டங்கள், மேலான பார்வையில் அதிசய நிகழ்வுகளாகத் தோன்றலாம். ஆனால், இவை பல ஆண்டுகளாக உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பின் ஆவேசமான வெளிப்பாடு. போராட்டம் தொடங்கிய சில நாள்களுக்குள்ளாகவே அது தன் உச்சத்தை அடைந்ததென்றால், போராட்டத்துக்கான காரணங்கள் அத்துணை வலுவாக இருந்தன என்பதுதான் காரணம். ஆழ்ந்த வேதனையும் குமுறலும் வெடித்துக் கிளம்பும்போது, திடீரென்று தோன்றுவதுபோல இருக்கலாம்; ஆனால், அது பல ஆண்டுகளாகக் குமுறும் நெருப்பின் சீற்றம் என்பதை மறந்திடமுடியாது.

அரசின் மெத்தனப் போக்கு, சுரணையற்ற நிர்வாகம் ஆகியவை காரணமாக, வாழ்வுரிமை இழந்து, நம்பிக்கை இழந்த ஓர் இளைஞனின் தற்கொலைதான், துனிசிய போராட்டத்தின் தூண்டுதலாக அமைந்தது. அதுபோலவே, எகிப்து மக்களின் புரட்சியைத் தூண்டும் காரணியாக ஒரு பெண்ணின் குரல் அமைந்தது. இராணுவ அடக்குமுறைக்கு எதிராக போராடத் திரளுமாறு அவர் தன் வலைப்பூவில் விடுத்த கோரிக்கை பலரையும் அசைத்தது என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு நிகழ்வுகளும் போராட்டத்தின் தூண்டுதல்களேதவிர, போராட்டத்தின் காரணிகளோ, அவற்றுக்குப் பின்னால் இருந்து இயக்கிய சக்திகளோ அல்ல. பல ஆண்டுகால வேதனையின் விளைவாக மக்களின் மனங்களில் உருக்கொண்டிருந்த போராட்ட உணர்வுக்கு - விடுதலை வேட்கைக்கு வடிவம் கொடுத்த காரணிகளாக இவற்றைச் சொல்லலாம்.

துனிசியாவை ஆண்டுகொண்டிருந்த பென் அலியின் ஆட்சியில் ஊழலும் வறுமையும் வேலைவாய்ப்பின்மையும் பெருக, மக்கள் கொதித்துப் போயிருந்தார்கள். தலைநகர் துனிசில் தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரம் செய்துகொண்டிருந்த ஒரு பட்டதாரி இளைஞரைப் பிடித்த பொலிஸ், அவர் அநுமதியின்றி வியாபாரம் செய்வதாகக் குற்றம்சாட்டி வண்டியைப் பறிமுதல் செய்தது. வண்டியைத் திரும்ப தரும்படி கேட்ட அவரிடம் லஞ்சம் கேட்டார்கள். தாங்கமுடியாத விரக்தியில் அவர் சாலையில் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார். ஏற்கெனவே நொந்துபோயிருந்த மக்களை இந்தச் சம்பவம் கொதிக்கவைத்தது. அவர்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். அரசு அடக்குமுறையை ஏவியது. இருநூறுபேர் பலியானார்கள். ஆயினும், மக்கள் அஞ்சாமல் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்கள். கடைசியில் ஆட்சி மாறியது; போராட்டம் வென்றது.

இந்த வெற்றி, பக்கத்து நாடுகளான எகிப்திலும் லிபியாவிலும் மக்களைத் தூண்டிவிட்டது. எகிப்தில் நான்குபேர் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார்கள். ஆங்காங்கே போராடிய மக்களை பொலிஸ் அடித்து விரட்டியது. ஆனால், மக்கள் எழுச்சிக்கு அணைபோட முடியவில்லை. லட்சக்கணக்கான மக்கள் தாஹ்ரிர் சதுக்கத்தில் திரண்டார்கள். ஆர்ப்பாட்டம் முடிந்து வீடு திரும்பிய பலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் உற



**எகிப்து போராட்டம் குறித்து பலவித அச்சத்தைக்கொண்டிருந்த அமெரிக்காவும் புரட்சியை வரவேற்றது. 'காந்தி கற்றுக்கொடுத்த அஹிம்சை வழி இன்றைக்கும் வெற்றிதருகிறது' என்று அதிபர் ஒபாமா கூறினார்**

வினர்கள் சித்திரவதைக்கு ஆளானார்கள். மக்கள் அசரவில்லை. பெரும்பாலானவர்கள் சதுக்கத்திலேயே தங்கிவிட்டார்கள். போராட்டக்காரர்களுக்கு இராணுவத்தின் மறைமுக ஆதரவு கிடைத்தபின் நிலைமை மாறியது.

எகிப்தின் மக்கள் புரட்சி பல்வேறு தடைகளைத் தாண்டியே வெற்றிபெற்றது. ஈரானில் ஏற்பட்ட புரட்சிபோல இங்கும் நிகழ்ந்துவிடுமோ என்ற எச்சரிக்கை உணர்வுடன் இஸ்ரேல் இந்தப் புரட்சிக்கு எதிரான தன் முயற்சிகளை முன்னெடுத்தது. எகிப்து, மத அடிப்படைவாதிகளின் கையில் போய்விடும் என்று பூச்சாண்டிகாட்டியது. ஜனநாயக உரிமைகள் அட்க்கப்பட்ட நிலையில், ஒருங்கிணைந்த கட்டமைப்புக் கொண்ட இஸ்லாமிய சக்தியால் நாட்டின் கட்டுப்பாட்டைத் தங்கள்வசம் கொண்டுவர இயலும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்தார். ஈரானிலும் மற்றும் சில இடங்களிலும் நடந்தது அதுதான். எகிப்து அதிபர் ஹொஸ்னி முபாரக் இஸ்ரேலின் நெருங்கிய நண்பர் என்பது தெரிந்ததுதான். இதனால்தான் முபாரக்குக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டாம் என இஸ்ரேல் அமெரிக்காவிடமும், ஐரோப்பிய நாடுகளிடமும் கோரிக்கைவிடுத்தது.

ஆனால், ஹொஸ்னி முபாரக்கை ஆட்சியைவிட்டு விரட்டுவோம் என்ற உறுதியுடன், தாஹ்ரிர் சதுக்கத்தில் கூடியிருந்த லட்சக்கணக்கான எகிப்திய மக்கள் இதற்கெல்லாம் தளர்ந்துவிடவில்லை. துருக்கியும், ஈரானும் இவர்களுக்குத் தமது தார்மீக ஆதரவினையும் வாழ்த்துகளையும் வழங்கின.

இந்தப் புரட்சியின் விளைவாக மதவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடுவார்கள் என்ற அச்சத்தில், எகிப்தில் மேற்குலகின் ஆசிபெற்ற பொம்மை ஆட்சியைக் கொண்டுவர முயற்சி நடைபெறலாம் என்ற தகவல்கள் வெளிவந்தபோதிலும், இஸ்லாமிய அமைப்புகள் அத்தகைய முனைப்பு

எதையும் காட்டாமல் மக்கள் புரட்சிக்கு இசைவாகச் செயல்பட்டு இந்த அச்சத்தைப் போக்கின.

பதினெட்டு நாள்கள் நடந்த மக்கள் போராட்டம், ஹொஸ்னி முபாரக் நாட்டைவிட்டு ஓடியதுடன் முடிவுக்கு வந்தது. போராட்டம் குறித்துப் பலவித அச்சங்களைக் கொண்டிருந்த அமெரிக்காவும் இந்தப் புரட்சியை வரவேற்றது. 'காந்தி கற்றுக்கொடுத்த அஹிம்சை வழி, இன்றைக்கும்கூட வெற்றி தருவதாக இருக்கிறது' என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறினார்.

பதவியிலிருந்து வெளியேறிய முபாரக், உலகின் மிகப் பெரிய பணக்காரர் என்று செய்தி வெளியானது. அவரது சொத்துக்களின் மொத்த மதிப்பு சுமார் 70 பில்லியன் டொலர்கள் இருக்கலாம் என லண்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை செய்தி வெளியிட்டது. கடந்த 30 ஆண்டு காலம் ஆட்சியில் இருந்ததன் மூலம் முபாரக், இந்த அளவு சொத்துக்களை குவித்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்தது. இவரது பணம் பெரும்பாலும் சுவிஸ் மற்றும் பிரிட்டனில் உள்ள வங்கிகளிலேயே அதிக அளவில் இரகசிய கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்துவரும் நாடுகளில் ஆட்சியாளர்கள் மட்டும் உலக பணக்காரர்களின் பட்டியலில் இடம்பெறும் அளவுக்கு வசதியானவர்களாக இருப்பது மக்களின் விரக்தியைக் கணிசமாக கூட்டக்கூடிய யதார்த்தமாக உள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கையில் நாடு போய்விடும் என்று இஸ்ரேல் உள்ளிட்ட சில நாடுகள் கூறி வருகின்றன. இந்த பிரசாரத்தில் ஏமாந்துவிடாமல் இருப்பது மட்டுமல்ல, இந்த அச்சுறுத்தல் உண்மையாகிவிடாத அளவில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதும் மக்கள்முன் உள்ள சவால் என்று சொல்லலாம். விடுதலைக்கான போரின் உண்மையான வெற்றி என்பது, சூழலில் சமத்துவத்தையும் சம உரிமையையும் தனிநபர் சுதந்திரத்தையும் நிலைநாட்டுவதில்தான் தங்கியிருக்கிறது. எந்தவிதமான அடிப்படைவாதமும் இந்த விழுமியங்களுக்கு எதிரானவை என்பதால் அடிப்படைவாதத்தை எந்தவகையிலும் எதிர்க்க வேண்டியது விடுதலைப் போராட்டக்காரர்களின் தலையாய கடமையாகிறது.

எகிப்துப் புரட்சியை அடுத்து லிபியால் புரட்சி வெடித்தது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக கேள்விக்கு அப்பாற்பட்ட ஆதிக்கம் செலுத்திவரும் சர்வாதிகாரி முஹ்மர் கடாபியை அதிகாரத்திலிருந்து அகற்றிவிட்டு, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இராணுவத்தின் தோல்வியினால் கொதிப்படைந்த கடாபி, அயல் நாடுகளிலிருந்து கூலிப் படைகளை இறக்குமதிசெய்து ஆட்சியைக் காப்பாற்றப் போராடிக்கொண்டிருக்கிறார்.

மக்கள் போராட்டத்துக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. எல்லாவித உதவிக்கும் தயார் என்பதை அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்டன் அறிவித்துள்ளார். அமெரிக்காவும் சில மேற்கத்திய நாடுகளும் லிபியாவின் கடற்பகுதிக்குப் போர்க் கப்பல்களையும், போர் விமானங்களையும் அனுப்பியுள்ளன. ஆனால், மேற்குலகின் உதவிகளை அப்படியே ஏற்றுக்கொள்ள போராட்டக்காரர்கள் தயாராக இல்லை. தங்களது போராட்டத்துக்கு அந்நிய சாயம் பூசப்படுவதையும் வெற்றிக்கான பெருமையில் வல்லரசுகள் பங்குபெறுவதையும் மக்கள் விரும்பவில்லை. வல்லரசுகளின் உதவி, வானத்து மழைபோல இயற்கையானதோ அல்லது எதிர்பார்ப்புகள் அற்றதோ அல்ல என்பதை அவர்கள் உணர்ந்திருப்பது தெரிகிறது.

லிபியா மற்றும் எகிப்து புரட்சிகளைப்போலவே சமீப காலங்களில் உலகெங்கும் பல புரட்சிகள் நடந்திருக்கின்றன. இந்த நூற்றாண்டின் முதல் பதினோர் ஆண்டுகளில் 11 நாடுகளில் மக்கள் போராட்டத்தால் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஈக்குவடோர் நாட்டில் நடந்த மக்கள் போராட்டத்தால் அந்நாட்டு அதிபர் ஜமீல் மஹூத் ஆட்சியைத் துறந்து ஓடினார். அதே ஆண்டு ஒக்ரோபரில் யூகோஸ்லாவிய அதிபர் மிலோசெவிக் அதேவிதத்தில் ஆட்சியைத் துறந்தார். 2001 ஜனவரியில் பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ட்ராடாவுக்கு எதிராக மக்கள் போராடிய போது, அவர்களுக்கு இராணுவம் ஆதரவு அளித்தது. டிசம்பர் 2001இல் ஆர்ஜென்டினா அதிபர் பெர்னான்டோ டிலா ருயாவுக்கு எதிராக மக்கள் போராடினார்கள். காவல் துறையின் உதவியோடு அதிபர் அந்தப் போராட்டத்தை நசுக்கினார். ஆனால், அதற்கு அஞ்சாத மக்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்த, அதிபர் ருயா பதவியிலிருந்து விலகி, வெளிநாட்டுக்கு ஓட வேண்டியதாயிற்று. பொலிவியா, ஜோர்ஜியா, ஹெயிற்றி, உக்கிரைன், கிர்கிஸ்தான் என பல நாடுகளிலும் நடந்த போராட்டடங்களின் தொடர்ச்சியாக இப்போது துனிசியா, எகிப்து, லிபியா என்று மக்கள் போராட்டங்கள் தொடர்கின்றன.

சர்வாதிகார ஆட்சியையும் ஊழலையும் சகித்துக்கொள்ளமுடியாத மக்களின் போர்க்குணம்தான் இந்தப் போராட்டங்களுக்கான காரணமாக அமைந்துள்ளது. இந்நாடுகளின் அதிபர்கள் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசுகளின் கைப்பாவைகளாக இருந்ததும் இன்னொரு காரணம். மக்கள் போராட்டத்தால் பதவியைத் துறக்கும் அதிபர்களுக்கு அடைக்கலம் கொடுக்க அமெரிக்கா, ரஷ்யா, சவூதி அரேபியா போன்ற நாடுகள் தயாராக இருக்கின்றன.

ஆக, ஆட்சி மாற்றம் நடந்த இந்நாடுகள் எல்லாவற்றிலும் இராணுவத்தின் ஆதரவு மக்களுக்கு இருந்ததில்தான் இது சாத்தியமானது. குறிப்பாக, எகிப்தில் இராணுவத்தையும் ஆட்சியையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது. ஹொஸ்னி முபாரக் இராணுவத்தில் பணிபுரிந்தவர். தற்போது அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் இராணுவப் படைகளின் தலைவர் முகமது ஹுசைன் தான்டவி, முபாரக் நியமித்த அமைச்சரவையில் 20 ஆண்டுகள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். சர்வாதிகாரத்தின் இறுக்கமான பிடியால் ஆளப்படும் அரபு நாடுகளில் இராணுவம் அதிகார மையமாக இருப்பதைத் தவிர்க்க இயலாது. இராணுவம் அதி

**மகத்தான எழுச்சியினாலும் ஒற்றுமையினாலும் ஆயுதம் இன்றியே அடக்குமுறைக்கு எதிராக போரிட்டு வெல்லமுடியும் என்பதை எகிப்து மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள்**


கார மையமாக இருக்கும்வரை மக்கள் ஆட்சியோ ஜனநாயக அமைப்புகளோ மலர்வது சாத்தியமல்ல.

ஜனநாயக உணர்வும் ஆட்சியில் மக்களுக்கான பங்கும் சமத்துவமும் மலர இந்நாடுகளின் மக்கள் மேலும் பல போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கும். அந்தப் போராட்டங்கள் வெளிப்படையாக மட்டுமன்றி, நுண் தளங்களிலும் செயல்பட வேண்டியிருக்கும்.

எகிப்து மக்கள் பெற்றுள்ள வெற்றி உலகுக்கு ஓர் உண்மையை உணர்த்துகிறது. புரட்சி என்றால் ஆயுதப் புரட்சிதான் என்பதல்ல என்பதை அது காட்டியிருக்கிறது. மகத்தான எழுச்சியினாலும் ஒற்றுமையினாலும் ஆயுதம் இன்றியே அடக்குமுறைக்கு எதிராகப் போரிட்டு வெல்லமுடியும் என்பதை எகிப்து மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

எகிப்திலுள்ள பல்வேறு இஸ்லாமிய பிரிவினரும் கிறிஸ்தவ சிறுபான்மையினரும் இணைந்து தங்களுடைய மத, அரசியல் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு நின்றமை இப்புரட்சியின் வெற்றிக்கான மிகப்பிரதான காரணமாகும். ஆட்சிக்கு எதிரான மக்கள் போராட்டம் வெல்ல வேண்டுமானால் மக்களுக்கிடையே ஒற்றுமை இருக்கவேண்டியது அவசியம் என்பதன் நிரூபணமாக இது அமைந்துள்ளது.

இந்த வெற்றியும் அது கிடைத்த விதமும், அடக்குமுறையும் சமத்துவமின்மையும் நிலவும் நாடுகளில் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு முன்னுதாரணமாக விளங்கக்கூடியவை. ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், அந்தப் போராட்டத்துக்குப் புத்துயிர் கொடுப்பதற்கான திசை வழியை எகிப்து உள்ளிட்ட நாடுகளின் புரட்சிகளிலிருந்து பெறமுடியும். ஆயுதப் போராட்டம் என்பது போராட்டத்தின் ஒரு வழிமுறையே தவிர, அதுவே இறுதியானதல்ல. ஆயுதப் போராட்டம் ஓய்ந்திருக்கும் இந்தச் சூழலில் அமைதிப் போராட்டத்தை முன்னெடுக்க முடியுமா என்று நோக்க வேண்டிய காலம் உருவாகியிருப்பதாகவே தோன்றுகிறது. போராட்டத்துக்கான காரணங்களும் விடுதலை வேட்கையும் இலங்கையில் வலுவாகவே உள்ள நிலையில், போராட்டத்தின் மாற்றுவழிகள்பற்றிய சிந்தனை, மாற்றத்துக்கான வித்தாக அமையும் என்று நம்பிக்கைகொள்ள இடம் இருக்கிறது.



ஹொஸ்னி முபாரக்

# எனது மண்ணிலேயே எனது உயிரை விடுவேன்

கெய்ரோவில், இராணுவ அணிவகுப்பு ஒன்றில் எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இஸ்லாமிய தீவிரவாதிகளால் 1981ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டபோது, அவரது அருகில் அமர்ந்திருந்த துணை அதிபர் ஹொஸ்னி முபாரக் அந்தத் துப்பாக்கி வேட்டுகளில் காயங்கள் எதுவுமின்றியே உயிர் தப்பினார். மக்களிடத்திலும் சர்வதேச அரங்கிலும் பெரிதும் அறியப்பட்டிராத அவர், அந்தப் படுகொலையின் பின்னர் எகிப்தின் ஜனாதிபதியாகியபோது, இத்துணை நீண்டகாலம் அப் பதவியில் அவர் நீடிப்பார் என்று எவருமே எண்ணவில்லை. 82 வயதான ஹொஸ்னி முபாரக், எகிப்தில் இப்போது கிளர்ந்த மக்கள் பேரெழுச்சியில் பதவியைத் துறக்கும்வரை 30 ஆண்டுகள் அதிகாரத்திலிருந்தார்.

இந்தக் காலப்பகுதியில் முபாரக் ஆறு தடவைகள் அவர்மீதான கொலை முயற்சிகளில் உயிர் தப்பினார். 1995இல் ஆபிரிக்க நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக எதியோப்பியா சென்றிருந்த வேளையில், தலைநகர் அடிஸ் அபாபாவில் அவரது சொகுசு கார்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மயிரிழையில் அவர் உயிர் தப்பினார்.

மேலை நாடுகளின் நம்பிக்கைக்கு உரிய ஒருவராக அவர் தன்னை நிலைநாட்டியபோது, அண்மைக்காலங்களில், ஜனநாயகவழி மாறுதலுக்கான நிர்ப்பந்தம் உள்நாட்டில் மாத்திரமன்றி, அமொரிக்காவிடமிருந்தும் எழுவதை அவர் உணர்ந்தார். அதனைச் சமாளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டார்.

அரபு-ஆங்கிலேய பெற்றோர்களின் புதல்வியான சூசனை மணந்த முபாரக்குக்கு இரு புதல்வர்கள் உள்ளனர். காலை 6 மணிக்கே தனது அலுவல்களை திட்டமிட்டு மேற்கொள்ளும் பழக்கமுடையவரான இவர், புகைத்தல், மதுபான பழக்கங்கள் அற்றவர்.

கெய்ரோவையடுத்த சிறு கிராமமொன்றில் 1928ஆண்டு முஹமட் ஹொன்சி சயிட் முபாரக் பிறந்தார். பதவியை விட்டு விலகியவேளையில் பெப்ரவரி முதலாம் தேதி தனது உரையில், "...எனது நாட்டுக்காக நான் போரிட்டேன்; அந்த மண்ணையும் அதன் இறைமையையும், நலன்களையும் பாதுகாத்தேன்; அந்த மண்ணிலேயே என் உயிரையும் விடுவேன்" என்று கூறினார். செங்கடல் கரையோர உல்லாச மாளிகையில் அஞ்ஞாதவாசம் செய்யும் முபாரக், இருதய நோய் காரணமாக கெய்ரோ மருத்துவ மனையொன்றில் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஏப்ரல் 19ஆம் தேதி, ஊழல் விசாரணைகள் தொடர்பில் நீதிமன்றம் ஒன்றில் ஆஜராக அவருக்கும் அவரது இரு புதல்வர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இயற்கை எனும் மகா சக்தி

## இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் மீண்டும் ஒரு பேரழிவு

ராஜலக்ஷ்மி சிவலிங்கம்

நண்பா, திரும்பிப் போக முடியுமா?
சங்கீதம் மௌனத்திற்கு
பறவைகள் முட்டையின் பாதுகாப்புக்கு
நாம் தாயின் கருப்பையின் பரிவுக்கு
எரியும் இந்த உலகம் விரட்டுகிறது
-கவிஞர் சுகுமாரன்

வளர்ச்சி, முன்னேற்றம், ஒற்றுமை, தேசபக்தி, உழைப்பு, சுறுசுறுப்பு, தொழில்நுட்பத் திறன், தொழில்நுட்பப் பயன்பாடு... ஒரு நாட்டை வளர்ச்சிபெற்ற நாடாகக் காட்டக்கூடிய எந்த ஒரு விஷயத்தைப் பற்றிய பேச்சு எழுந்தாலும் ஜப்பான் என்ற பெயர் அடிபடாமல் அது நிறைவடைவதில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின், நொருங்கிப்போய், அனைத்தையும் இழந்த நிலையில் இருந்த ஜப்பான், அதிலிருந்து மிக குறுகிய காலத்திலேயே எழுந்து, நிமிர்ந்து, கம்பீர நடைபோட்டு, தனது மகத்தான தொழில்நுட்ப வல்லமையால் உலகின் பணக்கார நாடு என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. செயற்கையான அனைத்து முறைகளாலும் பெற்றுவரும் இந்த அசுர வளர்ச்சி, இயற்கைக்குச் சவால் விடுவதாகவே இருக்கிறது. ஆனால், அறிவியலும் மனித முயற்சிகளின் உன்னதங்களும் எவ்வளவுதான் உயரப் பறந்தாலும், இயற்கை என்னும் மகா சக்தியின்முன் எல்லாமே சிறு பதர்கள்தாம் என்பதை இயற்கை உணர்த்தி விட்டது.

நெருப்பை நீர் அணைக்கும். ஆனால், ஜப்பானில் நிகழ்ந்த பேரழிவைப் பார்த்தால், இரண்டும் கை கோர்த்துக் கொண்டு, அந்த நாட்டையே புரட்டிப் போட்டுக்கொண்டிருப்பது தெரியும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜப்பான் மீண்டும் ஒருமுறை மிகப் பெரிய அழிவை எதிர்கொண்டுள்ளது. ஜப்பானுக்கு சுனாமி, நிலநடுக்கம், எரிமலை எதுவுமே புதிதல்ல. நெருப்பு வளையம் எனப்படும் பசிபிக் தகட்டின்மீது அமைந்துள்ள நாடு என்பதால் இவை சகஜம்தான். ஆனால், மார்ச் 11 மதியம் 2.30 மணிக்கு வடக்கு ஜப்பானில் நேர்ந்த நிலநடுக்கம் இதுவரை நிகழ்ந்ததிலேயே மிக மோசமானது என்று கூறப்படுகிறது. சுமார் ஆயிரத்து 326 வருடங்களுக்குமுன் ஏற்பட்டதாகக் கூறப்படும் 'ஹகுவா மஹா' சுனாமி, 1923ஆம் ஆண்டு ஏற்பட்ட 'கான்டோ' நிலநடுக்கம் என்பவற்றோடெல்லாம் இப்போது ஏற்பட்ட நில நடுக்கத்தை நிபுணர்கள் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

ஜப்பான் வரலாற்றிலேயே மிக மோசமான பேரழிவை ஏற்படுத்தியது கான்டோ நில நடுக்கமும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியும்தான். அப்போது, 1.43 லட்சம் மக்களை பலிகொண்டது அந்த இயற்கைச் சீற்றம். அப்போது ஏற்பட்ட பூகம்ப அதிர்வின் அளவு 7.9 ரிக்டர் அளவுதான். ஆனால், இந்த முறை வெடித்துக் கிளம்பிய பூமியின் அதிர்வு 8.9 ரிக்டர். தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி, சுனாமி எச்சரிக்கைத் தொழில்நுட்பம், நிலநடுக்கங்களைத் தாங்கக்கூடிய கட்டிட அமைப்பு, நிலநடுக்கங்களின்போது தற்காத்துக்கொள்வது எப்படி என்பதை மக்கள் அறிந்து வைத்திருப்பது ஆகியவை பெரும் உயிரிழப்புகளைத் தடுத்திருப்பது ஆறுதலான விஷயம்தான். இதேபோன்ற ஓர் இயற்கைச் சீற்றம் இந்தியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் நிகழ்ந்திருந்தால் லட்சக்கணக்கான உயிர்ப் பலி நிகழ்ந்திருக்கும். ஆனாலும், மற்றைய சேதங்களை எதனாலும் தடுக்க முடியவில்லை. "இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் ஜப்பான் சந்திக்கும் மிக மோசமான பேரழிவு இது" என்று அந்நாட்டுப் பிரதமரே அறிவித்திருக்கிறார். பல லட்சம் கோடி பணத்தைக் கொட்டிக் கட்டமைப்பு வசதிகளைச் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. இதனால் நாட்டில் எழுந்துள்ள அச்சம், பொருளாதாரத்தை நொருக்கிவிடும் அபாயத்தையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

அபார இயற்கை வளங்கள் ஏதும் இல்லாத ஜப்பான், இரண்டாம் உலகப் போரின் மாபெரும் வீழ்ச்சிக்குப் பின் உலகின் பெரிய பொருளாதார வல்லரசுகளில் ஒன்றாக உயரக் காரணமே, அந்த நாட்டின் தொழில்துறை வளம்தான். அதற்கு உயிர்நாடி மின்சாரம். ஆனால், நாட்டின் பெரும் பகுதி எரிசக்தித் தேவைக்கு இறக்குமதிப் பெற்றோலிய பொருள்களையே ஜப்பான் நம்பியிருக்கவேண்டியிருந்தது. அனல் மின் நிலையங்களோ, புனல் மின் நிலையங்களோ அமைக்கப் போதிய வளங்கள் இல்லாத நிலையில், தங்கள் நாட்டை அழித்த அணு சக்தியையே ஆக்க சக்தியாகப் பயன்



**தங்கள் நாட்டை அழித்த அணு சக்தியையே ஆக்க சக்தியாகப் பயன்படுத்தினார்கள் ஜப்பானியர்கள். கடின உழைப்பாலும் அறிவியல் திறனாலும் அணு சக்தித் துறையில் ஜப்பான் சாதனைகள் படைத்தது. உலகின் மூன்றாவது பெரிய அணுசக்திப் பயனீட்டாளராக உருவெடுத்தது**

65 வருடங்களுக்குப் பிறகு ஜப்பான் மீதான மூன்றாவது அணுதாக்குதல் இது

படுத்தினார்கள் ஜப்பானியர்கள். கடின உழைப்பாலும் அறிவியல் திறனாலும் அணு சக்தித் துறையில் ஜப்பான் சாதனைகள் படைத்தது. உலகின் மூன்றாவது பெரிய அணுசக்திப் பயனீட்டாளராக உருவெடுத்தது.

ஜப்பானின் 29 சதவீத மின் தேவையை நிறைவுசெய்வது அணுமின் நிலையங்கள்தாம். ஜப்பானில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அணுமின் நிலையங்கள் உள்ளன. பூகம்பம் மற்றும் சுனாமி தாக்குதலால் குளிரூட்டிகள் செயல்பட மறுத்தன. அணுமின் நிலையங்களில் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியதன் தொடர்ச்சியாக புகுஷிமாவில் உள்ள அணு உலைகள் ஒவ்வொன்றாக வெடிக்கத் தொடங்கின. அந்த இடத்திலிருந்து கதிர் வீச்சு பரவ ஆரம்பித்தது. இது, ஆசிய நாடுகள் அனைத்தையுமே அச்சத்தில் உறைய வைத்திருக்கிறது. பல லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டாலும், பல மைல்கள் தூரத்துக்கு கதிர் வீச்சு பரவியிருப்பது தெரியவந்திருக்கிறது. கடல்வழியே பரவும் கதிர்வீச்சு, இந்தியாவில்கூட பரவலாம் என நிபுணர்கள் அச்சம் தெரிவித்திருக்கிறார்கள். அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது யாருமே கணிக்க முடியாத விஷயம். இது உடல் நலத்தைக் கடுமையாகப் பாதிக்கும். பரவிவரும் கதிர்வீச்சின் அளவு உயிருக்கு ஆபத்தை விளைக்கும் அளவுக்கு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கதிர்வீச்சு அபாயம் இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்பதும் யாருக்கும் தெரியாது.

இங்கிருந்து வெளியேறும் ஐதரசன், ஜப்பானின் ஒரு பகுதியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. அணு உலையின் துகள்கள் காற்றில் வேகமாகப் பரவிவருகின்றன. இரண்டாம் உலகப் போரின்போது ஏற்பட்ட நாசத்தைவிட அதிகமான துயரத்தைச் சந்தித்துள்ளது ஜப்பான். இயற்கைப் பேரிடர்க

ளின் தாக்குதல்களிலிருந்து மீள்வதற்கு முன்பே, அணுஉலைகள்மூலம் அடுத்தடுத்து பேராபத்தை சந்தித்துப் போராடிவருகிறது ஜப்பான். இதில் ஏராளமான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.



"65 வருடங்களுக்குப் பிறகு ஜப்பான் மீது நிகழ்த்தப்பட்ட மூன்றாவது அணு தாக்குதல் இது. ஆனால், இம்முறை நாங்களே எங்கள்மீது போட்டுக்கொண்டோம். ஹிரோஷிமா, நாகசாகிமீது குண்டுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டதைப் போன்றே, அணுஉலை வெடிப்புகளும் மிகுந்த வலி ஏற்படுத்துகிறது" என்று ஹிரோஷிமா அணுத் தாக்குதலிலிருந்து தப்பி வாழ்ந்துவரும் 82 வயதான கெஜிரோ மட்சுஷிமா என்னும் ஜப்பானியர் வேதனையோடு கூறியிருக்கிறார்.

தொழில் துறை சார்ந்த முன்னேறிய நாடு என்ற அந்தஸ்தினை எட்ட, அணு சக்தி எரிபொருள்தான் சரியான தீர்வு என்பதற்கு முன்னுதாரணமாக இருந்த ஜப்பானின் புகுஷிமா அணு உலையில் பற்றிய தீ, உலகையே பீதியில் உறையவைத் திருக்கிறது. புகுஷிமா அணு உலைக்கு நேர்ந்திருக்கும் நிலை, இத்தனை நாள்கள் அணு சக்திக்கு ஆதரவாகப் பேசிக் கொண்டிருந்தவர்கள் முகத்தில் கரியைப் பூசியுள்ளது. அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நாட்டின் வயிற்றிலும் புளியைக் கரைத்துள்ளது.

**வெறும் இயற்கைச் சீற்றம் என்று வருத்தப்பட்டுவிட்டு, மறந்துவிடும் விடயம் அல்ல. உலகுக்கு இயற்கை கற்பிக்கும் ஒரு பாடம் இது**

உலகில் 30 நாடுகள் அணு மின் நிலையங்களை நிறுவியிருக்கின்றன. இன்னும் 17 நாடுகள் இதில் அதீத ஆர்வம் காட்டிவருகின்றன. அணு மின் நிலையங்களை நிறுவும் நாடுகள், அதில் மின்சாரம் எடுப்பதைக் காட்டிலும் அணுகுண்டு தயாரித்து, அண்டை நாடுகளை பயமுறுத்துவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கின்றன. பிரான்ஸ் தனது மின்சக்தித் தேவையில் 75 சதவீதத்தை அணு மின் நிலையங்களிலிருந்தே பெறுகிறது. அமெரிக்கா 20 சதவிதம். இந்தியா இந்த விஷயத்தில் குறைவுதான்; வெறும் 2.2 சதவீதம்.

ஜப்பானைத் தாக்கிய நிலநடுக்கம், அதையடுத்த சுனாமி, அதன் விளைவான அணு உலைகள் வெடிப்பு இவை அனைத்தும் ஏற்படுத்திவரும் பாதிப்புகளை ஓரளவுக்காவது கட்டுக்குள் கொண்டுவர, போர்க்கால அடிப்படையில் ஜப்பான் இயங்கிவந்தாலும், பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை. காற்றில் கலந்து பரவிவரும் கதிரியக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதனால், ஜப்பானில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் வெளிநாட்டினரைத் தாயகம் திரும்புமாறு அந்தந்த அரசுகள் ஆலோசனை கூறிவருகின்றன. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மன் அரசுகள் ஜப்பானைவிட்டு வெளியேறுமாறு தமது பிரஜைகளுக்கு கூறிவருகின்றன. பல்வேறு நாடுகளின் விமானப் போக்குவரத்துகளும் திசை மாற்றப்பட்டன. சீன அரசு 900 சீனர்களை புகுஷிமோவிலிருந்து டோக்கியோவுக்கு இடம் மாற்றி, அங்கிருந்து அவர்களை சீனாவுக்கு அழைத்துச் செல்லத் தயாரானது.

கார்கள், நுகர் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், எஃகு போன்ற மற்றைய உற்பத்திப் பொருள்களை ஜப்பான் உலகம் முழுவதும் ஏற்றுமதிசெய்துவருகிறது. இன்று, இந்த ஏற்றுமதி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இது ஜப்பானின் பொருளாதாரத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

ஜப்பானின் பேரழிவுக் காட்சிகளைப் பார்க்கும் நாம் பாதுகாப்பாகத்தான் இருக்கிறோமா? ஜப்பானில் ஏற்பட்டுவரும் நிலநடுக்கங்கள், சுனாமி, கதிரியக்க அபாயங்கள் போன்ற பெருந்துயரங்கள் அனைத்துமே வெறும் இயற்கைச் சீற்றம் என்று வருத்தப்பட்டுவிட்டு மறந்துவிடும் சாதாரண விஷயம் அல்ல, இவை உலகுக்கே இயற்கை கற்பிக்கும் ஒரு பாடம்.

இந்தியாவுக்கு இதனால் ஆபத்து இல்லை என்று இந்திய விஞ்ஞானிகள் அறிவித்துவிட்டார்கள். ஆனால், அபாயத்துக்கான வாய்ப்புகள் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை என்பதே யதார்த்தம். 2004இல் சுனாமி இந்தியாவைத் தாக்கியபோதே அணு உலைகள் விஷயத்தில் இந்தியா எச்சரிக்கையாக இருந்திருக்கவேண்டும். ஆனால், அதன் பிறகுதான் அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. மக்கள் நலனைப் புறக்கணிக்கும்விதமாக அணு விபத்து இழப்பீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டது. ஜப்பானுடன் ஒப்பிட்டால், இந்திய அணு உலைகள் வலுவற்றவை; பல நூறு மடங்கு பேராபத்துகளை உருவாக்கக்கூடியவை.

இந்தியா விழித்துக்கொள்ள இதுதான் கடைசித் தருணம் என்கிறார் அணுசக்திக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான தேசிய கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் எஸ். பி. உதயகுமார். பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "அணு சக்தி எந்த விதத்தில் பார்த்தாலும் அபாயகரமானதே. அதை

ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியும் என்பது வடிகட்டிய பொய். இயற்கை இதைத்தான் புகுஷிமா சம்பவம் மூலம் மனித குலத்துக்கு மீண்டும் ஒருமுறை மிக ஆணித்தரமாக உணர்த்தியுள்ளது. இதுவரை புகுஷிமா அணுஉலையைச் சுற்றி கதிரியக்க பாதிப்பு உள்ள இடங்களில் இருந்து 6 லட்சம் மக்களை வெளியேற்றியிருக்கிறது ஜப்பான். கொஞ்சம் கொஞ்சமாக அந்த அணு உலை உருகி, கதிரியக்கப் பேரபாயமாக மாறிவிடும். இனி, அந்த இடம் எந்தக் காலத்திலும் மக்கள் திரும்பமுடியாத இடமாக மாறிவிடும். ஆனால், கதிரியக்கப் பாதிப்புகளை தலைமுறை தலைமுறையாக அவர்கள் அநுபவிக்க வேண்டிவரும். இந்தியாவில் இப்படி ஒரு நிலையைக் கற்பனை செய்துபாருங்கள்" என்கிறார் இவர்.

இப்போது இந்தியாவில் 20 அணுமின் நிலையங்கள் உள்ளன. இன்னும் 18 மின் நிலையங்களை அமைக்கும் தீவிர முயற்சியும் நடைபெற்றுவருகிறது. தற்போது ஐந்து அணு மின் நிலையங்கள் கட்டப்பட்டுவருகின்றன. தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் நிலையமும் இவற்றில் ஒன்று, இந்த ஆண்டே இது செயல்படத் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர, உலகிலேயே மிகப் பெரிய அணு மின் நிலையம் ஒன்றை அமைக்கும் ஆர்வமும் இந்தியாவுக்கு முளைத்திருக்கிறது.

இந்திய அணு மின் நிலையங்களில் பிரச்னை என்னவெனில், இவை அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை. வேறுபல நாடுகளில் இவை முழுக்க முழுக்க அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. ஆனால், இந்தியாவோ வெளிநாட்டுத் தனியார் நிறுவனங்களுக்கு இவற்றைத் தாரை வார்த்திருக்கிறது. அணு விபத்து இழப்பீட்டு மசோதா விஷயத்தில் வெளிநாடுகள் விதித்த அத்தனை நிபந்தனைகளையும் மண்டியிட்டு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜப்பான் அணு உலைகள் 8.5 ரிக்டர் அளவுவரை பூகம்ப அதிர்வுகளைத் தாங்கவல்லவை. ஆனால், இந்தியாவில் உள்ள அணு உலைகளோ 5.6 ரிக்டர் அளவு வரையிலான பூகம்பங்களை மட்டுமே தாங்கக்கூடியவை. தவிர, இந்தியாவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுலாக்கம் என்பது குரூரமான நகைச்சுவை. பல துறைகளில் இது வெறும் ஏட்டளவில் மட்டுமே இருப்பது வெளிப்படையான உண்மை. கல்பாக்கத்தில் ஒருமுறை விபத்து ஒத்திகை நடந்தபோது, அணு மின் நிலையத்தில் இருந்த 'வாக்கி டோக்கிகள்' செயல்படவில்லை.

இந்தியாவில் சுனாமி ஏற்பட்டபோது கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி யாரும் பேசவில்லை. பாதிப்பு எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டாலும் அது உண்மையல்ல. இந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இன்றும்கூட கதிர்வீச்சுக் காணப்படுகிறது. அணு சக்தித் தொழில்நுட்பத்துக்கு எதிராக பல ஆண்டுகளாகப் போராடிவரும் சூழல் பாதுகாப்புக்கான மருத்துவக் குழுவின் உறுப்பினர், மருத்துவர் ஜீ. புகழேந்தி, இப்பகுதியில் உள்ள மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார். கடந்த ஆண்டு சதுரங்கப்பட்டினம் என்ற கிராமத்தில் இந்த அமைப்பின் மருத்துவ குழு ஆய்வு மேற்கொண்டது. அந்த ஆய்வில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏராளமானோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது என்று புகழேந்தி கூறுகிறார்.

இயற்கைச் சீற்றங்கள் என்பது எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. ஜப்பான்போல நிலநடுக்க அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் இந்திய அணு மின் நிலையங்கள் இல்லை' என நிபுணர்கள் சொன்னாலும், இயற்கை என்பது எல்லா சக்திகளுக்கும் மேலானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மரபுசாரார் எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவது குறித்து மேலைநாடுகள் பலவும் சிந்தித்துவரும் வேளையில், பல தலைமுறைகளைத் தாண்டியும் கதிர்வீச்சு அபாயத்தை வெளிப்படுத்தி, மனித இனத்தை வதைக்கும் அணு சக்தி நமக்குத் தேவையா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இந்தியாமீது மற்றைய நாடுகள் அணு ஆயுத தாக்குதல் நடத்திவிடக்கூடாது என்பதற்காக, ஏராளமான அணு ஆயுதங்களை உருவாக்கியுள்ளது இந்தியா. இதையும் மீறி யாராவது தாக்குதல் நடத்தினால், அதை வழிமறித்துத் தாக்க ஏராளமான ஏவுகணைகளையும் தயாரித்துவருகிறது. ஆனால், நாடெங்கிலும் நிறுவப்பட்டிருக்கும் அணுஉலைகள் மீது இயற்கை குறிவைத்தால், அதை வழிமறித்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு இருக்கிறதா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. அதற்கான திறன்களை இந்தியா வளர்த்துக்கொள்கிறது என்றே வைத்துக்கொண்டாலும், இயற்கையின் சீற்றம் எப்போது, எந்த அளவுக்கு இருக்கும் என்று தெரியாத நிலையில், எந்த முன்னெச்சரிக்கையும் போதுமானதாக இருக்கமுடியாது என்ற உண்மையை புறக்கணித்துவிட முடியாது. இயற்கைப் பேரழிவு எல்லாவற்றையும்தான் நாசமாக்கும். அதற்காக எதுவுமே செய்யாமல் இருக்கமுடியுமா என்ற கேள்வி எழலாம். நாசமாவது கட்டிடங்களாகவோ பாலங்களாகவோ சாதாரண தொழிற்கூடங்களாகவோ இருந்தால் அவற்றின் பாதிப்பு என்பது வேறு. அணு உலைகளாக இருந்தால் அதன் பாதிப்பு என்பது முற்றிலும் வேறு. இந்த அடிப்படையான உண்மையைப் புரிந்துகொண்டு செயல்படும் விவேகம் எப்போது உலகிற்கு வரப்போகிறது?

மனிதன் தன் பேராசையால், முன்னேற்ற வெறியால், விஞ்ஞானத்தின் உதவியோடு, உருவாக்கிக்கொண்டிருக்கும் இயற்கைக்கு எதிரான அனைத்தையும் பொறுத்துக்கொண்டு எல்லையற்ற வளங்களை வாரித்தந்தவாறு இருக்கிறது இந்த பூமி. ஆனால், மனிதனின் பேராசை எல்லையில்லாமல் போய்க்கொண்டே இருக்கிறது. அவ்வப்போது, சுனாமியாக, பூகம்பமாக, எரிமலையாக சீறி எழுவதன்மூலம் இயற்கை கூறும் செய்தியை மனிதன் புரிந்துகொள்வதே இல்லை. இயற்கைச் சீற்றங்களோடு மனிதனின் பேராசையினால் உருவான ஆபத்துகளும் சேர்ந்துகொள்வதால், அழகான, அமைதியான இந்த பூமி, மாபெரும் துயரத்துக்குக் காரணமாகி, வாழலாயக்கற்ற இடமாக ஆகிவிடும் அபாயம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுதல் என்பதுதான் அனைத்து உயிரினங்களுக்குமான அடிப்படை ஆதாரமான உள்ளுணர்வு. வசதி, வளம், அதிகாரம், வல்லாண்மை ஆகிய வேட்கைகளின் காரணமாக மனித இனம் இந்த அடிப்படை உள்ளுணர்வின் குரலைக் கேட்கமுடியாத தூரத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறது. மனித இனத்தின் ஒரு பிரிவினர் தங்களது அதீதமான வேட்கைகளுக்காக உலகைச் சூறையாடலாம். அதில் அவர்களுக்கு வெற்றியும் கிடைக்கலாம். ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டுப் போராடிப்பெறும் பலன்களை அநுபவிக்க பூமி இருக்கவேண்டும்; அதில் வாழ உயிர் இருக்கவேண்டும். இயற்கையின் மேன்மையையும் வல்லமையையும் உணர்ந்து பணியும் அடக்கம் மனிதனுக்குக் கூடுமா? வல்லாண்மைக்கான வேட்கையை உயிர்த்திருப்பதற்கான வேட்கை பதிலீடு செய்யுமா? வளமை வெறிகொண்ட, அதிகார பசிகொண்ட மனித இனத்துக்கு விவேகம் வருமா? பூமியின் அழகையும் அமைதியையும் என்றேனும் நம்மால் மீட்டெடுக்க முடியுமா?

கேள்விகள் காற்றில் அலைகின்றன. ■




## சர்வதேச கப்பல் போக்குவரத்தில்

# சோமாலி கடல் கொள்ளையரின் அதிகரிக்கும் அச்சுறுத்தல்

21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோமாலியாவில் ஏற்பட்ட இரண்டாவதுகட்ட உள்நாட்டு யுத்தத்துடன் ஆரம்பித்த சோமாலிய கடற்கொள்ளை, இன்று சர்வதேச கப்பல் போக்குவரத்தில் பெரும் அச்சுறுத்தலாகிறது. 2005ஆம் ஆண்டில் சோமாலி கரையையடுத்த கடற்பிராந்தியத்தில் தொடங்கி, இந்தியா, மாலைதீவு கடற்பிராந்தியங்கள்வரை இது இப்போது விசாலமடைந்திருக்கிறது. சோமாலியாவையடுத்த ஏடன் குடா பகுதியில் இக் கடற்கொள்ளையை முறியடிப்பதற்காக சர்வதேச கூட்டுப்படைகள், கடல் பாதுகாப்பு ரோந்து வலயம் ஒன்றை அமைத்துள்ளன.

இந்தியாவின் கப்பல் வர்த்தக பாதையும் பெருமளவில் ஏடன் குடாவைக் கடந்தே செல்வதில், அதிகரிக்கும் இக் கடற் கொள்ளை இந்தியாவின் கவனத்தையும் தூண்டியிருந்தது. ஆனால், இப்போது வெளியாகியுள்ள ஒரு புதிய தகவல் இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் விசனத்தை ஏற்படுத்துகிறது. இந்திய கடற் பிராந்தியத்துக்கு வெளியே இயங்கும் சோமாலிய கடற்கொள்ளையர்களுக்கு இலங்கைக் கடற்படை ஆதரவு வழங்குகிறது என்பது அச் செய்தி.

ஆனால், உடனடியாகவே இலங்கை கடற்படை இதனை வன்மையாக மறுத்தது. இலங்கையிலிருந்து 70 கடல் மைல் தொலைவிலேயே சோமாலி கடற்கொள்ளையர்கள் இயங்குவதாகவும் அது தெரிவித்தது.


இலங்கை துறைமுகத்தில் ஏற்கெனவே சீன நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதும், இப்போது, சோமாலி கடற்கொள்ளையர்களின் இவ் வருகையும், இந்திய சரக்குக் கப்பல்களின் நடமாட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தி, அதன் போட்டியாளர்களுக்கு உதவிபுரியும் வகையிலான பாரிய திட்டத்தின் ஓர் அங்கமா என்பதில் இந்தியா கரிசனை கொள்கிறது.

முன்னர், இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகளை குற்றம் சுமத்திய விதத்தில் சோமாலிய கடற் கொள்ளையர்களுக்கான இலங்கைக் கடற்படையின் இந்த ஆதரவும் இலங்கையின் நடவடிக்கைகளுக்கு சிலவிதங்களில் வாய்ப்பாகலாம் என கருதப்படுகிறது. இந்தியா



# இலங்கை கடற்படை கொள்ளையர்களுக்கு உதவுவதாக வெளிவரும் புதிய செய்தி இந்தியாவுக்கு விசனத்தை ஏற்படுத்துகிறது

**சாரங்கன்**




வின் மேற்குக் கரைப் பகுதிகளிலேயே பொதுவாக இயங்கிவந்த சோமாலி கடற் கொள்ளையர்கள், இலங்கை கடற்படையின் அநுசரணை கிட்டின் தமது நடவடிக்கைகளை இந்தியாவின் கிழக்கு பகுதிகளிலும் அவர்கள் விஸ்தரிப்பதற்கு அது வாய்ப்பளிக்கும். இப் பிராந்தியம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தக பாதைகளை இணைக்கிறது.

ஜனவரி பிற்பகுதியில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை மீன்பிடி படகு ஒன்றைக் கைப்பற்றிய சோமாலி கடற் கொள்ளைக்காரர்கள் படகிலிருந்த இரு மீனவர்களைச் சுட்டுக் கொன்றபின், மீதமான மூவரையும் படகையும் சோமாலியாவுக்கு கொண்டு சென்றனர். இவர்கள் மூவரும் பெப்ரவரி பிற்பகுதியில் பணய கோரிக்கை எதுவுமின்றியே விடுதலை செய்யப்பட்டனர். கொள்ளைக்காரர்கள், ஈரானிய படகு என்று நினைத்தே தமது படகைக் கைப்பற்றியதாகவும், 'இலங்கையும் சோமாலியாவும் ஒரேமாதிரியான நாடுகளே; உங்களிடமும் எம்மைப் போலவே பணம் இல்லை' என்று கொள்ளைக்காரர்கள் கூறியதாகவும், விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர். இதேவேளை, ஜனவரி 29, பெப்ரவரி 6 தேதிகளில் இந்திய கடல் படையும் இந்திய கரையோர காவல் படையும் 43 சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களை லட்சதீவு கரையோரமாக கைதுசெய்தன.

வெளிநாட்டு வர்த்தக கப்பல் ஒன்றைக் கடத்த முயன்றவேளையிலும், மற்றொரு கிரேக்க கப்பலில் 24 தாய்லாந்து பிரஜைகளை பணய கைதிகளாக வைத்திருந்த வேளையிலும் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கடந்த மாதம் இந்திய கரையிலிருந்து 600 கடல் மைல்கள் மேற்கே, அராபிய கடலில் 13 பணய கைதிகளுடன் 61 கொள்ளைக்காரர்களை இந்திய கடற்படை கைதுசெய்தது.

அதிகரிக்கும் இச் சோமாலிய கடற் கொள்ளை தொடர்பில் சர்வதேச கப்பல் போக்குவரத்து நிறுவனம், உலக உணவுத் திட்டம் உள்பட, பல சர்வதேச நிறுவனங்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளன. கப்பல் கட்டணங்களை அதிகரிக்கவைத்து, கப்பல்மூலமான உணவு உதவி விநியோகத்தையும் இது பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது. உலக உணவு திட்டத்தின் 90 வீதமான விநியோகம் கடல் மார்க்கமாகவே நிகழ்கையில், சோமாலி கடல் கொள்ளைக்காரர்களின் பகுதியூடு செல்லும் இக் கப்பல்களுக்கு இப்போது இராணுவ பாதுகாப்பு அவசியமாகிறது.

ஏடன் குடா பகுதியிலும் இந்து சமுத்திர தென்பகுதியிலும் சுமார் 30 கடற்படைப் படகுகள் தற்போது இக் கடற்கொள்ளைக்கு எதிரான ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தியா யுத்த கப்பல் ஒன்றை இப் பிராந்தியத்தில் நிறுத்தியுள்ள

போது, ரஷ்யாவும் தனது ஒத்துழைப்பை இதில் அளிக்கிறது. சோமாலி கடற் பிராந்தியத்துள் பிரவேசிப்பதற்கான ஐ. நா. சபையின் அங்கீகாரம் இந்திய கடற்படைக்கு 2008இல் வழங்கப்பட்டது.

உள்நாட்டு யுத்தம் சோமாலி கரையோர பாதுகாப்பை சீர்குலைத்ததில், அதனைச் சாதகமாக்கி வெளிநாட்டு மீன்பிடி கப்பல்கள் சட்டவிரோதமாக மீன்பிடிப்பதும் நச்சு கழிவுகள் வீசப்படுவதும் இப் பிராந்தியத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. இது, தமது கடல் வளத்தைப் பாதித்தபோது, அதனால் பாதிப்புற்ற உள்நாட்டு மீனவர்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு, இந் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்படத் தொடங்கியதில்தான் சோமாலியர்களின் இக் கடல் கொள்ளை நடிவடிக்கை ஆரம்பமானது. தமது சொந்த கடற்பரப்பின் தேசிய பாதுகாப்பாகவும், தமது கடல் வளங்களைக் கொள்ளையடிப்பதற்கான தண்டனையாகவும் அதற்கான நஷ்ட ஈடாகவும் அவர்கள் தமது நடவடிக்கையை நியாயப்படுத்தினார்கள். உள்ளூரில் அவர்களுக்கு இதில் பெருமளவு ஆதரவும் இருந்தது. உள்ளூர் மீனவர்கள் குறிப்பாக, ஹவியி என்ற குலத்தினர் இக் கடல் கொள்ளையில் ஈடுபடத் தொடங்கினர்.

பாரம்பரிய கடற்கொள்ளைகள் போலன்றி, சோமாலி கடற்கொள்ளை கடத்தலும் கப்பம் கோருவதுமாய் அமைகிறது. தொடக்கத்தில் ஏடன் குடாவில் செல்வந்த கப்பல்களை இலக்குவைத்து, அமைதியான விதத்திலேயே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. உலக வர்த்தக கப்பல் போக்குவரத்தில் 20 வீதமான கப்பல்களின் பாதையாக ஏடன் குடா விளங்குகிறது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இக் கடல் கொள்ளைக்கு எதிராக ஏடன் குடா பகுதியில் கடற்படைக் கப்பல்களின் அறிமுகத்தையடுத்து, கொள்ளைக்காரர்கள் தமது தாக்குதல் எல்லையை விஸ்தரித்தனர். இதற்கு வசதியாக முன்னர் கைப்பற்றிய சக்திவாய்ந்த ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை 'தாய்க் கப்பல்'களாக கடலில் நிறுத்தி, அவற்றிலிருந்து சிறிய விசைப் படகுகளில் தமது நடவடிகைகளை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

சோமாலி கடற்கொள்ளைக்காரர்களின் நடவடிக்கை ஒருவித கட்டுப்பாட்டு ஒழுங்கைக்கொண்டது. பொதுவாக, கப்பல்கள்மீது எச்சரிக்கை வேட்டுக்களைத்தவிர, துப்பாக்கிப் பிரயோகம் எதனையும் மேற்கொள்ளாமல் அவற்றைக் கைப்பற்றுவார்கள். மாலுமிகளை துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கமாட்டார்கள். சாத்தியமான அதிகூடுதல் அளவு பணய ரொக்கத்தை பெற்றுக்கொண்டு, கப்பலையும் சரக்குகளையும் மாலுமிகளையும் நல்லவிதத்தில் விடுவிப்பதே அவர்களின் இலக்கு. பணய கைதிகளான மாலுமிகளை அவர்களது கப்பல்களிலேயே வைத்திருந்து உணவளிப்பார்கள். சில சமயங்களில் இறைச்சிக்காக ஆடுகளைக் கொணர்ந்தும் சமைப்பார்கள்.

பின்னர் நிகழ்வதெல்லாம் பேரத்தில் தங்கியிருக்கிறது. பொதுவாக, இக் கொள்ளைக் கடத்தல் இரண்டு அல்லது மூன்று மாதங்கள்வரை நீடிக்கும். தாய்வான் மீன்பிடி படகு ஒன்று 10 மாதங்கள்வரை தடுத்துவைக்கப்பட்டு, கைப்பற்றப்பட்ட மாலுமிகளுடன் தாய்க் கப்பலாக அது பயன்படுத்தப்பட்டது. போஷாக்கின்மையிலும் நோயிலும் மூன்று மாலுமிகள் இறந்துவிட்ட பின்னர், கடந்த ஆண்டு பெப்ரவரியில் அப்படகு விடுவிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பிடிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 600பேரில் பெரும்பாலானோர் பேரங்களுக்குப் பின்னர் பாதுகாப்பாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். சுமார் 300 பேர்வரை வன்முறைகளிலோ அல்லது கவனிப்பின்றியோ இறந்துபோயுள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் சோமாலி கரையோர பாதுகாப்பை சீர்குலைத்ததில், அதனைச் சாதகமாக்கி வெளிநாட்டு மீன்பிடி கப்பல்கள் சட்டவிரோதமாக மீன்பிடிப்பதும் நச்சு கழிவுகள் வீசப்படுவதும் இப் பிராந்தியத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. இது, தமது கடல் வளத்தைப் பாதித்தபோது, அதனால் பாதிப்புற்ற உள்நாட்டு மீனவர்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு, இந் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்படத் தொடங்கியதில்தான் சோமாலியர்களின் இக் கடல் கொள்ளை நடிவடிக்கை ஆரம்பமானது

பேரத்தில் பண கொடுப்பனவுகளே இடம்பெறுகின்றன. சோமாலியாவில் வங்கி முறைமை நடைமுறையில் சீராக இல்லாததும், கறுப்புப்பணம் தொடர்பான அமெரிக்க விசாரணைகளும் இதற்குக் காரணமாகும். இரு தரப்பினருக்குமிடையே தொழில்ரீதியான தரகர்கள் ரொக்க தொகையை ஒப்புக்கொண்டதும் பொதுவாக ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட பணம் வீசப்படும். 'எலெக்ரோனிக்' பணமாற்றத்தையும் இப்போது இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். 2009 ஆண்டின் தொடக்கத்தில் சராசரி ஒன்றரை மில்லியன் டொலராகவிருந்த பேரத் தொகை, ஆண்டின் இறுதியில் 3.5 மில்லியனாக உயர்ந்தது. 2010 தொடக்கத்தில் 50 நாள்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த கிரேக்க எண்ணெய்க் கப்பல் ஒன்று 5.5 மில்லியனுக்கும் ஏழு மில்லியனுக்குமிடையில் ரொக்கத் தொகை செலுத்தியதாக அறியப்படுகிறது. கடந்த ஆண்டு நவம்பரில் தென்கொரிய எண்ணைய்க் கப்பல் ஒன்று மிகக் கூடுதல் தொகையாக 9.5 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டது. முதலில் 20 மில்லியன் டொலர்கள் கோரப்பட்டதாகவும், அத்தகைய ஒரு திடமான நம்பிக்கை அவர்களிடம் இருப்பதாகவும், இந்த ஆண்டில் இது இன்னமும் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

இக் கடற் கொள்ளையைத் தடுக்க ஏடன் குடா பகுதியில் தற்போது மூன்று பிரதான கடற்படைப் பிரிவுகள் இயங்குகின்றன. ஐரோப்பிய நாடுகளின் 'ஒப்பரேஷன் அற்றலான்ரா' தொடக்கத்தில் ஐ. நா. சபையின் சோமாலியாவுக்கான உலக உணவுத் திட்ட விநியோக கப்பல்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டது. இப்போது, பொதுவான கடற் கொள்ளை தடுப்பு நடவடிக்கைகளில் இது ஈடுபடுகிறது. மற்றையது, 'நேட்டோ' படைகளின் 'ஓஷன் ஷீல்ட்'. இவைதவிர, அமெரிக்கா தலைமையில் 25 நாடுகள் இணைந்த சர்வதேச அமைப்பான 'சிரிஎவ் 151' பாஹ்ரெயினில் தலைமையகத்தைக்கொண்டு செயல்படுகிறது. இவைதவிர, சீனா, யப்பான், இந்தியா, ஈரான், ரஷ்யா, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் தமது சொந்த கடற்படைகளை ஈடுபடுத்துகின்றன.

2009 இறுதிப் பகுதியிலிருந்து கடல் கொள்ளைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் கப்பல்கள் அனைத்தும் பிரிட்டனில் அமைக்கப்பட்டுள்ள 'மேக்கூரி' என்ற தகவல் மையத்துடன் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன. நாடுகளுக்கிடையிலான ராஜதந்திர உறவுகள் எப்படியிருந்தாலும், கடல் கொள்ளை பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள எந்த நாட்டு கடற்படைகளும் தமது பகை நாடுகளுடனும் தகவல் பரிமாற்றம் செய்யமுடியும். ஈரானிய யுத்த கப்பல்கள் அமெரிக்க யுத்த கப்பல்களுடன்கூட இதுதொடர்பில் தகவல் பரிமாற்றம் செய்கின்றன.

இக் கூட்டுப்படை நடவடிக்கை பயனளிப்பதாகவே இருக்கிறது. ஐந்தில் ஒரு பங்கு தாக்குதல் இதனால் குறைந்திருப்பதாக இப்போது தெரிவிக்கப்படுகிறது. பன்னிரண்டு நாடுகளில் சுமார் 700 கொள்ளைக்காரர்கள் சந்தேகத்தின்பேரிலும் குற்றவாளிகளாகவும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக ஐ. நா. சபை தெரிவிக்கிறது.

பெரும்பாலான கொள்ளையர்கள் 20 - 35 வயதை உடையவர்கள்; வட சோமாலியாவின் புன்றலாந்து பிராந்தியதைச் சேர்ந்தவர்கள். ஆயுதந் தாங்கிய சுமார் ஆயிரம் பேர், குறைந்தது ஐந்து கோஷ்டிகளாக இயங்குவதாக மதிப்பிடப்படுகிறது.

ஏடன் குடாவுக்கு வெளியே விசால மடையும் தாக்குதல்களில் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சோமாலி கரையிலிருந்து 975 கடல் மைல் தொலைவில், மடகஸ்கார் அருகிலும், கடந்த ஏப்ரலில் ஆயிரத்து 300 கடல் மைல் தொலைவில் - சோமாலியாவிலும் பார்க்க இந்தியாவுக்கு அணித்தான கடற்பகுதியிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நவீன சாதனங்களைக்கொண்ட தாய்க் கப்பல்களைப் பயன்படுத்தி, கொள்ளைக்காரர்கள் இப்போது ஒரு மாதத்துக்கும் மேலாக கடலிலேயே தங்கி, தொடர் தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள். 'ஜிபிஎஸ்' வழித்தடய சாதனங்கள் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி தமது 'இரை'யை இலக்குவைக்கிறார்கள். ரோந்து பாதுகாப்பு படைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விதிகளையும் கொள்ளைக்காரர்கள் நன்கே தெரிந்து வைத்திருக்கிறார்கள். கொள்ளைக்காரர்கள் படகு ஒன்றைக் கைப்பற்றி, பணய கைதிகளை தம்முடன் வைத்திருப்பதாக பாதுகாப்பு படைகள் நம்பினால், பாதுகாப்பு படைகள் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள முடியாது. படகு ஒன்றைக் கொள்ளைக்காரர்கள் கைப்பற்றியதும் பொதுவாக அவர்கள் 'பலமான' ஒரு நிலையை அடைகிறார்கள். கைதான மாலுமிகளை தாய்க் கப்பலில் தம்முடன் வைத்துக்கொள்வதில் கொள்ளைக்காரர்கள் தமக்கு பாதுகாப்பை தேடிக்கொள்கிறார்கள்.

தாக்குதலை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் இவர்கள் பிடிபடநேரின், தமது ஏகே 47 ரக துப்பாக்கிகளையும் ஏவுகணைகளையும் மற்றும் ஏணிகள் போன்ற தாக்குதலுக்கான தடயங்கள் அனைத்தையும் கடலுள் வீசிவிடுவார்கள். பாதுகாப்பு படையினர் கொள்ளையை முறியடித்து, கொள்ளைக்காரர்களைப் பிடிக்க நேர்ந்தாலும் அவர்கள்மீது வழக்கு தொடர்வதில் எழும் சட்ட சிக்கல்களில் பெரும்பாலான கொள்ளைக்காரர்கள் விரைவிலேயே விடுவிக்கப்பட்டுவிடுகிறாார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 700 பேர் வரை இப்படி விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். விடுதலைசெய்யும்போது, அவர்கள் தமது இடத்துக்கு போய்ச் சேருவதற்கான எரிபொருள் மற்றும் பொருள்கள் போதுமான அளவில் உள்ளனவா என்பதையும் படையினர் உறுதிசெய்து உதவுகிறார்கள். தேவையெனின் இயந்திர பழுதுபார்த்தலிலும் உதவுகிறார்கள். சில கொள்ளைக்காரர்கள் பல தடவைகளில் கைதுசெய்யப்பட்டுமிருக்கிறார்கள்.

**தொழில்ரீதியான தரகர்கள் ரொக்க தொகையை ஒப்புக்கொண்டதும், பொதுவாக ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட பணம் வீசப்படும்**

**2009 ஆண்டின் தொடக்கத்தில் சராசரி ஒன்றரை மில்லியன் டொலராகவிருந்த பேரத் தொகை, . ஆண்டின் இறுதியில் 3.5 மில்லியனாக உயர்ந்தது**

கைதுசெய்யும் மேலைநாட்டு படைகள் தமது நாடுகளில் இவர்களை விசாரணைக்கு உள்படுத்துகையில், சிறிதுகாலம் சிறைவாசத்தை அநுபவித்து, அந் நாடுகளிலேயே இவர்கள் அரசியல் தஞ்சம் கோருகிறார்கள். இதனால், பிராந்திய நாடுகளான கெனியா, தன்சானியா, சீசெல்ஸ் போன்ற நாடுகளில் விசாரணைகளை நிகழ்த்தி, சிறைத் தண்டனை விதிக்கிறார்கள்.

18 கடல் மைலுக்கு அதிகமான வேகம்; கொள்ளைக்காரர்களின் சிறு படகுகள் நெருங்காதவிதத்தில் நீர், நுரைத் தாரைகளை பயன்படுத்தல் போன்ற அறிவுறுத்தல்களை இப்போது பாதுகாப்பு படைகள் கப்பல்களின் மாலுமிகளுக்கு அறிவுறுத்துகின்றன. அண்மைக் காலங்களில் முக்கால் பங்கு தாக்குதல்களை இவை தோல்வியுறச்செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கடல் கொள்ளையை ஒழிப்பதற்கான மிகச் சிறந்த வழி, கடல் கொள்ளைக்காரர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் ஒரு நல் வாழ்வை ஏற்படுத்துவதேதான் என்று பொதுவாகவே கருதப்படுகின்றபோதும், அது சாத்தியப்படக்கூடிய விதத்திலான ஓர் அரசு சோமாலியாவில் இல்லை. உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக, 73 வீதமான மக்கள் தினசரி வருமானமாக 2 டொலர்களுக்கும் குறைவான வருமானத்தையே கொண்டுள்ளபோது, பெரும் வசதிவாய்ப்புகளுடன் சமூக அந்தஸ்தத்தையும் பெறும் கடல் கொள்ளைக் கோஷ்டிகள், இளம் வயதினரை பெரிதும் கவர்கின்றன.

ஆக, துரதிருஷ்டவசமாக இப்படியே இந்த விவகாரம் தொடர்வதைத் தான் பலரும் விரும்புகிறார்கள். கொள்ளைக்காரர்கள் இதில் செல்வத்தையும் இன்பத்தையும் பெறுகிறார்கள். கடற்கொள்ளையின் கடற்பரப்பு அதிகரித்ததில், காப்புறுதி நிறுவனங்கள் பெருமளவு அதிகரித்த வருமானத்தைப் பெறுகின்றன. கப்பல் சொந்தக்காரர்கள் 600 மில்லியன் டொலர்கள் மேலதிக காப்புறுதிக் கட்டணத்தை தமது வாடிக்கையாளர்களிடம் வசூலித்துக்கொள்கிறார்கள். ■

# ஒரு தேசத்தின் கொண்டாட்டம்

## உலக கிண்ண போட்டித் தொடர் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆசிய நாடுகளின் ஆளுமையை நிலைநாட்டியிருப்பதுடன் ஒரு நாள் போட்டிகளின் வசீகரத்தையும் மீட்டுத் தந்திருக்கிறது

அரவிந்தன்

எல்லைக் கோட்டுக்கு அருகே நின்றுகொண்டிருந்த அந்த சிறுவன் கோட்டைத் தாண்டிவந்த பந்துகளை ஆர்வமாக பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்தான். அதைவிட ஆர்வமாக, போட்டியைக் கவனித்துக்கொண்டிருந்தான். 1983இல் தனக்குப் பத்து வயதாக இருக்கும் போது இந்திய அணி உலக கிண்ணத்தை வாங்குவதை ஆவலுடன் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்கு, இப்போதும் அது போல நடக்கும் என்ற நம்பிக்கை. அவன் பந்து பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்த மும்பை வாங்கடே மைதானத்தில் அப்போது இங்கிலாந்து அணியுடன் இந்தியா அரை இறுதிப் போட்டியில் ஆடிக்கொண்டிருந்தது. இந்திய அணியின் முகம்மது அசாருத்தீன் (65), கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந் (31), கபில்தேவ் (30) ஆகியோர் மட்டுமே சொல்லிக்கொள்ளும்படி ஆடினர். இந்தியா 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. பந்து பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்த அந்த சிறுவன் ஆழ்ந்த வருத்தத்தில் மூழ்கினான்.

இருபத்து மூன்றரை ஆண்டுகள் கழித்து அந்த சிறுவன் அதே மைதானத்தில் கிண்ணத்தை ஏந்தியபடி நின்றான். அணியினர் அவனைத் தோளில் தூக்கிச் சுமந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் வடிய, "என் வாழ்க்கையின் பெருமை மிகுந்த தருணம் இது" என்றான் அவன்.

87இல் தன் கண் முன்னால் நிகழ்ந்த அந்த தோல்வியைக்கண்டு வேதனைப் பட்ட அந்த சிறுவன் - சச்சின் ரெண்டுல்கர், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே இந்திய அணியில் இடம் பெற்றுவிட்டான். அதிலிருந்து, இந்தியாவின் கிரிக்கெட் கனவுகளின் அடையாளமாக திகழ்கிறான். குறிப்பாக, உலக கிண்ண போட்டிகளில் 1992 முதல் தற்போதுவரை மொத்தம் ஆறு போட்டிகளில் சச்சின் ஆடியிருக்கிறார். 2007ஆம் ஆண்டு தவிர, ஒவ்வொரு முறையும் உலக கிண்ண போட்டிகளில் மிகச் சிறப்பாக ஆடியிருக்கிறார். இருமுறை தொடர் நாயகன் விருதும் வாங்கியிருக்கிறார். இந்த முறையும் அதிக பட்ச ஓட்டங்கள் எடுத்த திலகரத்ன டில்ஷனைவிட (இலங்கை அணி) 18 ஓட்டங்கள் மட்டுமே குறைவாக எடுத்திருக்கிறார் (482).

கடந்த 22 ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டின் முக்கியமான தருணங்கள் அனைத்தும் சச்சினோடு பிரிக்கமுடியாதபடி பிணைந்திருக்கின்றன. 'இந்த கிண்ணம் சச்சினுக்காக' என்று அணியின் இளம் வீரர்கள் சொன்னதை இந்தப் பின்னணியில்தான் பார்க்கவேண்டும். தொடர்ந்து தங்களுக்கு உத்வேகம் அளித்துவரும் நாயகனைச் சுமந்தபடி, அணியினர் வெற்றிக் கூத்தாடினார்கள். "20 ஆண்டுகளாக நாட்டின் எதிர்பார்ப்பு என்ற சுமையை அவர் சுமந்துவருகிறார். இப்போது

> 20 ஆண்டுகளாக நாட்டின் எதிர்பார்ப்பு என்ற சுமையை அவர் சுமந்து வருகிறார். இப்போது நாங்கள் அவரைச் சுமக்கவேண்டிய நேரம் இது

**இந்திய அணி 87, 96, 2003 ஆகிய ஆண்டுகளில் அரை இறுதிவரை வந்தது. 2003இல் இறுதிப் போட்டிவரை வந்தது. ஆனால், கிண்ணம் வசப்படவில்லை**




நாங்கள் அவரைச் சுமக்கவேண்டிய நேரம் இது" என்று விராட் கோஹ்லி தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூறினார்.

28 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அணியிடம் வந்து சேர்ந்திருக்கும் அந்தக் கிண்ணம் சச்சின் ரமேஷ் ரெண்டுல்கரின் கனவு மட்டுமல்ல, இந்திய தேசத்தின் கனவு. 83இலிருந்து ஒவ்வோர் உலகக் கிண்ண போட்டியின் போதும் 'இம் முறை கிண்ணம் இந்தியாவுக்குத்தான்' என்ற கனவு புதுப்பிக்கப்படும்; தேசம் பரபரப்புக் கொள்ளும். அதற்கேற்ப இந்திய அணி 87, 96, 2003 ஆகிய ஆண்டுகளில் அரை இறுதி வரை வந்தது. 2003இல் இறுதிப் போட்டிவரை வந்தது. ஆனால், கிண்ணம் வசப்படவில்லை. இப்போது, ஏப்ரல் 2ஆம் தேதியன்று வரலாறு திரும்பியது. கிண்ணம் இந்திய அணியின் கைக்கு வந்தது.

இந்தியா உலகின் சிறந்த அணி என்று சொல்லத்தக்க நிலையில் என்றைக்குமே இருந்ததில்லை. கறாராகப் பார்த்தால், இப்போதும் இல்லை. ஆனால், உலகின் சிறந்த அணிகளை வலுவாக எதிர்த்து நிற்கக்கூடிய அணி என்று சொல்லலாம். பந்து வீச்சிலும், தடுப்பு அரண் செயல்பாட்டிலும் இந்தியாவுக்கு இருக்கும் பலவீனங்கள் அந்த அணியைத் தலை சிறந்த அணி என்று சொல்லவிடாமல் தடுக்கின்றன. ஆனால், துடுப்பாட்ட வலுவால் இந்த பலவீனங்களைத் தாண்டிவரும் திறனும் தன்னம்பிக்கையும் இந்தியாவுக்கு இருக்கிறது. அந்தத் திறமைதான் இந்தியாவை டெஸ்ட் போட்டிகளிலும் ஒரு நாள் போட்டிகளிலும் முதல் இடத்தில் நிறுத்தியிருக்கிறது.

இந்த உலக கிண்ண போட்டியிலும் இது கண்கூடாக தெரிந்தது. பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் 370 ஓட்டங்களை எடுத்தது. ஆனால், பங்களாதேஷ்போன்ற, ஒப்பீட்டளவில் பலவீனமான அணி 284 ஓட்டங்களை எடுக்க அதன் பலவீனமான பந்து வீச்சு அநுமதித்தது. இங்கிலாந்துக்கெதிரான போட்டியில் 338 ஓட்டங்கள் எடுத்தது. ஆனால், தடுப்பு அரணில் விழுந்த ஓட்டைகளாலும் பந்து வீச்சின் போதாமைகளாலும் இங்கிலாந்து 338 ஓட்டங்களைத் தொட்டது. யாருக்கும் வெற்றி, தோல்வியின்றிப் போட்டி முடிந்தது. தென்னாபிக்காவுக்கு எதிரான போட்டியில் 296 ஓட்டங்களைக் குவித்தது. மீண்டும் பந்து வீச்சு கைவிட்டது; இந்தியா தோற்றது. ஆக, இந்தியாவின் ஆதாரமான பிரச்னைகளான மோசமான தடுப்பு, பலவீனமான பந்து வீச்சு என்பன இன்னமும்

தீரவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.


இப்படிச் சில தடுமாற்றங்களைத் தாண்டி கால் இறுதிக்கு வந்த இந்தியா வலுவான அவுஸ்திரேலிய அணியை எதிர்கொண்டது. இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும். இந்தியாவின் பந்து வீச்சு பலவீனமானதுதான். ஆனால், ஜாகீர் கானும் ஹர்பஜன் சிங்கும் நல்ல வீச்சாளர்கள். ஆனால், இவர்கள் இருவருக்கும் துணையாகப் பந்து வீச யாரும் இல்லாமல் இருந்தது. முதல் சுற்றுப் போட்டிகளின் கடைசி ஆட்டத்தில் அணியில் சேர்க்கப்பட்ட ரவிச்சந்திரன் அஸ்வின் என்னும் சுழல் பந்து வீச்சாளர், சிங்குக்குத் தேவையான துணையை வழங்கினார். பகுதிநேர வீச்சாளரான யுவராஜ் சிங்கும் நல்லமுறையில் வீசினார். தடுப்பு ஆட்டத்திலும் யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, விராட் கோஹ்லி ஆகியோர் புதிய வரையறைகளை உருவாகினர். இந்தியாவின் பலவீனங்கள் மறைய ஆரம்பித்தன. அதன் தன்னம்பிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. வலுவான துடுப்பாட்டக்காரர்களைக்கொண்ட ஆஸி. அணியை 260 ஓட்டங்களுக்குள் முடக்கியது. பின்னர் அந்த ஓட்டங்களைப் பதற்றமில்லாமல் எடுத்து முடித்தது.



அடுத்து, அரை இறுதி என்னும் சவால் ஆகிவந்த எதிரியான பாகிஸ்தான் புதிய உத்வேகத்துடன் களத்தில் நிற்கிறது. சூறாவளி வேகத்தில் ஆட்டத்தைத் தொடங்கிய வீரேந்திர சேவாக் விரைவில் ஆட்டமிழந்துவிட்டார். ஓட்டங்களை வேகமாக எடுத்தாலும் சச்சின் சரளமாக ஆடவில்லை. ஆனாலும், அணியினரின் ஒட்டுமொத்த முயற்சியும், பாகிஸ்தானின் மோசமான தடுப்பு ஆட்டமும் சேர்ந்து 260 ஓட்டங்களை இந்தியாவுக்குப் பெற்றுத்தந்தன. துடுப்பு வீச்சு சோபிக்காத நாள்களில் ஒன்றானதாகவே இதைக் கருதவேண்டும். ஆனால், பாகிஸ்தானால் இந்த ஓட்டங்களை எடுக்க முடியவில்லை. துல்லியமான பந்து வீச்சு, மற்றும் தடுப்புத் திறனின்மூலம் இந்தியா வென்றது. அதன் பலவீனங்கள் மறைய ஆரம்பித்ததன் இன்னோர் அடையாளம் இது. 85 ஓட்டங்கள் எடுத்த ரெண்டுல்கர் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். உலக கிண்ண போட்டியில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றதில்லை என்னும் வரலாறு மாற்றப்படாமல் நிற்கிறது. ரெண்டுல்கர் கொடுத்த பிடிகளை பாகிஸ்தான் கைப்பற்றியிருந்தால் இந்தியா இந்த அளவுக்கு ஓட்டங்களை எடுத்திருக்காது என்று வாதிடலாம். ஆனால், அவருக்குப் பதில் கௌதம் காம்பீரோ யுவராஜ் சிங்கோ மகேந்திர சிங் தோனியோ அந்த ஓட்டங்களை எடுத்திருக்க மாட்டார்கள் என்று சொல்லமுடியாது. காரணம், இப்போதெல்லாம் சச்சின் விரைவில் அவுட் ஆகும்போது அணியின் பொறுப்புணர்வு அதிகமாகிறது. மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் இதைப் பார்க்கமுடிந்தது. அவுஸ்திரேலியாவுக்கெதிரான போட்டியிலும் சச்சின் அரை சதம் எடுத்து ஆட்டமிழந்தபோது அணி பாதுகாப்பான இடத்தை எட்டியிருக்கவில்லை. காம்பீர், கோஹ்லி, யுவராஜ், ரெய்னா ஆகியோர் மிகவும் பொறுப்புடன் ஆடி வென்றனர்.

இறுதிப் போட்டியிலும் அதுதான் நடந்தது. மிக அற்புதமாக ஆடிக்கொண்டிருந்த சச்சின் - அதிலும் அந்த 'ஸ்ட்ரெய்ட் டிரைவ்' இன்னமும் கண்ணில் நிற்கிறது - 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து, ஏமாற்றத்துடன் வெளியேறினார். ஆனால், காம்பீர், கோஹ்லி, தோனி ஆகியோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஆடி முடித்தார்கள்; வரலாறு திரும்பியது. கிண்ணம் வசமானது. உலக கிண்ண போட்டிகளில், அதன் இறுதிப் போட்டிகளில் இதுவரை 'துரத்தி எடுத்த ஓட்டங்களில்' இதுதான் (275) அதிகபட்ச ஓட்டம் என்னும் புதிய வரலாறு எழுதப்பட்டது. போட்டியை நடத்திய நாடு கிண்ணத்தை வென்றதில்லை என்னும் வரலாறும் திருத்தி எழுதப்பட்டது.

வென்றியின் பின்னர் செய்தி ஊடகங்களிடம் பேசிய தோனி, 'இந்த வெற்றிக்குக் காரணம் ரெண்டுல்கர், அனில் கும்ப்ளே, சௌரவ் கங்குலி, ராகுல் திராவிட் ஆகிய நால்வர் போட்ட விதைதான்' என்று மறக்காமல் குறிப்பிட்டார். அணியின் பயிற்சியாளர் கெரி கிர்ஸ்டனின் பங்கை ரெண்டுல்கர் பாராட்டினார். ஓர் ஆண்டுக்கு முன்பே அணி இந்த இறுதிப் போட்டிக்கு மனத்தளவில் தயாராக இருந்ததை அணியின் உளவியல் ஆலோசகர்




இந்தியா உலகின் சிறந்த அணி என்று சொல்லத்தக்க நிலையில் என்றைக்குமே இருந்ததில்லை; இப்போதும் இல்லை. ஆனால், உலகின் சிறந்த அணிகளை வலுவாக எதிர்த்து நிற்கக்கூடிய அணி என்று சொல்லலாம்

குறிப்பிட்டார். இந்தமுறை கிண்ணத்தைத் தவறவிடுவதில்லை என்ற உறுதி ஒவ்வொருவரிடத்திலும் தெரிந்தது. அணியின் முன்னேற்பாடுகள் நன்றாகவே இருந்தன. பயிற்சி ஆட்டங்களில் அவுஸ்திரேலிய அணியையும் நியூசிலாந்து அணியையும் இந்தியா எளிதாக தோற்கடித்தது. ஒரு நாள் போட்டிகளில் துல்லியமான வீச்சின்மூலம் எதிரணியைக் கட்டுப்படுத்தக்கூடிய பிரவீன் குமாருக்குக் காயம் பட்டு, அவர் அணியிலிருந்து விலகவேண்டிய சூழ்நிலை பின்னடைவை ஏற்படுத்தினாலும், அணி சோர்ந்துவிடவில்லை. தற்செயலாக தனக்குக் கிடைத்த வாய்ப்பை ஸ்ரீஷாந் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றாலும், முனாப் பட்டேல் ஓரளவு அதை ஈடுகட்டினார். சுழல் பந்துவீச்சாளர் பியுஷ் சாவ்லா ஏமாற்றம் அளித்தாலும் யுவராஜ் ஆறுதல் அளித்தார். துடுப்புகளும் உற்சாகமாகச் சுழன்றன.

வெற்றி, பெருமைக்குரியதுதான்; கொண்டாடப்பட வேண்டியதுதான். ஆனால், அது சில குறைபாடுகளை மறைத்துவிடும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் கடைசி ஓவரை ஆஷிஷ் நெஹ்ராவுக்குக் கொடுத்தது பற்றி விமர்சனங்கள் எழுந்தன. அஸ்வினைச் சேர்க்காதது தவறு என்றும் விமர்சகர்கள் அழுத்தமாகக் கூறினார்கள். முதல் சுற்றின் முடிவில் களம் இறக்கப்பட்ட அஸ்வின், கால் இறுதிப் போட்டியிலும் அணியில் இடம்பெற்றார். சிறப்பாகப் பந்து வீசிய அவரை மொஹாலியில் அரை இறுதியில் களம் இறக்கவில்லை. அவருக்குப் பதில் வேகப் பந்து வீச்சாளர் நெஹ்ரா சேர்க்கப்பட்டார். நெஹ்ரா அந்தப் போட்டியில் நன்றாகவே வீசினார் என்றாலும், பாகிஸ்தான் சுழல் பந்துவீச்சாளர்களுக்குக் கிடைத்த வெற்றியைப் பார்த்தபோது, இந்தியா அஸ்வினை விலக்கியது தவறு என்பது தெளிவாக தெரிந்தது. ஆடுகளத்தைத் தவறாக எடை போட்டுவிட்டோம் என்று தோனி பின்னர் ஒப்புக்கொண்டார். ஆனால், அதே தவறை இறுதிப் போட்டியிலும் செய்தார். மீண்டும் அஸ்வின் விலக்கப்பட்டு, ஸ்ரீஷாந் சேர்க்கப்பட்டார். அவர் தன்னால் முடிந்தவரை மோசமாகப் பந்து வீசினார். அவருக்கான பத்து ஓவர்களை முழுமையாக போடுவதற்கு தோனி அனுமதிக்கவில்லை. அவ்வளவு மோசமாக வீசினார். தோனி 91 ஓட்டங்கள் எடுத்து வென்றுவிட்டதால் இந்தத் தவறை நியாயப்படுத்திவிட முடியாது. வெற்றிக்கான செயல்பாடு என்பது போட்டிக்கான தயாரிப்புகளிலிருந்தே தொடங்குகிறது. மிக முக்கியமான போட்டியில் தவறான முடிவுகளை எடுத்தமை அணியின் நிர்வாகம் செய்த தவறு. வெற்றி என்னும் ஜிகினாத் தாளை வைத்து, இந்தத் தவறுகளை மூடிமறைக்காமல் இருப்பது அணியின் எதிர்காலத்துக்கு நல்லது.

அணி பெருமை கொள்வதற்கான காரணங்களும் இருக்கின்றன. இறுதிப் போட்டியில் 6ஆவது ஓவரிலேயே 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் இழப்பு என்னும் அதிர்ச்சியிலிருந்து மீண்டுவரும் மன உறுதியும் விடா முயற்சியும் பாராட்டத்தக்கவை. இந்தத் தொடர் முழுவதும் இந்திய அணி ஒரே ஒரு முறைதான் தோற்றிருக்கிறது என்பதும் பாராட்டத்தக்கதுதான். தென்னாபிரிக்காவிடம் தோற்றுப்போன அந்தப் போட்டியிலும் இந்தியா வெற்றிபெறும் இடத்துக்கு எளிதாக போய்ச் சேர்ந்துவிட்டது. தன்னுடைய சில தவறுகளாலேயே அந்த நிலையிலிருந்து அது சறுக்கியது. வெற்றி தோல்வி யின்றி முடிந்த போட்டியிலும் இந்தியாவின் கையே ஓங்கியிருந்தது. ஒரு சில தவறுகளே அதன் நிலையைப் பலவீனமாக்கின. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், இங்கிலாந்து ஆகிய வலுவான அணிகள் மோசமான தோல்விகளைத் தழுவின. ஆனால், இந்திய அணியை எந்த அணியும் நிமிரமுடியாமல் அடிக்கவில்லை. இலங்கை அணியின் நிலையும் அதுவே.

20-20 போட்டிகள் வரவேற்புப் பெற்றுவரும் இன்றைய சூழலில், ஒரு நாள் போட்டிகளின் வசீகரத்தை மீட்டுத் தந்த போட்டித் தொடர் இது என்று சொல்லலாம். சில பிசிறுகளை விட்டுவிட்டுப் பார்த்தால் இந்த தொடர் கிரிக்கெட்டில் இந்தியாவின் ஆளுமை அழுத்தமாகவே பறைசாற்றப்பட்டிருக்கிறது. அரை இறுதியில் ஆடிய நான்கு அணிகளில் மூன்று ஆசிய அணிகள் என்பதை வைத்துப் பார்க்கும்போது, கிரிக்கெட்டின் மையம் இடம் மாறுவதையும் உணரலாம்.

இந்தியா கிண்ணத்தை வென்றமை கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட ஒரு தேசத்தைப் பெருமைப் படுத்தக்கூடிய நிகழ்வு என்பதில் சந்தேகமில்லை. கோடிக்கணக்கில் பணம் புரளும் ஓர் ஆட்டத்துக்கு இது பெரிய அநுகூலம் என்பதிலும் சந்தேகமில்லை. ■


# விடைபெறும் ஜாம்பவான்கள்

இந்த உலக கிண்ண போட்டி பல விதங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிவிட்டது. முத்தையா முரளிதரன், ரிக்கி பொண்டிங், சச்சின் ரெண்டுல்கர் ஆகிய சாதனையாளர்களின் கடைசி உலக கிண்ண போட்டி இது. ஜாகீர் கான், உமர் குல், ஷாஹித் அப்ரிதி, குமார் சங்ககார, கிறிஸ் ஹெய்ல்போன்ற மேலும் பல முக்கியமான ஆட்டக்காரர்கள் அடுத்த உலக கிண்ணத்தில் விளையாட முடியாமல் போகலாம் என்றாலும், இந்த மூவரின் விஷயத்தில் இது மிக தெளிவாக தெரிகிறது. இந்த மூவருமே வெற்றியோடு தங்கள் உலக கிண்ண பயணத்தை முடித்துக்கொள்ள பெரிதும் விரும்பியிருப்பார்கள். ஆனால், மூவரில் ஒருவருக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்பது வெளிப்படை. அது, கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னனாக திகழும் சச்சினுக்குக் கிடைத்தது.



சச்சின் ரெண்டுல்கார்


சிறப்பாக ஆடியும் தோல்விபெறும் அணியில் இருந்து பழகக்கப்பட்ட சச்சின், கடந்த சில ஆண்டுகளில் அணியின் வெற்றியையும் அநுபவித்துவருகிறார். அணியின் ஒட்டுமொத்தமான வலிமை, அஞ்சாமை, சரிவிலிருந்து மீள்வதற்கான போராட்ட குணம், தருணத்துக்கு ஏற்ற வியூகங்கள், நெருக்கடிக்கான சிறப்புத் திட்டங்கள் ஆகியவற்றின்மூலம் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளிலும் ஒரு நாள் போட்டிகளிலும் அண்மைக் காலங்களில் அதிக வெற்றியை ருசித்துவருகிறது. இதன் தொடர்ச்சியாகவே உலக கிண்ண வெற்றியும் அமைந்திருக்கிறது. இந்த வெற்றிகளில் சச்சினின் பங்கு முக்கியமானதுதான் என்றாலும், அணியின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த வெற்றி சாத்தியமாகியிருக்க முடியாது. தனது கிரிக்கெட் வாழ்வின் பெரும்பகுதியில் தன் அணியின் பலவீனங்கள் காரணமாக பல தோல்விகளைச் சந்தித்துவரும் சச்சின், அணியின் வலிமை காரனமாக இப்போது அதிக வெற்றிகளைப் பார்ப்பது அவரது கிரிக்கெட் வாழ்வுக்கு பொருத்தமான முடிவுரையாகவே அமைகிறது. முதன்மை பெறுவதற்கான இந்திய அணியின் போராட்டம் சச்சினின் கிரிக்கெட் வாழ்வோடு இரண்டறக் கலந்தது. கோஹ்லி சொன்னதைப்போல, ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்பார்ப்பை 20 ஆண்டுகளாக சுமந்துவரும் அவரது கிரிக்கெட் பயணத்தின் முடிவுக்கான, பொருத்தமான தொடக்கத்தை இந்தக் கிண்ணம் வழங்கியிருக்கிறது. ஓய்வுபெறுவது பற்றி இன்னும் அவர் அறிவிக்கவில்லை என்றாலும், இன்னமும் ஓரீர் ஆண்டுகளில் அது நடந்தே தீரும். கிண்ணத்தை வென்ற பெருமிதம், அதற்கான திட்டத்தை கவனமாக வடிவமைத்துக்கொள்வதற்கான ஆசுவாவாசத்தையும் அவகாசத்தையும் அவருக்கு அளிக்கும்.



ரிக்கி பொண்டிங்

ரிக்கி பொண்டிங்கைப் பொறுத்தவரை, தன் கடைசி உலக கிண்ண போட்டியில் வெல்வதற்கு தனிப்பட்ட முறையில் அவர் அதிகம் போராடினார். இந்தியாவுக்கு எதிரான கால் இறுதி போட்டியில் தன் சாகச ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு மிகவும் கவனமாக தன் ஆட்டத்தை வடிவமைத்துக்கொண்டார். பொறுப்பான அணுகுமுறையும் அசாத்தியமான கவன ஈர்ப்பும் சேர்ந்து அவரது ஆட்டம் சோபித்தது. அவர் சதம் அடித்தார். ஆனால், அணி அவரைக் கைவிட்டது. இவரது ஆட்டத்துக்கு துணை நின்று பெரிய அளவில் ஓட்டம் எடுக்க தவறியது. பந்து வீச்சிலும் எதிரணியைப் பணியவைக்க முடியாமல் தவித்தது. எதிரணியினரின் அஞ்சாமையும் உறுதியும் அவுஸ்திரேலியாவின் தாக்குதலை முனை மழுங்கச் செய்தன. தனிப்பட்ட பெருமையை மட்டும் சுமந்துகொண்டு, தோல்வியுடன் உலக கிண்ண அரங்கை விட்டு வெளியேறினார் பொண்டிங். இந்த தோல்வியை அடுத்து, தன் தலைமைப் பதவியைத் துறக்க வேண்டிய நெருக்கடியும் அவருக்கு ஏற்பட்டது.

பொண்டிங்கின் ஆணித்தரமான தலைமை வலுவான அணியை மிகச் சிறந்த அணியாக மாற்றியது. அதே சமயம், போர்க்குணத்தின் எதிர்மறையான அம்சங்களின் கறையையும் அணியின் மீது பூசியது. சிறந்த திறமைசாலிகள் சிலர் ஓய்வுபெற்ற பின்னர் அணி பின்னடைவைச் சந்தித்துவருவதைப் பார்க்கும்போது, தலைமையின் திறமையும் ஆவேசமும் மட்டும் ஓர் அணி வெற்றிபெற போதுமானவை அல்ல என்பது தெளிவாகிறது. அவுஸ்திரேலிய அணி புதிய தலைமையின் கீழ் புதிய வடிவம் எடுக்குமா என்பது இன்னும் சில மாதங்களில் தெரிந்துவிடும்.




முத்தையா முரளிதரன்

இலங்கை அணியில் உள்ள ஒரே தமிழர் முத்தையா முரளிதரன், கேள்விக்கு அப்பாற்பட்ட சாதனையாளர். கிரிக்கெட் ஆட்டத்தின் மூன்று வடிவங்களிலும் சிறந்து விளங்குபவர். புன்னகை மாறாத முகமும் கூர்மை குறையாத போர்க்குணமும் இவரது முத்திரைகள். இலங்கையின் வெற்றிக்கு ஆதாரமாக இருக்கும் இவரது சேவை இனி இலங்கை அணிக்குக் கிடைக்காது. இவரது மாயச் சுழல் தோற்றுவிக்கும் அற்புதங்களை இனி ஐ.பி.எல். போட்டிகளில் மட்டுமே காணமுடியும். இவரும் வெற்றியோடு தன் பயணத்தை முடிக்கவே விரும்பினார். இந்தப் போட்டித் தொடரில் சிறப்பாகவும் ஆடினார். அணியும் ஒத்துழைத்தது. இறுதிப் போட்டிவரை வந்தது. ஆனால், அந்த குறிப்பிட்ட நாளில் இந்தியாவின் கை ஓங்கியது; முரளிதரனின் அணி தோற்றது. பெரும் சாதனைகளைப் படைத்த இந்த வெற்றி வீரர் ஏமாற்றத்துடன் தன் தாயகம் திரும்பினார். ■

# MOHAN JEWELLERY MART


## அழகு நிலா நகை மாடம்

## 22 காரட் அசல் தங்க, வைர நகைகள்




**201, rue du Saint-Denis, 75010 Paris**
**Tel: 01 42 05 65 26, Fax: 01 42 05 65 79**
**www.mohanjewellerymart.com, Email: mohanjm@hotmail.fr**
**Metro: La Chapelle ou Gare du Nord**



கலை

ஏ. எஸ். இராமநாதன்

# ஈழத்து இசை லயம்

கர்நாடக இசையையும், அந்த இசையின் ரசனையும் வளம்படுத்தியது நாதஸ்வரம்.

இந்தியாவின் மிகச்சிறந்த தவில், நாதஸ்வர கலைஞர்கள் இலங்கை வருவதும், யாழ்ப்பாணத்து கலைஞர்களுடன் சமானமாக வாசிப்பதும், அதில் ரசிகர்களின் அங்கீகாரத் தீர்ப்பும் நாதஸ்வர கலையின் வரலாற்றில் இணைந்தது. திருவிழா காலங்களில் அந்த ஆறு மாதங்களும், இந்தியாவிலிருந்து தவில், நாதஸ்வர கலைஞர்களை வரவழைத்து இலங்கையின் தவில், நாதஸ்வர கலைஞர்கள் தங்கள் தங்கள் பெயர்களில் கோஷ்டிகள் அமைப்பார்கள். பேச்சுவழக்கில் இது 'மேளம் கட்டுதல்' என்று சொல்லப்படும்.

இலங்கைக்கு 'வீசா' தேவையில்லாதிருந்த வேளைகளில், இந்தியாவிலிருந்து இவர்கள் தாமாகவே இத் திருவிழா காலங்களில் படகுகளில் வேதாரணியத்திலிருந்து வந்து நெடுந்தீவு, ஊர்காவற்றுறை கரைகளில் இறங்குவார்கள்.

இக் கோஷ்டிகள் அந்த பருவகாலத்தில் போட்டி அணிகள்போன்ற ஓர் உன்னதத்தைப்பெறும்.

புகழ்பெற்ற நாதஸ்வர மேதைகள் திருவீழிமிழலை சகோதரர்களுக்கும் அவர்களுக்கு தவில் வாசித்துக்கொண்டிருந்த 'தவில் மாமன்னர்' நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கும் ஏற்பட்ட தகராறில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தொடர்ந்து அவர்களுக்கு வாசிக்க மறுத்தபோது, 'மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி' என்ற சுலோகத்தை வரலாற்றில் பதித்து, திருவீழிமிழலை சகோதரர்கள் யாழ்ப்பாணம் காமாட்சிசுந்தரம் பிள்ளையை தமக்கு தவில்காரராக்கினார்கள்.

யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியின் குருவாக விளங்கியவர் காமாட்சிசுந்தரம் பிள்ளை.

ஆக, ஒரு பண்பட்ட இசை ரசனையில் இலங்கை செழுமையுற்றிருந்தது. மகாராஜபுரம் சந்தானம் என்ற ஓர் இசை உலக மன்னரை செம்மைப்படுத்திய செழுமை அது.

"இசையில் என்னை நானாக ஆக்கியது
யாழ்ப்பாணத்தின் அந்த ஐந்து ஆண்டுகள்."
- மகாராஜபுரம் சந்தானம் சொன்ன வார்த்தைகள்.

அறுபதுகளில் மருதனாமடம், இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது, அதனைத் தொடக்கிவைக்க தந்தையார் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயருடன் வந்திருந்த புதல்வர் சந்தானம், ஸ்தாபகரான சேர் பொன். இராமநாதனின் மருகர் சு. நடேசபிள்ளையின் விருப்பில் அக் கல்லூரியின் முதல்வராக ஐந்து ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். அது, 'அந்த ஐந்து ஆண்டுகள்'.

மூலை முடுக்கெல்லாம் அவரின் கச்சேரிகளில் தன்னுடைய வித்துவ தனித்துவத்தை அவர் அங்கு சோதித்துத் தேர்ந்தார்.

வீ. ஆர். இராசநாயகம், டபிள்யூ. எம். குமாரசாமி ஆகியோரின் யாழ். நடன பள்ளியில் கேரளாவிலிருந்து வந்து, நாட்டிய மேதைகள் கோபிநாத் - தங்கமணி, செல்லப்பன், பவானி ஆகியோர், குறிப்பாக கதகளி நடனம் கற்பித்தனர். ஊரிக்காடு நடராஜா, புத்துவாட்டி சோமு, அச்சுவேலி இரத்தினம் போன்றவர்கள் உள்ளூரில் இசைக் கலைஞர்களாக திகழ்ந்தார்கள். இசைப்புலவர் சண்முகரத்தினம் பெரும் வித்வானாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தார்.

இந்திய வித்வான்கள், வயலின் எல். சுப்பிரமணியம், எல். வைத்தியநாதன் ஆகியோரின் தந்தையார் லக்ஷ்மிநாராயணா, ஐயாக்கண்ணு தேசிகர், சங்கர ஐயர் போன்றவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தார்கள்.

ரசிக ரஞ்சன சபாவில் இசை விழாக்கள் நடைபெற்றன.

தம்பாப்பிள்ளை, தங்கம், எம். என். செல்லத்துரை போன்றோர் மிருதங்கம் வாசித்தார்கள். இவர்கள், பிரதானமாக கூத்து, சின்னமேளத்துக்கு வாசிப்பவர்களாகவே இருந்தார்கள்.

ஆக, தவிலில் பெரும் லய சிம்மங்களின் கர்ஜனை ஆர்ப்பரித்தாலும், அங்கு மிருதங்க லயம் பிடிப்பில்லாமலேயே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் பரம் தில்லைராஜாவினால் புதிதாக தொடங்கப்பட்ட சங்கீத வித்வத் சபை ஏற்பாட்டில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் புதுமையான ஒரு நிகழ்ச்சி நடந்தது. தட்சணாமூர்த்தி தவில்வாசிக்க, அவருடன் இணைந்து இன்னொருவர் மிருதங்கம் வாசித்த தாளவாத்திய நிகழ்ச்சி.

யாழ்ப்பாணத்தில், ஏன் இலங்கையில், நாதஸ்வரம் தவிர்ந்த இசை, நடனத்தின் 'லய மூலமாக', ஒரு யுகத்தைப் படைத்து எழுந்தது அந்த மிருதங்க நாதம்.

ஒருவர் வழிக்கு மற்றவர் செல்லாமல், இருவரிடத்தும் வெளிப்பட்ட வித்துவ வித்தையில் அந்த லயவிந்யாசம்



சேவை பாராட்டில்
ராம் குமாரசாமி

வழக்கறிஞர்
எஸ். ஆர். கனகநாயகம்,
பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

**யாழ்ப்பாணத்தில்,**
**ஏன் இலங்கையில்,**
**நாதஸ்வரம் தவிர்ந்த இசை, நடனத்தின்**
**'லய மூலமாக',**
**ஒரு யுகத்தைப் படைத்து**
**எழுந்தது அந்த மிருதங்க நாதம்**

கொள்ளைகொண்டது.

யாழ். நடன பாடசாலையில் வாய்ப்பாட்டுக்கென்று, சிதம்பரத்திலிருந்து வந்த மிருதங்க வித்வான் அவர்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இலங்கையர் பலர் 'சங்கீத பூஷணம்' பட்டத்துக்காக பயில ஆரம்பித்த அக் காலத்தில், அங்கு மிருதங்கம் பயின்றுகொண்டிருந்தவரை, பட்டத்தை முடித்துக்கொண்டு இலங்கைக்குவர ஆசையுடன் வற்புறுத்தினார்கள் அந்த இலங்கையர்கள் சிலர். அந்த வற்புறுத்தலில் 1948ஆம் ஆண்டு அங்கு வந்தார் அந்த மிருதங்க வித்வான், சிதம்பரம் ஏ. எஸ். இராமநாதன்.

இலங்கையில் அப்போது ஒரு சகாப்தம் ஆரம்பமானது. அதன் கலைகளின் வளர்ச்சியில், ரசனையில் ஒரு வளம் செறிந்தது.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மைலாட்டூர் சாமி ஐயரிடம் பயின்ற அவர், பின்னர் பழநி சுப்பிரமணிய பிள்ளையிடமும் பயின்றவர். இசைக் கலைஞர்களுக்கும் நடன நிகழ்ச்சிகளுக்கும் உந்துதலான பக்கவாத்தியமாக மட்டுமன்றி, இலங்கையில் ஒரு மிருதங்க பரம்பரையின் - பாரம்பரியத்தின் பிதாமகராகவும் அவர் உரு பெற்றார்.

சங்கீத உலகில் முசிரி சுப்பிரமணிய ஐயரைப்போல, மிருதங்கத்தில் ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கிய தனி சிறப்பு ஏ. எஸ். இராமநாதனுடையது. இலங்கைக்கு அப்பால், இன்று தமிழர் வாழுமிடமெல்லாம் உலகில் இவரது மாணவர்களே சிறக்கிறார்கள். புதிய பரம்பரை வியாபிக்கிறது.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி உள்பட, பொதுவாக யாழ்ப்பாணத்தின் முதன்மையான அனைத்து இசை, நடன நிறுவனங்களுடனும் தொடர்புற்றிருந்தார். கலைஞர்கள், அபிமானிகள் என்று அனைவரின் அபிமானத்தைப்பெற்றவர்.

தமிழிசைக்காக யாழ்ப்பாணத்தில், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தையும் இவர் ஆரம்பித்து நடாத்தினார்.

1961இல் திருமணத்தின் பின்னரும் குடும்பத்துடன் அங்கேயே வாழ்ந்தார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டபின்னர், இந்திய பிரஜையான இராமநாதனுடைய நியமன அங்கீகாரத்தில் சில தாமதங்கள் ஏற்பட்டபோது 1983இல் அவர் இந்தியா திரும்பினார். அங்கு, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் மிருதங்க விரிவுரையாளராக பணியாற்றி ஓய்வுபெற்றார். இலங்கையில் இராநாதன் நுண்கலைக் கல்லூரியில் அவர் ஏற்படுத்திய கற்கைநெறியை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் நெறிப்படுத்த தலைப்பட்டது.

இந்தியா திரும்பிய பின்னர் இராமநாதனும் இலங்கையைப் பிரியவில்லை; இலங்கையும் அவரைப் பிரியவில்லை. அவர் பழகிய கலைஞர்கள், அவர் உருவாக்கிய மாணவர்கள், அவருடன் பழகிய அபிமானிகள் பலருமே அவருடன் கடைசிவரையிலும் பரஸ்பரம் அந்நியோன்யமாகவே இருந்தார்கள்.

சற்று நோய்வாய்ப்பட்டிருந்த திரு இராமநாதன், அவருடைய 83ஆவது வயதில் சென்னையில் காலமானார்.

அவருடைய அந்த சங்கீத பாஷை, சங்கீத காஷ்யம், இங்கித வாசிப்பு, எடுப்பான தோற்றம் எல்லாமே தெரிகின்றன. தன்னுடைய குடும்பத்திலும் அனைவரையும் நல்ல கலைஞர்களாக்கி, ஒரு குடும்பம்போலவே நல்ல கலைஞர்களையும் உருவாக்கியவர்.

**- மாலி**



சிறுகதை | ஆர். நடராஜன்

# சுமார் பத்தினி

'ஐயா, ஐயா; போச்சு, போச்சு. எல்லாமே போச்சு' என்று பதறியடித்துக்கொண்டு வந்தார் தமிழ் முன்னவன் என்ற பெயர்கொண்ட கட்சியின், ஆட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர். முதல்வரான கட்சித் தலைவர் கொஞ்சமும் பதறவில்லை. "மெதுவா நடந்து வாய்யா, மெதுவாப் பேசு; மூட்டும் மூச்சும் புட்டுக்கப் போவுது'' என்றார்.

நாற்காலியில் அமர்ந்து தன்னை நிதானப்படுத்திக்கொண்ட தமிழ் முன்னவன், கொஞ்சம் தண்ணீர் குடித்தபின் மெதுவாக பேச ஆரம்பித்தார்.

"நாளைக்கு ரெண்டு மூணு பத்திரிகைகள்ளே தலையங்கம் வரப்போறதாக் கேள்விப்பட்டேன். எதிர்க்கட்சி டிவியிலே முக்கியமானவங்களை வச்சு விவாதம் நடக்கப்போவுதாம். விமான வெங்கடசாமின்னு ஒரு ஒட்டடைக் குச்சி இருக்குதே, அது பொதுநல வழக்கு போடப் போவுதாம். ரொம்ப யோசனையா இருக்கு.''

"எதுக்கய்யா இதெல்லாம்?''

"மத்திய அரசாங்கத்தைப் போலவே மாநிலங்களிலும் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணையர் போடணும்னு தாக்கீது வந்த பிறகு, நாம போட்ட ஊமைத் துரை நியமனம் செல்லாதுன்னு சொல்றாங்க. அரசாங்கத்தில இருந்த எல்லாத் துறையிலும் - இலவச நிரோத் வழங்கியது உள்பட - எல்லாவற்றிலும் அவர்

**"இல்லே இல்லே,
அப்போதே லேசா முணுமுணுப்பு கேட்டுச்சு.
நான்தான் எதிர்க் கட்சி அம்மாவிடம்
காதோடுகாதா ரகசியம் சொன்னேன்.
எந்த அதிகாரியும் முழுசா யோக்கியம் இல்லே.
யாரைப் போட்டாலும் அது, அவ
சுமார் பத்தினி ரகம்தான்.
அவங்களும் சரிதான் போகட்டும்னு சொல்லிட்டாங்க.
கூட இருந்த நம்ம ஆளுதான்
கொஞ்சம் குட்டையை குழப்பினாரு"**

காசு பார்த்துட்டாராம். ஊழல்காரரை எப்படி ஊழல் தடுப்புத் துறை ஆணையரா நியமிக்கலாம்னு பொது விவாதம் நடக்கப் போவுதாம். இதனால நம்ம ஆட்சிக்கே ஆபத்து வந்துடுமோன்னு பயப்படறேன்.''

"போயும் போயும் இதுக்குத்தானா இவ்வளவு பதற்றம்? இதை நான் பார்த்துக்கிறேன்; நீங்க போய்க் கட்சி வேலையைப் பாருங்க.''

"எந்த வேலையை ஐயா?''

"கட்சி ஆபீசுக்குப் போய் நாம தயாரிச்ச தேர்தல் அறிக்கையிலே இலக்கண பிழைகள் ஏதாவது இருக்கான்னு பார்த்துடுங்க. நானும் அப்புறமா அங்கே வர்ரேன்.''

"ஐயா, நான் சொன்ன விஷயம்...''

"கவலைப்படாதே ஐயா, ஊழல் கமிஷனர் நியமனம்தானே. ஆள மாத்த மாட்டேன். மாத்தினா ஆபத்து. அதுல உறுதியா இருப்பேன்.''

"அதத் தெரிஞ்சுக்கத்தாங்க ஆசைப்பட்டேன். முன்னே இவரு என்னோட துறையிலே இருந்தார். நான் சம்பாதிச்சதெல்லாம் இவருக்குத் தெரியும். பார்க்கப்போனா இவரு மூலம்தான் எல்லாம் வந்துச்சு. வாங்கிக்கொடுத்த மாதிரி எல்லாத்தையும் அமுக்கி வைக்கவும் தெரியும் இவருக்கு. அதனாலதான் வேற யாரும் வந்துடக்கூடாதேன்னு...''

"புரியுதையா. எல்லாம் தெரிஞ்சுதானே போட்டேன். இவரைக் காப்பாத்துவேன். இவரை வெச்சு எல்லோரையும் காப்பாத்துவேன். கவலைப்படாதே.''

இரண்டாமவர் வெளியே போனவுடன் முதல்வர் உள்துறை நிர்வாகக் குழுவைக் கூட்டினார். அதற்காக அவர் யாருக்கும் தொலைபேசியில் பேச வேண்டிய அவசியமில்லை. வீட்டின் அடுத்தடுத்த அறைகளில் இருந்த அவர்கள் உடனே ஆஜரானார்கள். முத(லி)ல் மனைவி, அடுத்து மகன், மருமகள், அதையடுத்து மகள், மாப்பிள்ளை. உள்துறையின் அவசரக் கூட்டம் உடனே தொடங்கியது.

"ஆமா, சட்ட திட்டங்கள்படி எதிர்க் கட்சித் தலைவரை கமிட்டியிலே வச்சுக்கிட்டுதானே ஊமைத்துரையை ஊழல் தடுப்பு அதிகாரியா நியமனம் செஞ்சோம். இப்போ இவங்க எதிர்ப்பு சொன்னா எப்படி?'' என்று முதல்வரின் முதல்வரான சம்சாரம் கேட்க, முதல்வர் சொன்னார்: "இல்லே இல்லே, அப்போதே லேசா முணுமுணுப்பு கேட்டுச்சு. நான்தான் எதிர்க் கட்சி அம்மாவிடம் காதோடு காதா ரகசியம் சொன்னேன். எந்த அதிகாரியும் முழுசா யோக்கியம் இல்லே. யாரைப் போட்டாலும் அது, அவ சுமார் பத்தினி ரகம்தான். அவங்களும் சரிதான் போகட்டும்னு சொல்லிட்டாங்க. கூட இருந்த நம்ம ஆளுதான் கொஞ்சம் குட்டையை குழப்பினாரு.''

"என்னன்னு...''

"இப்படி எல்லா அதிகாரிகளையும் நாமளே கெடுத்துட்டோம்னு.''

"சரியில்லியே; நம்மளையும் நமக்கு முன்னால இருந்தவங்களையும் இந்த அதிகாரிகள்தான் கெடுத்துட்டாங்க. அதுதான் உண்மை'' என்றார் மகன்.

"எப்படியோ போங்க, நாமளோ, அதிகாரிகளோ, கூட்டணிக் கட்சிகளோ எல்லாமே, உன்னால நான் கெட்டேன், என்னால நீ கெட்டேங்கிற கதைதான். இதுல யாரு யாரைக் குறை சொல்றது? விசாரணைக் கமிஷன் போட்டு எல்லோரையும் இழுத்துடுவேன்னு ஒரு போடு போட்டா, கூப்பாடு போடறவங்க கம்முன்னு இருந்துடுவாங்க.''

"நடந்ததைப் பத்திப் பேசவேண்டாம். ஏதோ காரணத்துக்காக சட்டசபையிலே எதிர்க் கட்சி இந்தப் பிரச்சினையை எழுப்பப் போகுதாம்; பரவாயில்லை. எல்லாத்தையும் நான் பார்த்துக்குறேன். பத்திரிகைக்காரங்க கேட்டா, நீங்க இது பத்தி எதுவும் சொல்ல வேண்டாம். முந்தின ஆட்சியில நடந்த தவிட்டு ஊழல், கொட்டாங்கச்சி ஊழல், முடி காணிக்கை ஊழல் பத்தி நீங்க என்ன வேணும்னாலும் சொல்லுங்க. அதுல கொஞ்சம் கிழித்தால் போதும், அவுங்க வழிக்கு வந்துடுவாங்க, கவலைப்படவேண்டாம்.''

அத்துடன், உள்துறைக் கூட்டம் கலைந்தது. இதை மோப்பம் பிடித்த

பத்திரிகையாளர்கள் முதல்வரின் வீட்டுக்கு வந்தார்கள். கோபம், கிண்டல், அன்பு, பரிவு எல்லா உணர்வுகளையும் நவரசமாக ஒரு தேர்ந்த சினிமா நடிகர் போல கொட்டிய முதல்வர், “சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினால் அந்த மன்றத்தில் பதில் சொல்வேன். சத்த மன்றம் என் அவை அல்ல'' என்று எதிர்க் கட்சியின் பொதுக் கூட்டத்தைக் கிண்டல் செய்தார்.

அந்த நாளும் வந்தது. சட்ட மன்றம் கூடியது. நடுவில் யாரும் இறந்து போகாததால் அஞ்சலிக்காக யாரும் எழுந்து நிற்கவில்லை. சபைக் கூட்டமும் ஒத்திவைக்கப்படவில்லை. எடுத்த எடுப்பில் எதிர்க் கட்சிகள் ஊழல் தடுப்பு ஆணையர் பற்றிய கேள்விகளை எழுப்பின. பொறுமை காத்துப் புன்னகையுடன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட முதல்வர் பதில் சொன்னார்:

“இன்றைய எதிர்க் கட்சி ஆட்சியில் இருந்தபோது தீவிர குடும்பக் கட்டுப்பாட்டு ஆணையத் தலைவர் பதவிக்கு மூன்று பெயர்கள் பரிசீலிக் கப்பட்டன. ஒருவர் தாரமிழந்தவர்; மற்றவருக்கு இரண்டு குழந்தைகள்; மூன்றாவது அதிகாரிக்கு ஒன்பது குழந்தைகள். அப்போதைய தேர்வுக் குழு அதிக குழந்தைகள் பெற்றவருக்குத்தான் குடும்பத்தின் அவதி தெரியும் என்ற உயரிய நோக்கில் அவரை நியமித்தது. அதிக திறமை; பெரிய பதவி என்ற முந்திய அரசாங்கத்தின் கொள்கையையே நாங்களும் பின்பற்றுகிறோம். அவர்கள் செய்தால் சரி, அதையே நாங்கள் செய்தால் தவறா? ஒரு துறை நியாயமே மற்ற துறைக்கும் நியாயம். இந்த அரசாங்கம் குடும்பத் துறையையும் ஊழல் துறையையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. உங்களுக்கு புத்தபிரான் சொன்ன ஒரு கதை தெரிந்திருக்கு மென்று நினைக்கிறேன். இருந்தாலும், அதை இங்கே இப்போது சொல்வது என் கடமையாகிறது. கடைத் தெருவில் திருடிய ஒருவன் பிடிபட்டதும் மக்கள் அவனை அரண்மனைக்கு கட்டி இழுத்துக்கொண்டு வந்தார்கள். வரும் வழியில் சிலர் தர்ம அடி கொடுத்தார்கள். அரண்மனைக்கு எதிரே இந்தக் கூட்டம் வந்துகொண்டிருந்தபோது யதேச்சையாக அங்கே வந்த புத்தர் பிரான், ‘அடிக்காதீர்கள். உலகில் எந்தத் தவறுமே செய்யாத யாராவது ஒருவர் இருந்தால் அவர் இவரை அடிக்கலாம்' என்றார். இதைக் கேட்டதும், யாரும் திருடனைத் தண்டிக்க விரும்பவில்லை. அவரவர்களுக்குத் தாங்கள் திருடியதும் தெரிந்தது; பிறர் திருடியதும் தெரிந்தது...''

**வீட்டுக்குள் நல்ல பாம்பு வந்துவிட்டதென்றால் அதை அடிக்க சமையல் அறையிலிருந்து புடலங்காயையா எடுப்போம்? அடுப்படியிலிருந்து விறகு கட்டையையோ, தோட்டத்திலிருந்து கடப்பாறையையோதானே எடுப்போம்**

இதைச் சொன்ன முதல்வர் உடனே இருக்கையில் அமரவில்லை. கொஞ்சம் இடைவெளி கொடுத்தார். எதிர்க் கட்சித் தலைவர் எனக்கு இதில் ஒரு பலத்த சந்தேகம் என்றார். அது என்ன என்று சபாநாயகர் கேட்க, “இது புத்தர் சொன்ன கதையா என்பதே என் சந்தேகம்'' என்றார்.

“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று இன்று காலை அவை தொடங்கும்போது நான் சொன்ன திருக்குறளை எதிர்க்கட்சித் தலைவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என்றார் சபாநாயகர்.

“நானும் மெய்ப்பொருள் பற்றித் தான் கேட்க விரும்புகிறேன்'' என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்ல, நிதி அமைச்சர், “எதிர்க் கட்சி வரிசையில் இருந்தால் மெய்ப்பொருள் புரியாது. அதற்கு ஆளும் கட்சி வரிசையில் அமர வேண்டும்'' என்று குறுக்கிட்டார். விவாதம் விபரீதமாக போய்விடக்கூடாது என்று கவலைப்பட்ட முதல்வர், தான் விளக்கம் சொல்ல அனுமதி வேண்டும் என்று கேட்டார். மெய்ப்பொருள் தவிர வேறு எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சபாநாயகர் அனுமதி வழங்கினார்.


முதல்வர் தொடர்ந்தார்: “அவைத் தலைவர் மெய்ப்பொருள் பற்றி நான் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டார். கட்டளையை ஏற்கிறேன். அதற்காக நான் மொய்ப்பொருள் பற்றியோ பொய்ப்பொருள் பற்றியோ சொல்லப் போகிறேன் என்று யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த இக்கட்டான நிலைமையை ஒரு உவமைமூலம் விளக்க விரும்புகிறேன். வீட்டுக்குள் நல்ல பாம்பு வந்துவிட்டதென்றால் அதை அடிக்க சமையல் அறையிலிருந்து புடலங்காயையா எடுப்போம்? அடுப்படியிலிருந்து விறகு கட்டையையோ, தோட்டத்திலிருந்து கடப்பாறையையோதானே எடுப்போம். அது போன்றதே ஊழல் தடுப்பு ஆணையர் நியமனமும். ஊழல்கள் எப்படிச் செய்யப்படுகின்றன என்பதை ஊழலே செய்யாத நபர் புரிந்துகொள்ளமுடியாது. எனவே, அவர் சரியாகச் செயல்பட முடியாது. அதைப் புரிந்து கொண்டுதான் ஊழல் தடுப்புத் துறைக்கேற்ற அநுபவசாலிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரது அநுபவம் அவருக்கும் மற்வர்களுக்கும் நமக்கும் பயனுடையதாக இருக்கும். இதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன்.''

அப்போது ஒரு சுயேச்சை உறுப்பினர் எழுந்தார். தேவைப்பட்டால் விஷயத்தை ஆளுங்கட்சி சார்பாக அவர் விளக்க முடியும் என்பது முதல்வருக்கும் சபாநாயகருக்கும் புரிந்திருந்தது. முதல்வர் கண் ஜாடை காட்டியதும் அது முதல்வரின் ஏற்பாடுதான் என்பதைப் புரிந்துகொண்ட சபாநாயகர், சுயேச்சை உறுப்பினருக்கு அநுமதி வழங்கினார்.

சுயேச்சை உறுப்பினர் பேசினார்: “புத்தர்பிரான் சொன்ன கதையை முதல்வர் எடுத்துச் சொன்னார். அதில் விடுபட்ட விஷயமும் ஒன்று உண்டு'' என்று சொல்லி நிறுத்த, அங்கே ஒரு சஸ்பென்ஸ் உருவானது. சில நொடிகள் நிலவிய அமைதியைக் கலைத்துவிட்டு அந்த உறுப்பினர் தொடர்ந்தார். “புத்தர் சொன்னதைக் கேட்டு விட்டு வேறு திருடர்கள் ஊரில் இருக்கிறார்களா என்று சிலர் தேடிப்போக, பிடிபட்ட திருடனைவிட பெரிய திருடன் ஒருவனும் சிறிய திருடன் ஒருவனும் அகப்பட்டார்களாம்.''


முதல்வர் சுயேச்சை உறுப்பினரின் தகவல் ஞானத்தை, கதைக்களஞ்சிய ரசனையை பாராட்டினார். “பிடிபட்ட சிறிய திருடனையும் பெரிய திருடனையும் அந்த ராஜாவோ புத்தரோ பயன்படுத்திக்கொண்டார்களா இல்லையா என்பது தெரியாது. ஆனால், புத்தர் வழி வந்த நாம் அவரைவிடச் சிறப்பாக செயல்படமுடியும். ஊழல் தடுப்பு துறைக்கு ஒரு முதன்மை ஆணையரையும் துணை ஆணையரையும் இனி நியமிக்கவேண்டியிருக்கிறது. சிறிய திருடனையும் பெரிய திருடனையும் அடையாளம் காட்ட இந்த சுயேச்சை உறுப்பினருக்கு அந்தத் தேர்வுக் குழுவில் இடம் பெற்றுத் தரவேண்டுமென்று சபாநாயகருக்கு பரிந்துரை செய்கிறேன்'' என்றார்.

பிறகு என்ன, ஒரே கைதட்டல்தான்.


Any Occaison...Or just to impress!
A Prestigious Luxury Experience Through
Gowri's Limousine Services
Here are just a few ideas...
Weddings
Graduations/ Proms
Anniversaries/ Birthdays
Airport Pickup
Social Events
Casino Trips
Night Outs
Visit us at www.gowrilimo.com
(Advanced Booking Recommended)
1551 Keele St, Toronto, On, M6N 3G1
Call Siva 416-657-1106 or 416 242 8884

## நடுநிசி நாய்கள்

# தமிழ் திரைப்படத்தின் எந்த விதியை உடைக்கிறார் கௌதம் வாசுதேவ் மேனன்?



'நடுநிசி நாய்கள்' ஒரு நவீன கால தமிழ்ப் படம். இந்தத் திரைப்படத்தின் மூலம் நான் தமிழ் சினிமாவின் அறிவிக்கப் படாத விதிகளை உடைக்க முயற்சிசெய்தி ருக்கிறேன். இது எனக்கும்கூட ஒரு புது வகையான திரைப்படம்தான். இருண்ட உண்மைகளும் மனதை பாதிக்கும் விஷ யங்களும்கொண்ட படம் என்ற முறையில், இது ஒரு பரிசோதனை. எல்லா வகையிலும் என்னுடைய முன்னைய படங்களிலிருந்து நடுநிசி நாய்கள் வேறுபட்டது. என்னுடையது என்று அறியப்பட்ட பாணியிலிருந்து விலகி, மாற்று பாணிகளை நான் எப்போதும் தேடிக் கொண்டே இருக்கிறேன், புதிய பாணிகளை எனதாக்கிக்கொள்ள முயன்றுகொண்டே இருக்கிறேன் என்பதன் வெளிப்பாடுதான் இத் திரைப்படம். எந்த ஒரு பரிசோதனை முயற்சிக்கும், போற்றுதலும் தூற்றுதலும் இருக்கும் என்பது இன்று தமிழ் சினிமாவில் நான் இருக்கும் இடத்தில் நான் நன்கு அறிந்ததே. முழு மனத் திண்மையோடு நான் நடுநிசி நாய்களின் பக்கம் நிற்கிறேன். இந்த வகைப் படங்கள் பார்த்துப் பழகாதவர்கள் 'எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என கூறமுடியாத ஒரு படம்தான் இது. இது ஓர் அநுபவம், அவ்வளவே. இறுதியில் என்னுடைய இயக்குநர் 'கார்டு' வருமுன்பு வரும் இறுதிக் காட்சி, இத்திரைப்படத்தை எடுக்க நான் ஏன் முடிவு செய்தேன் என்று உங்களுக்கு விளக்கும். உங்களுடைய ஆதரவு தமிழ் சினிமாவில் ஒரு புதிய பாணியையும் பல புதிய தலைமுறை இயக்குநர்களையும் தோற்றுவிக்க வழி வகுக்கும் என நான் நம்புகிறேன்.

நட்புடன்,
கௌதம் வாசுதேவ் மேனன்

இது, இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் செய்திஊடகங்களுக்கு அனுப்பிய கடிதம். தனது படமான 'நடுநிசி நாய்கள்' வணிக ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் வரவேற்புப் பெறாதது மட்டுமன்றி, கடும் கண்டனத்துக்கும் உள்ளானதையடுத்து அவர் இந்தக் கடிதத்தை எழுதினார்.

தமிழில் திகில் படங்கள் என்று சொல்லக்கூடிய படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களின் காலத்திலேயே வந்திருக்கின்றன. சட்டென்று நினைவுக்கு வருபவை வீணை எஸ். பாலசந்தர் இயக்கிய 'நடு இரவில்', 'பொம்மை' போன்ற படங்கள். பின்னர், வண்ணப் படங்களில் 'அதே கண்கள்', 'சிவப்பு ரோஜாக்கள்' '24 மணி நேரம்' போன்ற பல படங்கள். இவை வர்த்தக ரீதியாகவும் வெற்றி அடைந்தவை.

உளவியல்சார் திகில் படம் (சைக்கிக் த்ரில்லர்) என்று சொல்லப்பட்ட 'நடுநிசி நாய்கள்' பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம். இந்தத் தலைப்பு, சுந்தர ராமசாமியின் முதலாவது கவிதைத் தொகுப்பின் தலைப்பு. தொகுப்பில், இதே தலைப்பில் ஒரு கவிதை உள்ளது. நடுநிசியில் நாய்கள் என்ன செய்யும்? நாய்களுக்கு இரவு தனிச் சிறப்புக் கொண்டதல்ல. பகலில் செய்ய இயலாத காரியங்களுக்கானதல்ல. அவை நம்மைப் போல் எதற்காகவும் இருட்டுக்காகக் காத்திருப்பதில்லை. அவை நம்மைப் பொருட்படுத்துவதே இல்லை. சென்னை திருவல்லிக் கேணியில், என் ஜன்னலுக்கு நேரெதிரே தெருவைத் தாண்டியுள்ள மறுபுறத்து மொட்டைமாடியில் ஒரு நாய் வளர்க்கப்படுகிறது. அந்த மொட்டைமாடியில் 'அஸ்பெஸ்ரஸ்' கூரைபோட்ட ஒரு சிறு இடத்தில் அந்த நாயின் உணவுக்கான அலுமீனிய தட்டு வைக்கப்பட்டுள்ளது. அறையில் சுற்றும் மின்விசிறி சத்தம்போடுகிறது. அறை நண்பர்களின் குறட்டை ஒலி கேட்கிறது. மற்றும்படி நிசப்தம். இந்த நிசப்தத்தைக் குரைத்துக் குலைக்கிறது அந்த மொட்டை மாடி நாய். ஒட்ட வால் வெட்டப்பட்ட அந்த நாய், இடைவெளியின்றிக் குரைக்கிறது. உடல் ஓய்ந்தும் மனம் ஓயாமல் உறங்காமல் புரளும் எனக்கு நாயின் குரைப்பு மேலும் அவஸ்தையைச் சேர்க்கிறது. நாய் எப்போது தன் குரைப்பை நிறுத்தியது, எனக்கு எப்போது தூக்கம் வந்தது என்று தெரியாமல் போய்விடுகிறது. நாய் ஏன் அப்படிக் குரைக்கிறது? தன் கவிதையில் சுந்தர ராமசாமி குறிப்பிடும் "பொருளற்ற தீவிரம் பீறிடும்" தன் குரைப்பின் மூலம், அந்த நாய் அகில உலகத்துக்கும் எதைச் சொல்கிறது?

நடுநிசியில் குரைக்கும் நாய்கள் பற்றி இன்னும் பல கோணங்களில் நிறையவே பேசலாம். ஆனால், நடுநிசி நாய்கள் படம் பற்றிப் பேச அப்படி எதுவும் இல்லை. இது நவீன காலத் திரைப்படம் என்கிறார் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன். தமிழ் சினிமாவின் அறிவிக்கப்படாத விதிகளை உடைக்க முயற்சி செய்திருப்பதாகவும் அவர் கூறிக்கொள்கிறார். இருண்ட உண்மைகளும், மனதை பாதிக்கும் விஷயங்களும்கொண்ட படம் என்றும் சொல்கிறார். இதையெல்லாம் சொல்லி படத்துக்கு ஆதரவு கேட்கிறார். இவர் உடைத்துள்ள விதிகள் யாவை? படத்தில் வெளிப்படும் இருண்ட உண்மைகள் என்ன? நவீனகால படம் என்றால் என்ன? இக்கேள்விகளெல்லாம் இவரது கூற்றையும் கோரிக்கையையும் ஒட்டி எழுகின்றன.

தமிழ்த் திரைப்படங்களில் மனப் பிறழ்வு கொண்டவர்கள் ஏன் மொட்டைத் தலையர்களாகக் காட்டப்படுகிறார்கள்? ஒளிப்படக் கருவி ஏன் எப்போதும் அவர்களைக் கீழ்நோக்கிய கோணத்தில் படம்பிடித்து விசித்திரமாகக் காட்டுகிறது? இந்தப் படத்தின் நாயகன் 'ஆளவந்தான்' படத்து மொட்டைத் தலை கமல் ஹாஸனைப்போலவே தலையை வெட்டிச் சுழற்றுகிறான். மனப் பிறழ்வுக்கு ஆளான அந்த இளைஞனின் வலையில் விழும் பெண்கள் பற்றிய சித்திரங்களை எத்தனையோ மசாலாப் படங்களில் பார்த்திருக்கிறோம். இதில் வருவதுபோன்ற கொலைகளும் இதுபோன்ற உளவியல் திகில் படங்களில் நாம் பார்த்தவைதாம். கதாநாயகியைக் கொல்வதற்கு முன் நாயகன் பிடிபட்டுவிடுவதும் புதிதல்ல. நாயகனிடம் நவீன ஆயுதங்கள் இருப்பது, அவன் ஒற்றை ஆளாக இத்தனை கொலைகளைச் செய்து அவற்றை மறைப்பது, காவல் துறையினரின் கண்களில் மண்ணைத் தூவுவது ஆகிய எல்லாமே எதிர்மறைக் கதாநாயகன்கள் பல படங்களிலும் ஏற்கனவே செய்து காட்டியவை. இத்தனை தேய் படிமங்களைக் கொண்ட படம்தான் நவீனகாலப் படமா?

வணிகப் படங்களின் எந்த விதியை மேனன் உடைத்திருக்கிறார்? அந்தச் சிறுவனை அவன் தந்தை பாலியல் ரீதியாகக் கொடுமைப்படுத்துவது; அவன் வளர்ந்த பிறகு, தன்னைக் காப்பாற்றிய, தனக்கு அம்மாவின் நிலையில் இருக்கும் பெண்




**மேனனின் படத்தை 'பொருளற்ற பாவனைகளின் பீறிடல்' என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது**

ணுடன் அவன் உறவு கொள்வது ஆகிய இரண்டையும் வைத்துத்தான் மேனன் இப்படிச் சொல்லிக்கொள்கிறார் என்று தோன்றுகிறது. ஏனெனில், இவற்றைத் தவிர படத்தில் வேறு எதுவும் புதிதல்ல. இவை இரண்டையும் தமிழ் ரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை என்பதை உணர்ந்த மேனன், அதுதான் தன் படத்தின் தோல்விக்குக் காரணம் என்று நினைத்துவிட்டார். உடனே, 'இது நவீனகாலத் திரைப்படம்; இது இப்படித்தான் இருக்கும்' என்று பார்வையாளர்களுக்குப் பாடம் நடாத்த முயல்கிறார். திரையில் முன்வைக்கப்படும் ஒரு விஷயம் அதற்கான நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்தப்பட்டதென்றால் படமாக்கம் என்ற அளவில் அது வெற்றிபெறும்; தாக்கத்தையும் ஏற்படுத்தும். தந்தை தன் மகனிடம் தகாத முறையில் நடந்துகொள்வது சராசரிப் பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி தரும் விஷயம்தான். ஆனால், அந்தக் காட்சியை மேனன் எடுத்துள்ள விதம் கேலிச் சித்திரம்போல உள்ளது. வலுவான திரை மொழியுடன், படைப்புத் திறனுடன் இதை எடுத்திருந்தாலும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால், அது அந்தப் பிரச்னையின் வீரியத்தை உணர்ந்த மனநிலையிலிருந்து உருவான அதிர்ச்சியாக இருந்திருக்கும். மேனன் காட்டும் காட்சி பிரச்னையின் நிஜத்தை உணர்த்துவதற்குப் பதில், அதை மலினமான பொழுதுபோக்குச் சித்திரமாக மாற்றுகிறது.

அம்மாவின் நிலையில் இருந்து தன்னைக் காப்பாற்றும் பெண்ணுடன் அந்த இளைஞன் உறவு கொள்ளும் காட்சி பொதுவான பார்வையாளர்கள் பலருக்கு ஜீரணித்துக் கொள்ள முடியாததாக இருந்திருக்கிறது. முதலிலேயே குறிப்பிட்டதுபோல, இந்தக் காட்சியை ஆட்சேபிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இதை மேனன் முன்வைத்த முறை, சுமார் 16 வயதான அந்தச் சிறுவனுக்கு ஏற்பட்ட பிறழ்வின் ஆழத்தை உணர்த்துவதற்கு பதில், பார்வையாளர்களுக்கு அதிர்ச்சியை மட்டுமே அளிக்கும் விதத்தில் இருக்கிறது. அந்தப் பெண் உண்மையில் அவன் அம்மா இல்லை என்பதால் கறாரான பொருளில் இதை மீறல் என்று சொல்ல முடியாது. தன்மீது பாலியல் வன்முறையைப் பிரயோகிக்கும் அந்தச் சிறுவனின் வேகத்தைத் தடுக்க முடியாமல் அவளும் காமச் சுழலில் இழுத்துச் செல்லப்படுவது படைப்புக்கான நம்பகத்தன்மையுடன் உருப்பெறவில்லை. இங்கும் பரபரப்புக்கான வேட்கையும், விதியை உடைத்துவிட்டேன் என்ற மார்தட்டலுக்கான முயற்சியுமே தெரிகின்றன. வெகுஜனப் படங்களில் இதுவரை காட்டப்படாத விஷயம் என்பதற்காக இதை விதிகளை உடைக்கும் முயற்சி என்று ஒப்புக்கொள்ளலாம். ஆனால், விதியை உடைப்பது நோக்கமாக இருக்க முடியாது. தான் காட்ட விரும்பும் யதார்த்தத்தைத் துல்லியமாகத் துலங்கச் செய்வதற்கான வழிமுறையாகவே இருக்கமுடியும். அந்தகையில் எந்த உண்மையையும் இந்த விதிமீறல் உணர்த்தவில்லை என்பதில் இதுவும் மலினமான பரபரப்புக்கான காட்சியாகவே சிறுத்துப்போகிறது.

தவிர, விதி மீறல் என்றால் பாலியல் சார்ந்ததாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. இயக்குநர் பாலா தன் 'பிதாமகன்' படத்தைச் சுடுகாட்டுக் காட்சியுடன் தொடங்குகிறார். கடவுள் படங்களையோ, கோவில் கோபுரத்தையோ, சூரியோதயத்தையோ, பூஜை அறையையோ காட்டித் தொடங்கும் படங்களுக்கு மத்தியில் பாலா செய்வதும் ஒருவிதமான மீறல்தான். அதே படத்தில் நாயகனை அவன் காதலி விளக்கு

மாறால் அடிப்பாள். அவனும் தலை குனிந்து வாங்கிக்கொள்வான். சசிக்குமாரின் 'சுப்ரமணியபுரம்' படம் நட்பு, காதல் ஆகியவற்றின்மேல் ஏற்றப்பட்டிருக்கும் புனித பிம்பங்களை அநாயாசமாகக் கலைத்துப் போடுகிறது. வெற்றி மாறனின் 'ஆடுகளம்' படத்தில், தான் வளர்க்கும் சேவல்மீது கைவைத்தால் 'கொண்டேபுடுவேன்' என்று நாயகன் தன் தாயை மிரட்டுகிறான். 'தென்மேற்கு பருவக்காற்று' படத்தில் தான் சொல்லும் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் கொன்றுவிடுவேன் என்று ஒரு தாய் தன் மகனை விரட்டுகிறாள். இப்படிப் பல படங்களில் பல விஷயங்களைச் சுட்டிக் காட்டலாம்.

நடுநிசி நாய்கள் படத்தில் மேற்படி உறவுக்குப்பிறகு வரும் காட்சிகள் - முதலிரவன்று நடக்கும் கொலையும் விபத்தும், அதைத் தொடர்ந்து அவன் சென்னைக்கு வருவதும் அபத்தமாக உள்ளன. சென்னையில் ஒண்டி ஆளாக அவன் செய்யும் காரியங்களின் காட்சிப்படுத்தல்களில் துளியும் நம்பகத்தன்மை இல்லை. ஒவ்வொரு காட்சியாக எடுத்துக்கொண்டு இதை விவரிப்பது வியர்த்தமான செயலாகவே இருக்கும். காலியான ஒரு சாலையில், மர்மமான விஷயம் நடப்பதாகச் சந்தேகிக்கப்படும் ஒரு பங்களாவினுள் என்ன நடக்கிறது என்று பார்க்க நள்ளிரவில் ஒரு வழிப்போக்கர் சுவர் ஏறிக் குதிக்கிறார். மும்பையில் பக்கத்து வீட்டில் ஏதோ மர்மமாக நடக்கிறது என்று சந்தேகிக்கும் ஒரு பெண் தன்னந்தனியாகச் சுவர் ஏறிக் குதித்து உள்ளே செல்கிறார். தன்னைச் சீரழித்தவனை அவன் பின்னணியைக் கருதி ஒரு பெண் மன்னிப்பாள். ஆனால், குரூரமான வன்முறையாளனாக மாறிவிட்ட அவனுடைய பிரச்னைக்குச் சிகிச்சைதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நினைப்பாளே தவிர, அவனைப் பாதுகாப்பாக வெளியே அனுப்பவேண்டும் என்று நினைக்க மாட்டாள். இப்படிப் பல அபத்தங்கள். பார்ப்பவனை முட்டாளாக உணரச் செய்வதுதான் நவீனகாலத் திரைப்படமா?

இந்தப் படத்தை எப்படிப் பார்ப்பது என்று பார்வையாளர்களுக்குச் சொல்லிக்கொடுக்க முயலும் மேனன், படத்தை எப்படி எடுப்பது என்பதை முதலில் கற்றுக்கொள்ளவேண்டும். இவரது பிரதான ரசிகர்களான நகர்ப்புறப் பல்லரங்கப் பார்வையாளர்கள் இதே வகையிலான ஆங்கிலப் படங்களை இதே பல்லரங்கங்களில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். படைப்பூக்கம் அற்ற மனநிலையில் ஏனோ தானோவென்று எடுக்கப்படும் படத்தைக் காப்பாற்ற, சமூக அக்கறை சார்ந்த பாவனைகள் என்னும் கேடயத்தைத் தூக்கிப் பிடிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது? நாய்க் குரைப்பைப் பொருளற்ற தீவிரத்தின் பீறிடல் என்கிறது சுந்தர ராமசாமியின் கவிதை. மேனனின் படத்தைப் பொருளற்ற பாவனைகளின் பீறிடல் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

இந்தப் படத்தின் காட்சிகள் தொடர்பாகவோ, மையக்கரு தொடர்பாகவோ பண்பாட்டுப் புகார்கள், கண்டனங்கள் எதுவுமில்லை. இயக்குநருக்கு அவர் நினைப்பதை எடுக்க உரிமை உண்டு என்றே நம்பலாம். ஆனால், திரையரங்கத்துக்குப் போய், இந்தப் படத்தை பார்க்க அமர்ந்த நான் ஏமாற்றப்பட்டதாக - முட்டாளாக்கப்பட்டதாக உணர்ந்தேன். ஒருவர் தன்னைப் புத்திசாலியாக நினைத்துக்கொள்வதிலும் அப்படியாக தன்னைக் காட்டிக்கொள்வதிலும் ஒரு பிரச்னையும் இல்லை. ஆனால், அவர் ஏன் மற்றையவர்களை முட்டாள் ஆக்குகிறார்?

சிறுவர், சிறுமியர்மீதான பாலியல் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த ஏதாவது செய்யவேண்டும். ஆனால், அது இப்படியான படமாக இருந்துவிடக்கூடாது.

**- குவளைக்கண்ணன்**



# சொல்லப்படாத கதைகள்

புலம்பெயர்ந்த நாடுகளில் ஒவ்வொரு தமிழ் இல்லத்து வரவேற்பறைகளுள்ளும் தினமும் பிரவேசிக்கும் தமிழ் மசாலா சினிமாவும், 'செல்வி', 'சித்தி' போன்ற சின்னத் திரை தொடர்களும் மனதில் ஏற்படுத்திவிட்ட பாதிப்புகளைத் தாண்டி, அறிந்துகொள்வதற்கான இன்னொரு விஷயமும் இருக்கிறது என்று, தமிழ் குறும்படங்களை தமிழ் ரசிகர்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகம் செய்தது 'விம்பம்.

புலம்பெயர் சினிமா என்பது, தமிழ் நாட்டு சினிமாவின் மலிவுப் பதிப்பு என்ற எண்ணம் தவறானது என்பதை நிரூபித்து, சினிமா என்ற கலை வெளிப்பாட்டின் மீதான ஆர்வமும், வித்தியாசமான விதத்தில் அதனைச் செய்துமுடிக்க விழையும் மனோபாவமும் சேர்ந்து, புலம்பெயர் தமிழரிடையே பலரை இத் துறையில் ஊக்குவித்திருந்ததை 'விம்பத்தின்' அந்த 'குறும் திரைப்பட விழா' உணர்த்தியது. செலவாகும் பணத்தை திருப்பிப் பெறுவதென்பது சாத்தியமே இல்லை என்பதைத் தெரிந்திருந்தும் இந்த முயற்சியில் அவர்கள் தலைப்பட்டார்கள்.

கடந்த ஆண்டின் இறுதியில் விம்பத்தின் ஆறாவது திரைப்பட விழாவைப் பார்த்தபோது, அது மேலும் மகிழ்வூட்டியது. அத் திரைப்படங்களினூடே இளைய தமிழ் தலைமுறையினரின் இன்னோர் ஆக்கபூர்வமான முகம் அதில் தெரிந்தது. புலம்பெயர் தமிழ் சமூகத்தின் இளம் தலைமுறையினர் மிகுந்த படைப்பார்வத்துடன் அந்தத் துறையில் ஈடுபடுவதையும், அதில் அவர்களின் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் அங்கு திரையிடப்பட்ட படங்கள் வெளிப்படுத்தின. நவீன சினிமாவின் மொழியில் அவர்களின் பரிச்சயம் புலனானது.

புலம்பெயர் தமிழ் சமூகத்தின் சிகல்களையும், மன அவலங்களையும் அவர்கள் சொல்ல முற்படுகிறார்கள். நவீன சினிமாவின் உத்திகளுடன் அவர்கள் சமூகத்தின் பிரச்னைகளை காட்சிப்படைப்பாக்குகிறார்கள்.

லண்டனில் 'விம்பம்' அமைத்த இந்தத் தளம், தமிழ் சினிமாவின் 'மெக்கா' தமிழ்நாடுவரை இப்போது விரிவுபட்டிருக்கிறது. திருச்சி, குறுந்திரைப்பட விழாவில் விம்பம் திரையிட்ட குறும் படங்கள் திரையிடப்பட்டன. தமிழ் சினிமா வெளிப்படுத்தாத ஒரு காட்சியை மிக செம்மையாக கண்ட ஒரு வியப்பை இவை அங்கு ஏற்படுத்தியிருக்கின்றன. விம்பம் திரையிட்ட 15 திரைப்படங்கள் அங்கு திரையிடப்பட்டன

'விம்பம்' லண்டன் விழாவில் பிரதம தேர்வாளராக வந்திருந்த திரைப்பட தயாரிப்பாளர் அம்சன் குமார் இந்த புதிய அறிமுகத்தை அங்கு மேற்கொண்டார்.

**- ஜெய்**

# GLOBAL TOWERS HOTEL

**COLOMBO - SRI LANKA**

**Offers Special rates for Two & Three Bedroom Apartments**



## Our Facilities

- 24hr In-room dining
- Restaurant & Bar
- Internet Broadband with Wi Fi Facility
- Indoor Swimming Pool
- Laundry Services
- Business Centre
- Extensive rooftop Banquet
- Conference Facilities
- Wellness Spa / Jacuzzi / Steam Room
- Gift Shop
- Airport Taxis / Travel & Tour Office

| Rooms | No. of persons | Rates USD |
|---|---|---|
| Single Room | 1 | $ 95/- |
| Studio (Living & Room) | 2 | $ 127/- |
| 2 Bed room apartment | 4 | $ 165/- |
| 3 Bed room apartment | 6 | $ 241/- |

Breakfast $9/- Lunch $12/- Dinner $14/- Extra bed $12


*The above rates include all taxes*

**T: 0094 112 59 1000**

**E: nalin@globallanka.com / info@globallanka.com**

**Location: 11 Station Avenue, (Marine Drive) Colombo-06, Sri Lanka**

**UK Office: T: 020 8238 5840 / E: info@morelanduk.com**



**www.globallanka.com**

*Build Your Dream Home with Ideal Developments*



IDEAL
*Developments*

**Land Development** **Construction** **Engineering**

REGISTERED BUILDER TARION WARRANTY CORPORATION

10 Milner Business Court Suite 400 Scarborough, Ontario M1B3C6
www.idealdevelopments.com
Tel: 416.754.3500 Fax: 416.754.3537